stered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 20 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

**ஜஸ்வினா**

பழைய பத்திரிகை, கொப்பிகள், புத்தகங்கள், பற்றிகள் பிளேட்கள், பிறிண்டிங் கழிவுத்தாள்கள், காட்பொட், பிளாஸ்ரிக் பொருட்கள் தரமான விலைக்கு உங்கள் இல்லத்திற்கே வந்து எடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு:
துரைவீதி, இணுவில் தெற்கு
இணுவில்
T.P. 07786 75096 (R/602)

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 மாசி 17 ஞாயிற்றுக்கிழமை (01.03.2015) · பக்கங்கள் 20 ஓசை – 152

## விருப்பு வாக்களிப்பு முறைமை இரத்து செய்யப்படவேண்டும்

### வலியுறுத்துகிறது சுதந்திரக்கட்சி



(கொழும்பு)

...்போது நடைமுறையி... விருப்பு வாக்களிப்பு ...யை இரத்துச் செய்யவேண... சிறிலங்கா சுதந்திரக்கட்சி ...வித்துள்ளது.

...கொழும்பில் நேற்று இடம் ... ஊடகவியலாளர் மாநாட்... கலந்து கொண்டு உரை ...றிய எதிர்க்கட்சித்தலைவர் நிமால்சிறிபாலடிசில்வா இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை மற்றும் தேர்தல் முறைமை என்பவற்றில் ஒரே நேரத்தில் திருத்தம் கொண்டு வரப்பட வேண்டும்

தற்போது காணப்படும் விருப்பு வாக்கு முறைமையை இரத்து செய்துவிட்டு தொகுதி வாரியான முறைமையை கொண்டு வர வேண்டும் என்ற கோரிக்கையை சிறிலங்கா சுதந்திரக் கட்சி முன்வைத்துள்ளது.

அதேவேளை நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையில் மாற்றத்தைக் கொண்டு வரும் திட்டத்தினை சுதந்திரக் கட்சி எதிர்க்க மாட்டாதெனவும் அவர் தெரிவித்தார்.

(19) ஆம் பக்கம் பார்க்க

## இந்திய பட்ஜெட்டில் இலங்கைக்கு 500 கோடி

இந்தியாவின் 2015,16ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டத்தில், இலங்கைக்கான உதவித் திட்டங்களுக்கு 500 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்திய நிதியமைச்சர் அருண் ஜெட்லி நேற்று 2015,16ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தை இந்திய நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார்.

இதில் இந்திய வெளிவிவகார அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு 19 வீதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சின் ஊடாக, வெளிநாடுகளில் பொருளாதார, தொழில்நுட்ப ஒத்துழைப்புத் திட்டங்களை மேற்கொள்வதற்கான நிதி ஒதுக்கீடு 9107 கோடி ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த வரவுசெலவுத் திட்டத்தில், இதற்கென 7234.26 கோடி ரூபாவே ஒதுக்கீடு செய்யப்

(19) ஆம் பக்கம் பார்க்க

## ...கஸ்ட் 23இல் ...லமைப்பரிசில் பரீட்சை

...ரம் ஐந்து புலமைப்பரி... பரீட்சை எதிர்வரும் ஆகஸ்ட... 23 ஆம் திகதி நடை...வுள்ளதாக பரீட்சைகள் ...ணக்களம் தெரிவித்துள்...

...ழைமை முறைமைக்கு ...மயவே இம்முறை பரீட்... நடைபெறவுள்ளதாக ...சைகள் ஆணையாளர் ... டபிள்யூ.எம்.என்.ஜே. ...பகுமார தெரிவித்துள்...

...ம்முறை தரம் ஐந்து புல

(19) ஆம் பக்கம் பார்க்க

### – புதிய அரசுடன் இணைந்து –

# செயற்படும் ஐ.நா.

### கூட்டமைப்பிடம் எடுத்துரைப்பு

(கொழும்பு)

விசாரணை மற்றும் ஏனைய விடயங்களில் புதிய அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட ஐ.நா. விரும்புவதாக கூட்டமைப்பினருடனான சந்திப்பில் ஐ.நா. பொதுச்செயலாரின் அரசியல் விவகாரங்களுக்கான உயர்மட்ட பிரதிநிதி ஜெப்ரி பெல்ட்மன் தெரிவித்துள்ளார்.

நான்குநாள் விஜயத்தை மேற்கொண்டு இலங்கைக்கு நேற்று வருகை தந்த ஐநா பொதுச செயலரின் அரசியல் விவகாரங்களுக்கான உயர்மட்டப் பிரதிநிதி ஜெப்ரி பெல்ட்மன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களை சந்தித்துப் பேச்சு நடாத்தியவேளையே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நேற்றுக் காலை கொழும்பிலுள்ள விடுதியொன்றில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.


இந்தச் சந்திப்பின் போது, போர் குறித்த உள்நாட்டு விசாரணை மற்றும் பல்வேறு விவகாரங்கள் குறித்து கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளது.

உள்நாட்டு விசாரணைகளில் தமக்கு நம்பிக்கை இல்லை

(19) ஆம் பக்கம் பார்க்க

## மூலோபாய ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கு விருப்பம்

### சீனப்பிரதமர் தெரிவிப்பு



(பீஜிங்)

இலங்கையுடனான மூலோபாய ஒத்துழைப்பை மேலும் ஆழப்படுத்துவதற்கு விருப்பம் கொண்டுள்ளதாக சீனா தெரிவித்துள்ளது. சீனாவிற்கு இரண்டுநாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற் கொண்ட வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர நேற்று முன்தினம் சீனப் பிரதமரை சந்தித்து

(19) ஆம் பக்கம் பார்க்க

## ஈ.பி.டி.பி. மீது களங்கத்தை ஏற்படுத்த ...மிழ்க்கட்சிகளும், ஊடகங்களும் முயற்சி

### கட்சியின் செயலாளர் டக்ளஸ் தெரிவிப்பு



என்மீதும் எனது கட்சிமீதும் களங்கத்தை ஏற்படுத்தும் பொருட்டு திட்டமிட்ட வகையில் சில தமிழ்க்கட்சிகளும், ஊடகங்களும் செயற்பட்டு வருவதாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கொக்குவில் பொற்பதி பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் நேற்றையதினம் இடம்பெற்ற ஈ.பி.டி.பி.யின் நல்லூர் தொகுதி செயற்பாட்டாளர்களுடனான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

(19) ஆம் பக்கம் பார்க்க

## ...ரண்டு இளைஞர்கள் மீது ...ருடாவிலில் வாள் வெட்டு


...ாவகச்சேரி, கெருடாவில் பகுதியில் இளை...கள் இருவர் மீது இனந்தெரியாத கும்பல் ...று வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தியதில் ...வரும் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்...சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்ப... நேற்று இரவு 8.30 மணிக்கு இடம்பெற்றது. ...ம்பவத்தில் கெருடாவிலைச் சேர்ந்த செல்வ...ஜா ரவீந்திரன் (வயது-28), சிவகுமார் சோபன் (வயது -27) ஆகிய இருவருமே படுகாயமடைந்...னர். சோபன் என்பவர் கெருடாவிலில் கடை ...டத்திவருபவர் என்றும், நேற்று இரவு கடை...யைப் பூட்டிவிட்டு நண்பருடன் வீடு திரும்பிக் ...கொண்டிருக்கையில் எதிரே மறைந்திருந்த குழு...னர் இவர்கள்

(19) ஆம் பக்கம் பார்க்க



தனுஸ்டன் சுழலில் மாயாஜாலம்

# 15ஆவது வீரர்களின் போரை வெற்றி கொண்டது மகாஜன





தனுஸ்டன்



ஜெசிந்தன்



கதியோன்



சயந்தன்

(சுன்னாகம்)

தனுஸ்டனின் அபாரமான பந்து வீச்சின் மூலம் வீரர்களின் பெரும் கிரிக்கெட் போட்டியில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணி ஐந்து விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மற்றும் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணிகளுக்கிடையில் வருடா வருடம் நடாத்தப்படும் வீரர்களின் போர் இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டி நேற்று சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நிறைவடைந்தது.

முதல் இனிங்ஸிற்காக ஏழு விக்கெட்டுக்களை இழந்து 104 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இரண்டாம் நாள் ஆட்டத்தை தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணி தொடர்ந்தது. மேலும் 68 ஓட்டங்களைப் பெற்றவேளை மகாஜனக் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இறுதியில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 172 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கோபிகிருஷ்ணா 25 பந்துகளை எதிர்கொண்டு 32, கபிலன் 44 பந்துகளை எதிர்கொண்டு 25 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சுஜிதரன் நான்கு, சரத்குமார், சிறிகுமார் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

50 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி தனுஸ்டனின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளமவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இருப்பினும் கதியோன் ஒரு முனையில் நிலைத்து நின்று ஆடியபோதிலும் மறுமுனையில் விக்கெட் சரிவை ஏனைய வீரர்களால் தடுத்து நிறுத்த முடியவில்லை. நிறைவில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி இரண்டாவது இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 110 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கதியோன் 95 பந்துகளை எதிர்கொண்டு மூன்று பவுண்டரிகள், இரண்டு சிக்ஸர்கள் அடங்கலாக 62, ரசிகரன் 12 பந்துகளை எதிர்கொண்டு 15, சுஜிதரன் 20 பந்துகளை எதிர்கொண்டு 9 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் தனுஸ்டன் 27 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து, ஜெறோம் 16 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 61 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணிக்கு ஆரம்பத்தில் அதிர்ச்சி அளிக்கும் வகையில் ஸ்கந்தவரோதயகக் கல்லூரி அணியின் பந்து வீச்சு அமைந்திருந்தது. குறிப்பாக முதல் ஐந்து விக்கெட்டுக்களும் சீரான இடைவெளியில் வீழ்த்தப்பட்டவண்ணமிருந்தன. ரசிகரன் ஒரு முனையில் பொறுப்புடன் ஆடி அணியின் வெற்றியை உறுதி செய்தார். நிறைவில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணி இரண்டாவது இனிங்ஸிற்காக ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 61 ஓட்டங்களைப் பெற்று ஐந்து விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. இதில் ரசிகரன் 27 பந்துகளை எதிர்கொண்டு ஆட்டமிழ்ககாது 17, சாரங்கள் 28 பந்துகளை எதிர்கொண்டு 15, ஜெசிந்தன் 8 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சஞ்சயன் 20 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று, கதியோன் 13 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக இரு இனிங்ஸிலும் பத்து விக்கெட்டு:ககளைச் சாய்த்து அணியின் வெற்றிக்குப் பெரும் பங்காற்றிய தனுஸ்டன் தெரிவு செய்யப்பட்டார். மற்றும் சிறந்த பந்து வீச்சாளராக மகாஜனக் கல்லூரியின் தனுஸ்டன், சிறந்த துடுப்பாட்ட வீரராக ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியின் கதியோன், சிறந்த களத்தடுப்பாளராக ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியின் சயந்தன், சிறந்த சகலதுறை வீரராக மகாஜனக் கல்லூரி அணியின் ஜெசிந்தன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். ஸ்கந்தவரோதயக் கல்லூரி முதல் இனிங்ஸ் 122.

நேற்று வரை நடைபெற்ற வீரர்களின் போரில் இரு அணிகளும் தலா நான்கு வெற்றிகளைப் பதிவு செய்ததுடன் எட்டுப் போட்டிகள் சமநிலையில் நிறைவுற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(93)

## DD TV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| நேரம் | ஞாயிற்றுக்கிழமை |
|---|---|
| Am 05.00-07.00 | ஒளிமயமான வாழ்வு |
| Am 07.00-08.00 | MORNING SONG |
| Am 08.00-09.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00-10.00 | புதுயுகம் |
| Am 10.00-10.30 | தமிழ் பேசு தமிழா (R) |
| Am 10.30-11.30 | அதிர்வுகள் (R) |
| Am 11.30-12.00 | காதல் கீதங்கள் |
| Am 12.00-12.30 | Hello சிரிக்க சிரிக்க DD |
| PM 12.30-01.00 | ஆரோகணம் |
| PM 01.00-04.00 | சிறப்பு திரைப்படம் |
| PM 04.00-05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 05.00-06.00 | அதிர்வுகள் (R) |
| PM 06.00-07.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00-07.30 | IT.Com |
| PM 07.30-08.00 | மக்கள் முகம் |
| PM 08.00-08.20 | பிரதான செய்தி |
| PM 08.20-08.30 | Song |
| PM 08.30-09.00 | இதய ஊஞ்சல் |
| PM 09.00-11.30 | ஆங்கிலத்திரைப்படம் தமிழாக்கம் |
| PM 11.30-12.00 | நீங்காத நினைவுகள் |

# சேவை மறுப்பு போராட்டத்தினால் போக்குவரத்துச் சேவைகள் பாதிப்பு

கிளிநொச்சி மாவட்டத்திற்கான நிரந்தர பேருந்து நிலையம், மற்றும் அரச தனியார் போக்கு வரத்து சேவைகளை முன்னெடுப்பதற்கான நேர அட்டவணை உரிய முறையில் வழங்கப்படாமை காரணமாக கிளிநொச்சியில் நேற்றுக் காலை பணி பகிஸ்கரிப்பு இடம் பெற்றது.

நேற்று கிளிநொச்சி தனியார் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் பேருந்து உரிமையாளர்கள் சேவை மறுப்பு போராட்டத்தினை முன்னெடுத்த நிலையில், தமது சேவை இடம்பெறும் இடத்தினை பயன்படுத்த முற்பட்ட அரச பேருந்துகளை மறிக்க முற்பட்டபோது இரு தரப்பினருக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.

அண்மைக்காலமாக கிளிநொச்சி தனியார் மற்றும் இலங்கை போக்குவரத்துச் சபையினருக்கு இடையே அடிக்கடி பிரச்சினைளகள் ஏற்பட்டு கைகலப்பிலும் முடிந்திருக்கின்றன. அத்தோடு பேருந்துகள் மீது கல்வீச்சுத் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டும் வந்த நிலையில் நேற்றைய தினம் தனியார் போக்குவரத்து பிரிவினர் இந்த பிரச்சினைகளுக்கு தீர்வு கோரியும், தங்களுக்கு நிரந்தர பேருந்து நிலையம் அமைத்து வழங்குமாறும் தெரிவித்தும் பணி பகிஸ்கரிப்பில் ஈடுப்பட்டனர். ஒரு வார காலத்திற்குள் தங்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்காதுவிடின் தொடர்ந்து போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

மேற்படி இரண்டு தரப்புகளுக்கும் இடையில் ஏற்படுகின்ற முரண்பாடுகள் காரணமாக பொதுமக்கள் பெரும் சிரமங்களை சந்தித்து வருகின்றனர். நேற்றைய தினமும் அவசர அவசிய தேவை நிமிர்த்தம் பயணத்திற்கு வருகைதந்திருந்த மக்கள் பெரும் நெருக்கடிகளைச் சந்தித்துள்ளனர். சில வேளை பயணங்களின் நடுவில் இரண்டு தரப்பினர்களுக்கும் இடையில் இவ்வாறு ஏற்படுகின்ற பிணக்குக்கள் காரணமாக நடுவீதியிலும் பயணிகள் பாதிக்கப்பட்டு நீண்ட நேரமாக காத்திருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் ஏற்பட்டுள்ளது.எனவே சம்மந்தப்பட்ட தரப்புகள் இந்த பிரச்சினைக்கு விரைந்து உரிய தீர்வினைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர் (29)


## சிறு விளம்பரம்

### வீடு விற்பனைக்கு

சுதுமலை தெற்கில் உடன் குடியேறக் கூடிய நிலையில் ஒரு புதிய வீடு விற்பனைக்குண்டு பென்ஷன் பெறுவோர், நிரந்தர வருமானம் பெறுவோருக்கும், அரச வைத்திய சாலையில் பணிபுரிவோருக்கும் குறைந்த விலையில் கொடுக்கப்படும்.

**தொடர்பு-** பார்வையிட காலை 9 மணிக்கு முன்னரும் மாலை 2 மணிக்குப் பின்னரும் கே.சீவறட்ணம், சம்பந்தர் ஒழுங்கை சுதுமலை தெற்கு, சுதுமலை (R/399)

# கிராமிய மட்டத்தில் பயிற்றுவிப்பாளர்கள் உருவாக்கப்பட வேண்டும்

## வடக்கு பிரதம செயலாளர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)


வடமாகாணத்தில் ஜெய்க்கா நிறுவன அனுசரணையில் பயிற்றுவிக்கப்பட்ட பயிற்றுவிப்பாளர் (Certified Trainer) கிராமிய மட்டத்தில் பங்குகொள்ள செய்யக் கூடிய ஏனைய பயிற்றுவிப்பாளர்களை உருவாக்க முன்வரவேண்டும் என வடமாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி அலகினால் வடக்கில் 20 முன்னிலை அலுவலர்களுக்கு ஜெய்க்கா நிறுவன அனுசரணையில் பயிற்றுவிப்பவர்களுக்கான பயிற்சி நெறி இடம்பெற்றது.

முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி அலகின் பணிப்பாளனர் பொ.வாகீசன் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்ட பிரதம செயலாளர் அ.பத்திநாதன் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்க அலுவலர்கள் பயிற்சி பெறுவது முக்கியமல்ல அந்தப் பயிற்சிகள் மக்கள் முன்பயனுற பெறவேண்டும். பயிற்சி பெற்ற ஓர் அலுவலர் ஒரு திணைக்களத்தில் இருந்தால் அவருக்கு ஊடாக அந்த நிறுவனமும் அதன் கீழ் உள்ள சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் முழுப்பயனை பெறும் அந்த வகையில் வடக்கில் முன்னிலை அலுவலர்களான 20 பேரும் சமூகத்திற்கு பயனுள்ளவர்களாக மாறவேண்டும். பயிற்சி பெற்றவர்களுக்கு ஊடாக இன்னொரு சமுதாய உருவாக்கம் இடம்பெற வேண்டும். இதற்காக முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி அலகின் பணிப்பாளர் வாகீசன் தன்னை முழுமையாக அர்ப்பணித்து செயற்பட்டுள்ளார். இத்திட்டத்திற்காக ஜெய்க்கா (JICA) நிறுவனம் முழுப் பங்களிப்பினை வழங்கியுள்ளது என்றார். இந்நிகழ்வில் ஜெய்க்கா நிறுவன நிபுணர் ஜெயவிக்கிரம் அலுவலர் ரூபன் வளவாளர் திருமதி மகேஷ்வரி ஆகியோர் உட்பட 20 பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிலுநர் (TOT) கலந்து கொண்டனர். (92)



நேற்று ஆரம்பமான கச்சதீவு அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தில் கலந்து கொண்ட இந்திய, இலங்கை பக்தர்களைக் காணலாம்...

# பிரதேச அபிவிருத்திக்கான திட்டங்கள் உள்ளூராட்சி அமைச்சிடம் மகஜர் கையளிப்பு

(வலிகாமம்)

வலிகாமம் தென்மேற்கின் (மானிப்பாய்) அபிவிருத்திக்காக நிதிப்பங்களிப்பு மற்றும் வாகனம் வழங்குமாறு கோரி 13 திட்டங்களை முன்வைத்து மாகாணசபைகள் உள்ளூராட்சி அமைச்சர் கரு ஜெயசூரியாவிடம் வலி.தெற்குமேற்கு பிரதேச சபை தவிசாளர் சி.மகேந்திரனால் மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது.

நிலைத்திருக்க கூடிய அபிவிருத்திக்கான நிதி உதவி எனும் தலைப்பில் தவிசாளர் சி.மகேந்திரன் வழங்கிய மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மானிப்பாய் பிரதேச சபை மாதகல், பண்டத்தரிப்பு, மானிப்பாய், ஆனைக்கோட்டை ஆகிய பிரதேசங்களைக் கொண்ட பரந்த பூமி. கடந்த 30 வருட போரினால் இப்பிரதேசம் மீள் எழுச்சி பெற முடியாதநிலையில் உள்ளது.

எனவே 28 கிராம அலுவலர் பிரிவினைக் கொண்ட இப்பிரதேசத்தினை முன்கொண்டு செல்வதற்கு மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சர் என்ற வகையில் எமது மானிப்பாய் பிரதேச சபையின் சுகாதார பிரச்சினைகளும், அசௌகரியங்களும் எதிர்நோக்குவதாக முறையிட்டுள்ளனர்.

எனவே இதன் அறிக்கைகளை உடன் வழங்குமாறு உள்ளூராட்சி ஆணையாளர் யாழ்.மாநகர ஆணையாளரை கடிதம் மூலம் கோரியிருந்தார்.

இதேவேளை இதன் பிரதிகளை முருகானந்தா சனசமூகநிலையம், நவாலி தெற்கு கிராம அபிவிருத்தி சங்கத்தினருக்கும் அனுப்பியிருந்தார். (92)

# பதவி உயர்வும் சம்பள நிலுவையும் ஆசிரியர்களுக்கு வழங்கல்

புதிய ஆசிரிய பிரமாணக் குறிப்பின்படி ஆசிரிய சேவை உள்ளீர்த்தலுக்கான பதவி உயர்வுக் கடிதமும் அதற்குரிய சம்பள நிலுவையும் வலிகாமம் கல்வி வலய ஆசிரியர்களிற்கு வழங்கப்பட்டுள்ளன. இக்கடிதங்கள் இலங்கை ஆசிரிய சேவை தரம் I ஐச் சேர்ந்தவர்களிற்கே முதற்கட்டமாக வழங்கப்பட்டுள்ளன.

வழங்கப்பட்டுள்ள பதவி உயர்வுக் கடிதங்கள் தற்காலிகமானவை எனவும் முறையான உள்ளீர்ப்புக் கடிதம் வடமாகாணக் கல்வியமைச்சின் செயலாளரினால் வழங்கப்படும் எனவும் தற்காலிக கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி பதவி உயர்வுக்கான சம்பள நிலுவைகள் யாவும் 01.01.2011 இலிருந்தே வழங்கப்படும் எனவும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.(06)

# காரைநகரில் இராணுவமுகாமை அகற்றி காணியை பிரதேச சபையிடம் ஒப்படைக்க வேண்டும்

காரைநகரில் 1000 ஏக்கர் காணியில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாம் அகற்றப்பட்டு கட்டடங்கள் காரைநகர் பிரதேச சபையிடம் ஒப்படைக்கப்படவேண்டும்.

காரைநகர் பிரதேச சபைக் கூட்டம் நேற்று முன்தினம் தவிசாளர் வே.ஆனைமுகன் தலைமையில் நடைபெற்றபோது ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் கணேசபிள்ளை பாலச்சந்திரனால் முன்வைக்கப்பட்டுள்ள இத்தீர்மானம் சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இவ்விடயம் தொடர்பாக பிரதேச சபை உறுப்பினர் பாலச்சந்திரன் தெரிவிக்கையில்,

காரைநகர் ஈழத்துச்சிதம்பர புனித தீர்த்தக்கரை, கசூரினா உல்லாசப்பயணிகள் மையம், சாம்பலோடை இந்து மயனம் மற்றும் காரைநகர் மக்களுக்கான ஆலங்கன்றடி நன்னீர்க் கிணறு என்பன அமைந்துள்ள சுற்றாடலில் 1000 ஏக்கர் காணியில் இந்த இராணுவமுகாம் அமைந்துள்ளது.

காரைநகர் மக்களில் பெரும்பான்மையோரின் குடி தண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்து வந்த ஆலங்கன்றடி நன்னீர் கிணற்றிலிருந்து 15 நிமிடங்களுக்கு ஒரு தடவை ப்வுசர் மூலம் இராணவத் தேவைகளுக்காக குடி தண்ணீர் பெறப்படுகிறது. இதனால் ஊர்மக்களின் குடிதண்ணீர்த் தேவை யைப்பூர்த்தி செய்வதற்காக காரை நகர் அபிவிருத்திச்சபையும் (விளான் பிரதேசத்திலிருந்து)காரைநகர் பிரதேச சபையும் வெளியூர் களில் இருந்து பவுசர் மூலம் குடி தண்ணீரைக் கொண்டு வந்து பொதுமக்களுக்கு விநியோகித்து வருகின்றன.

தற்போதய சூழ்நிலையில் இக்கட்டடங்களில் இருந்து இராணும் வெளியேற வேண்டும் என்றும் கட்டடங்கள் பிரதேசசபையிடம் ஒப்படைக்கப்படவேண்டும் என்றும் இவ்விடயம் தொடர்பாக இன்று ஞாயிற்றுக்கிழமை மீள்குடியேற்ற மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனை கொழும்பு அலுவலகத்தில் சந்தித்து மேற்படி தீர்மானம் அடக்கிய மகஜர் கையளிக்கப்படவுள்ளதாகவும் பிரதேச சபை உறுப்பினர் பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார். (10)

# இது கேள்வி கேட்கும் நேரம்



திருமு

1. மீனவர் பிரச்சினை தொடர்பாக தமிழக அரசுடனும் தமிழக மீனவர்களுடனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஈ.பி.டி.பி.யும் ஏன் பேசக்கூடாது? இதுவரையில் ஏன் இந்தக் கட்சிகள் பேச்சுகளை நடத்தவில்லை?

2. இந்தத் தடவையாவது ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி தன்னுடைய சின்னத்தில் போட்டியிடாதா? கால மாற்றத்துக்கு அமையப் புதிய நிலைப்பாட்டை எடுக்காதா? புதிய மாற்று அணி ஒன்றினை உருவாக்காதா?

3. ஐ.நா.வையும் அமெரிக்காவையும் இந்தியாவையும் பிரிட்டன் போன்ற மேற்கு நாடுகளையும் காட்டி இன்னும் எத்தனை காலத்துக்குத்தான் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அரசியல் நடத்தப்போகிறது? இதற்கு கூட்டமைப்பின் மூத்த தலைவர்கள் பதில் சொல்ல மாட்டார்கள். ஆனால், இதைப்பற்றி கூட்டமைப்பின் இளைய தலைமுறை ஆதரவாளர்களும் உறுப்பினர்களும் ஏன் சிந்திக்கவில்லை? அல்லது அவர்களின் பதில் என்ன?

4. சர்வதேச சமூகத்தையும் இந்தியாவையும் தமிழர்கள் நம்புகின்ற அளவுக்கு தமிழர்களை அவர்கள் நம்புகிறார்களா? தமிழர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று அவர்கள் எப்பொழுதாவது சிந்தித்திருக்கிறார்களா? அப்படிச் சிந்தித்திருந்தால் அல்லது அப்படி முயற்சித்திருந்தால் அவைபற்றி யாராவது விவரம் சொல்ல முடியுமா? இதற்கு பதில் சொல்ல முடியவில்லை என்றால், இன்னும் ஏன் இந்தியாவும் மேற்குலகமும் ஐ.நா.வும் கொழுக்கட்டை தரும் என்று நம்ப வேணும்?

5. ஐ.நா.வின் பிரதிநிதிகளும் அமெரிக்கா, இந்தியா, பிரிட்டன், யப்பான், நோர்வே போன்ற சக்தி மிக்க நாடுகளின் பிரதிநிதிகளும் யாழ்ப்பாணம் வரை வந்து பல தடவைகள் தமிழ்த் தலைவர்களையும் ஆயர்மாரையும் சிவில் சமூகத்தின் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசியிருக்கிறார்கள். தமிழ் மக்களின் பிரச்சினைகளைப் பற்றியெல்லாம் அக்குவேறு ஆணி வேறாகக் கேட்டறிந்திருக்கிறார்கள். இவர்களும் மயிரிழைகளாகப் பிரித்துப் பிரித்துத் தமிழர் பிரச்சினைகளை எடுத்து விளக்கியிருக்கிறார்கள். இதுக்குப் பிறகும் ஐ. நா பிரேரணையை ஏன் ஒத்திவைப்பதற்கு இந்த உலகம் முன்வந்தது? இலங்கை அரசாங்கத்தின் பேச்சைக் கேட்கிற அளவுக்கு தமிழர்களின் பேச்செல்லாம் பயனில்லாமல் போய் விட்டதா?

6. ஈ.பி.டி.பி.யின் அடுத்த கட்ட நகர்வுகள் என்ன? தீர்மானங்கள் என்ன? புதிய களத்தில் அது என்ன மாதிரியான காய்களை நகர்த்தப்போகிறது?

7. வெளியாருக்காக எத்தனை காலந்தான் தமிழர்கள் காத்திருக்கப் போகிறார்கள்? இந்தக் காத்திருப்பு எப்பொழுது சலிப்புத் தட்டும்? அப்பொழுது அதுவரையிலும் மக்களை ஏமாற்றிய எத்தனை தலைகள் தட்டப்படும்?

8. "மலர்ந்தது தமிழர் அரசு" – என்றால் அந்த அரசு இப்ப என்ன செய்து கொண்டிருக்கிறது?

9. இலங்கை வருகிறது ஐ.நா. குழு – ஓகோ, மீண்டும் தமிழர்களின் வாயில் வாழைப்பழத்தோலை வைக்கப் போகிறார்களா? இதற்குத் தோதாக இந்தப் பத்திரிகை வாழைப்பழத்தோலை உரிச்சுக் கொடுக்கிறதா?

மிகப்பெரிய உண்மை இது, பலமே வாழ்வு பலவீனமே மரணம். - விவேகானந்தர்.

தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## நவீனத்திற்கு நாம் தரும் விலை!

குடிக்கும் நீரில் நஞ்சு, உண்ணும் உணவில் நஞ்சு, சுவாசிக்கும் காற்றில் நஞ்சு என்றாகிவிட்டது நம் சூழல். நாசூக்கான அவசரமான நவீன வாழ்க்கை முறைக்கு நாம் தந்து கொண்டிருக்கும் விலை இந்தச் சுற்றுச்சூழல் பாதிப்பு.

போத்தல்களில் அடைக்கப்பட்ட தண்ணீரும், கையை வாயைக் கழுவாமலே நின்ற நிலையில் கடித்துவிட்டு ஓடக்கூடிய உடன் தயாரிப்பு உணவு வகைகளுமே கதியாகி விட்டது.

இன்னும் இன்னும் என்று துரித வளர்ச்சியை நோக்கிப் பாய்ந்து கொண்டிருக்கும் மனிதர்களுக்கு தானியங்கள் காய்கறிகளின் சாதாரண விளைச்சல் போதவில்லை. மரபணுவை மாற்றி விளைச்சலைப் பெருக்குகிறோம்.

விளையும் பயிர்களிலேயே நஞ்சு கலந்துவிடுகிறது. இதனால், உண்ணும் உணவே விஷமாகிவிட்டது. விளைச்சலில் விஷம் கலப்பதை நிறுத்த முடியவில்லை. இரசாயனத்தில் விளைந்த காய்கறிகள் – பழங்கள் – தானியங்களையே உண்ண வேண்டியிருக்கிறது.

விதம் விதமான துரித உணவு வகைகள் கண்டுபிடிக்கப்பட்டு தயாரிக்கப்பட்டு கடைகளில் குவிந்தவண்ணம் உள்ளன.

சமையல் இல்லாமல் அதாவது சமையலறைக்குச் செல்லாமல் பல மாதங்களுக்கு முன்பே சமைக்கப்பட்டதும் கெடாமல் இருக்க இரசாயனங்களும் சேர்க்கப்பட்ட பொதி உணவுகள் இவை. இவற்றிலும் உரம், கிருமிநாசினிகளின் விஷமும் அதற்கு மேல் வேறு ஆபத்துகளும் உண்டு.

ஒரு மனிதன் நலமுடன் வாழ சராசரியாக 2,200 கலோரி உணவு போதும். இந்தக் கலோரி 300 கிராம் காபோவைதரேற், 6 கிராம் உப்பு, 20 கிராம் சாதாரண கொழுப்பு மற்றும் 2 கிராம் கரையாத கொழுப்பு ஆகியவற்றில் கிடைத்துவிடும்.

தானியங்கள், பருப்பு வகைகளில் புரதச்சத்து உண்டு. காய்கறி – பழங்களில் விற்றமின் சத்துக்களும் தேவையான நார்ச்சத்தும் கிட்டும்.

ஃபாஸ்ட் ஃபுட் உணவுகளில் புரதம், நார்ச்சத்து, விற்றமின் எதுவுமே இல்லை என்பதுடன், அனுமதிக்கப்படும் அளவுக்கு மேல் உப்பும், கரையாத கொழுப்பும் உள்ளதால், உடலை மருந்துக்கு அடிமையாக்கி விடுகிறது.

ஜாம், ஜெலி, சீஸ், ஊறுகாய் போன்ற துரித உணவுகளில் பென்சோட் என்ற நச்சு சேர்க்கப்படுகிறது. பூச்சி மருந்துகளிலும் பென்சோட் உண்டு. அடைக்கப்பட்டு விற்கப்படும் இறைச்சிகளில் நைதரேற் சேர்க்கப்படுகிறது.

பாண், பணிஸ், கேக் போன்றவற்றில் சோடியம் பென்சோட் சேர்க்கப்படுகிறது. வெள்ளை நிறம் பெற சல்ஃபைற்றும், சிவப்பு – மஞ்சள் – பிங்க் நிறம் பெற அலுமினியம் குரோமைற் என்ற விஷப்பொருளும் சேர்க்கப்படுகிறது.

உருளைக்கிழங்கு சிப்ஸ்களில் புட்டிலேற்றட் ஹைட்ரொக்சினேற் சேர்க்கப்படுகிறது. சோடியம் பைகாபனேற் என்ற சமையல் சோடா சேர்க்கப்படாத பொருளே இல்லை. இதுவும் அளவுக்கு அதிகமானால் நோய்தான்.

இது அவசர உலகம். நல்லுணவை நல்ல விதமாகச் சமைக்கக்கூடிய வயதானவர்களை வீட்டில் வைத்திருக்கவே பஞ்சிப்படுகிறோம். ஜங்க் ஃபுட் – அதாவது கெட்ட உணவை விலை கொடுத்து வாங்கி நோயுறுகிறோம்.

நமது சுலபத்திற்கு கடைகளில் கிடைக்கும் துரித உணவைவிட நமது சமையலறை உணவுதான் நல்லது. நாம் புரிந்துகொண்டு மாற்றிக்கொள்ள வேண்டிய எத்தனையோ விஷயங்களில் இதுவும் ஒன்று.

- ஆசிரியர்

# இனநல்லிணக்கத்தை வலுப்படுத்த தென்னாபிரிக்க பொறிமுறை

## தொழில் நுட்ப உதவிபெற முயற்சி

யுத்தத்தின் பின்னரான இலங்கையில் பொறுப்புக் கூறும் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதில் தென ஆபிரிக்காவின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவிலிருந்து (TRC) விளக்கம் பெற்றுக்கொள்வதற்கான முன்னெடுப்புக்களை வெளிவிவகார அமைச்சு மேற்கொண்டுள்ளது.

வெள்ளையர்களின் இன ஒதுக்கல் ஆட்சிக் காலத்தின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறலகள் பற்றி உண்மையை கண்டறிவதனால் நாட்டில் பகைமை மறைந்து நல்லிணக்கம் உருவாக உதவுவதற்கென தென் ஆபிரிக்கா 1995இல் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நிறுவியது.

இலங்கை தென் ஆபிரிக்கா கருத்தாடல் களததுக்கு சமாந்தரமாக தென் ஆபிரிக்க பிரதி வெளிவிவகார மற்றும் ஒத்துழைப்பு பிரதி அமைச்சர் நெமெய்ன்டியா, பிரதி வெளிவிவகார அமைச்சர் அஜித் பி.பெரேராவுடன் கடந்த வியாழனன்று பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இந்தக் கருத்தாடலின்போது இன ஒதுக்கல் முடிவுக்கு வந்த பின்னர் தென் ஆபிரிக்காவின் அனுபவத்திலிருந்து விளக்கம் பெறும் சாத்தியம் பற்றி பேசப்பட்டது.

பொறுப்புக் கூறுதல் பிரச்சினை மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் மீறப்பட்டமை ஆகியவை தொடர்பான குற்றச்சாட்டுகளை கையாள்வதற்கான ஒரு பொறிமுறையை ஆக்கிக்கொள்ளும் செயல்முறை அரசாங்கத்திடம் உள்ளதென பிரதி அமைச்சர் கூறியுள்ளதுடன், இவ்வாறானதொரு பொறிமுறை சர்வதேச சமூகத்துக்கும் ஏற்புடையதாகவும் நம்பகமாகவும் அமையுமெனவும் அவர் கூறியதாக தெரிவிக்கப்படுகிறது.

முன்னைய ராஜபக்ஷ அரசாங்கமும் இது தொடர்பாக முயற்சிகளைத் தொடங்கியது. இந்த விடயம் தொடர்பாக தென் ஆபிரிக்கா அரசாங்கம் விசேட தூதுவராக பிரதி ஜனாதிபதி சிறில் ரமபோஷவை நியமித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## போலி ஆவணங்களுடன் பங்களாதேஷ் பிரஜை கைது

(கொழும்பு)

போலி ஆவணங்களை சமர்ப்பித்து பெல்ஜியத்திற்குச் செல்ல முயற்சித்ததாகக் கூறப்படும் பங்களாதேஷ் பிரஜை ஒருவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

ஸ்ரீலங்கன் விமான சேவைகள் நிறுவனத்திற்குச் சொந்தமான யு.எல்.581 என்ற விமானத்தின் ஊடாக ரோம்மிற்குச் சென்று அங்கிருந்து பெல்ஜியத்திற்குச் செல்ல திட்டமிட்டிருந்ததாக விசாரணை மூலம் தெரியவந்துள்ளது.

குறித்த நபரிடம் இருந்து போலியான பயண ஆவணங்கள் சிலவற்றை புலனாய்வுத் துறையினர் கைப்பற்றியுள்ளனர்.

## வெலேசுதா வெளியிடும் இரகசியத் தகவல்கள் அதிகம்

### அதில் இதுவும் ஒன்று

அமைச்சர்கள் மற்றும் பிரபுக்களுக்காக பிரத்தியேக விபசார விடுதியொன்று இயங்கி வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகறது.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துருகிரிய பிரதேசத்தில் இந்த விபசார விடுதி இயங்கி வநததாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெலே சுதா என்ற போதைப் பொருள் வர்த்தகர் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் இந்த விபசார விடுதி பற்றிய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த விபசார விடுதி தொடர்பில் கம்பஹா மாவட்ட பிரதிநிதித்துவம் செய்த பிரதி அமைச்சர் ஒருவரிடம் பொலிஸார் விசாரணை நடத்தவுள்ளனர். குறித்த பிரதி அமைச்சரிடம் நேற்று விசாரணை நடத்தப்படடுள்ளது. இந்த விபசார விடுதிகது அடிக்கடி சென்ற முன்னாள் அமைச்சர்கள் பிரதி அமைச்சர்கள் தொடர்பிலும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## இரும்புக்கம்பியால் சூடு பெற்றோர் மீது விசாரணை

### அம்பாறையில் பரபரப்பு

நெருப்பில் பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பியால் பாடசாலை செல்லும் இரு சிறுவர்களை அவர்களின் பெற்றோரே, துடிக்கத் துடிக்கச் சூடுவைக்கப்பட்ட சம்பவம் அம்பாறையில் இடம்பெற்றுள்ளது. மனிதஅபிவிருத்திதான உதவி இணைப்பாளர் எம்.ஜ.றியால் மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் யு.எல். அசாருதீன் ஆகியோர் சூடுபட்ட சிறுவர்களை நேற்று சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் சட்ட வைத்திய அறிக்கைக்காக அனுமதித்துள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசத்திலுள்ள ஒரு தமிழ்ப் பிரதேச செயலகப் பிரிவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம், நடந்து 04 நாட்களுக்குப் பிறகே, பாடசாலை ஆசிரியரொருவர் ஊடாக வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

இதுதொடர்பில் காரைதீவிலுள்ள மனித உரிமைகள் மற்றும் சிறுவர் மகளிர் உரிமைகளுக்காக இயங்கிவரும் மனித அபிவிருத்தித் தாபனத்திற்கு தகவல் கிடைக்கப் பெற்றதும் அதன் கிழக்கு மாகாணப் பணிப்பாளர் பொன்னையா ஸ்ரீகாந்ஸ்தலத்திற்கு விரைந்தார். புதனன்று காலை அவர் குறிப்பிட்ட பாடசாலைக்கு சென்று பிரஸ்தாப சிறுவர்களைப் பார்வையிட்டார். பின்பு நேற்று வியாழனன்றும் வீடுகளுக்குச் சென்றார். அவர் அங்கு கண்டகாட்சி அவரையே மெய்யுருக வைத்தது.

பாடசாலையில் தரம் 1 பயிலும் 07 வயதுடைய சிறுவனது வலது கரத்திலும் தரம் 4 பயிலும் 09 வயதுடைய சிறுமியினது இருகரங்களிலும் சூட்டுக்காயங்களிருந்தன. அச்சூட்டை வைத்தவர்கள் அவர்களது பெற்றோர்களே. அதுவும் அவர்களை 10 மாதம் பெற்றெடுத்த தாய்மார்களே இவ்விதம் கதறக்கதற சூடுவைத்தவர்கள். அவர்களை விசாரணை செய்தபோது துடிப்புத்தனம் மற்றும் அவர்களது நடவடிக்கையுமே இவ்வாறு சூடுபோடக் காரணமென அவர்கள் தெரிவித்துள்ளனர்.

புதனன்று முதன்முதலில் பாடசாலையில் பார்த்ததும் இவர்களை வைத்தியசாலையில் சேர்க்க வேண்டிய அவசியமிருந்தது. எனினும் முறைப்படி அணுகவேண்டும் என்பதற்காக உடனடியாக சிறுவர் துஷபிரயோகத்தை முறையிடும் 1929 தொலைபேசி இலக்கத்திற்கு தெரியப்படுத்தினார். பின்னர் குறிப்பிட்ட பிரதேச செயலாளருக்கு அறிவித்தார். அங்கு உடனடியாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென அவர் கூறுகிறார்.

## வங்கி முகாமையாளர் சடலமாக மீட்பு

காலி பஷார் வீதியிலுள்ள இலங்கை வங்கிக் கிளையின் சிரேஷ் முகாமையாளர் பி.டப்ளியு. ஆரியசிறி (வயது 56), என்பவரின் சடலம் ஹிக்கடுவை கடற்கரையிலிருந்து மீட்கப்பட்டுள்ளதாக நாரிகம பொலிஸார் தெரிவித்தனர்.

ஆரியசிறி என்பவர் நேற்றிரவு 11 மணியிலிருந்து காணாமற்போயிருந்ததாக அவரது மனைவி, பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார். அவர் அணிந்திருந்த சேர்ட் மற்றும் சாரத்தின் ஊடாகவே அவரது உறவினர்கள் சடலத்தை அடையாளம் காட்டினர்.

அவருடைய மரணம் சந்தேகமானது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

# இனப்பிரச்சினையை வளர்ப்பதே தமிழ்த் தலைமையின் அரசியல்

**இறுதி யுத்தத்தின்போது மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களை இனங்காட்டுவதும் அவர்களுக்கான தண்டனையைச் சிபார்சு செய்வதும் விசாரணை அறிக்கையின் பிரதான அம்சமாக இருக்கும். இவை தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்கான தீர்வல்ல என்ற கருத்தை மறுத்துரைப்பவர்கள் விசாரணை அறிக்கை மூலம் தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கும் எனக் கூறுகின்றனர். ஐக்கிய நாடுகள் சபை தண்டனையைச் சிபார்சு செய்தாலும் இலங்கை அரசாங்கம் தான் அதை நிறைவேற்ற வேண்டும் என்பதை இவர்கள் கவனத்தில் கொள்ளவில்லை. மேலும் தமிழ் மக்களுக்கு நீதி கிடைத்தால் மாத்திரம் போதாது. நிம்மதியும் கிடைக்கவேண்டும். இனப்பிரச்சினையின் தீர்விலேயே உண்மையான நிம்மதி கிடைக்கும்.**

## சங்கர சிவன்

யாழ்ப்பாணத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை கண்டனப் பேரணியொன்று நடைபெற்றது. ஐக்கிய நாடுகள் சபையின் விசாரணை அறிக்கையை மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிப்பது பிற்போடப்பட்டதை ஆட்சேபித்தே இந்தப் பேரணி. ஏற்கனவே தீர்மானித்தபடி மார்ச் மாதத்திலேயே விசாரணை அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் உள்ளக விசாரணை வேண்டாம் என்றும் பேரணியினர் வலியுறுத்தினார்கள். இக்கோரிக்கைகள் ஐக்கிய நாடுகள் சபையினாலும் மனித உரிமைகள் பேரவையினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு விசாரணை அறிக்கை மார்ச் மாதத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று பேரணியை ஏற்பாடு செய்தவர்கள் உண்மையாகவே நம்புகின்றார்களா? சமகால சர்வதேச ஒழுங்கு பற்றிய புரிகை உள்ளவர்களிடம் இந்த நம்பிக்கை தோன்றாது.

கடந்த சில வருடங்களாக ஐக்கிய நாடுகள் சபையும் மனித உரிமைகள் பேரவையும் மேற்கொண்ட நடவடிக்கைகள் தமிழ் மக்களின் பிரச்சினைகள் மற்றும் துயரங்கள் மீது கொண்ட அக்கறையின் வெளிப்பாடுகளல்ல. தங்கள் வழிக்கு வராத மகிந்த ராஜபக்ஷவை வழிக்குக் கொண்டு வருவது அல்லது சாதகமான ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவது என்ற அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகளின் நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாகவே மேற்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஐக்கிய நாடுகள் சபையின் விசாரணையும் அவ்வகையானதே. போர்க் குற்றங்களையும் மனித உரிமை மீறல்களையும் மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்துக்கு எதிராகப் பயன்படுத்தக் கூடிய சிறந்த ஆயுதங்களாக மேற்கத்திய நாடுகள் கருதின. தமிழ் மக்களுக்கு நீதி வழங்குவதற்கான நடவடிக்கைகளாகத் தமிழ்த் தலைவர்கள் இவற்றைச் சித்தரித்தனர். தமிழ் மக்களின் பிரதான பிரச்சினையான இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொறுப்பைத் தட்டிக்கழிக்க இது அவர்களுக்குக் கைகொடுத்தது.

மேற்கத்திய நாடுகளுக்குச் சார்பான ஆட்சிமாற்றம் இப் போது ஏற்பட்டிருப்பதால் அந்நாடுகளின் அணுகுமுறை முற்றாக மாறுகின்றது. இலங்கை அரசாங்கத்தைச் சங்கடத்தில் ஆழ்த்தக்கூடிய எந்த நடவடிக்கையையும் ஐரோப்பிய நாடுகளோ அமெரிக்காவோ எடுக்கப்போவதில்லை. இந்த நாடுகளை மீறி ஐக்கிய நாடுகள் சபையோ மனித உரிமைகள் பேரவையோ செயற்படப்போவதுமில்லை. இதுதான் இன்றைய யதார்த்தம். தமிழ்த் தரப்பினர் இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கின்ற விசாரணை அறிக்கை தமிழ் மக்களுடைய பிரச்சினைகளின் தீர்வுக்கு உதவுமெனக் கூறமுடியாது. இறுதி யுத்தத்தின்போது மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களை இனங்காட்டுவதும் அவர்களுக்கான தண்டனையைச் சிபார்சு செய்வதும் விசாரணை அறிக்கையின் பிரதான அம்சமாக இருக்கும். இவை தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்கான தீர்வல்ல என்ற கருத்தை மறுத்துரைப்பவர்கள் விசாரணை அறிக்கை மூலம் தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கும் எனக் கூறுகின்றனர். தமிழ் மக்களுக்கு எதிரான குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் தண்டனைக்கு உள்ளாகுவர் என்பதே இதன் அர்த்தம். ஐக்கிய நாடுகள் சபை தண்டனையைச் சிபார்சு செய்தாலும் இலங்கை அரசாங்கம் தான் அதை நிறைவேற்ற வேண்டும் என்பதை இவர்கள் கவனத்தில் கொள்ளவில்லை. மேலும் தமிழ் மக்களுக்கு நீதி கிடைத்தால் மாத்திரம் போதாது. நிம்மதியும் கிடைக்கவேண்டும். இனப்பிரச்சினையின் தீர்விலேயே உண்மையான நிம்மதி கிடைக்கும்.




பேரணிகளும் ஆர்ப்பாட்டங்களும் வெளிப்படுத்தப்பட்ட நோக்கத்துக்காக நடப்பனவாகவும் இருக்கலாம். மறைவான வேற நோக்கத்திற்காகவும் இருக்கலாம். வெளிப்படுத்தப்பட்ட நோக்கத்தை அடைவது எவ்விதத்திலும் சாத்தியமில்லை என்பதைத் தெரிந்து கொண்டு நடத்தும் பேரணி மறைவான நோக்கத்தையே பிரதானமாகக் கொண்டிருக்கும். தமிழர் தரப்பில் சில காலமாக இடம்பெற்றுவரும் பேரணிகளில் இனப்பிரச்சினையிலிருந்து மக்களைத் திசை திருப்புவதும் தேர்தலுக்கான முன் தயாரிப்பும் மறைவான நோக்கங்களாக் இருப்பதை அவதானிக்க முடிகின்றது. செவ்வாய்க்கிழமை நடந்த பேரணி இதற்கு விதிவிலக்கல்ல.

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தமிழ் மக்களுக்கு முக்கியமானது. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் பட்சத்தில் தமிழ் மக்கள் முகங்கொடுக்கும் மற்றைய பிரச்சினைகள் நிலைக்கப்போவதில்லை. ஆனால், தலைவர்கள் அரசியல் தீர்வை முக்கியமாகக் கருதவில்லை. அரசியல் தீர்வு பற்றி அவர்கள் பேசுவதுமில்லை. அரசியல் தீர்வைக் கெட்டித்தனமாகத் தவிர்த்து வருகின்றார்கள். தேர்தலில் தமிழ் மக்களின் அங்கீகாரத்தைப் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்கள், கூட்டமைப்பின் செயற்பாடுகளில் அதிருப்தி தெரிவிக்கும் கட்சிக்காரர்கள், தமிழ் மக்கள் தேசிய முன்னணியினர், கடைசியாக அரங்குக்கு வந்திருக்கும் பல்கலைக்கழக சமூகம் என எல்லோரும் அரசியல் சார்ந்த தங்கள் நாளாந்த நடவடிக்கைகளில் அரசியல் தீர்வைத் தவிர்த்து வருகின்றார்கள்.

அரசியல் தீர்வைத் தவிர்ப்பவர்களை இரண்டு வகையாகப் பார்க்கலாம். தனிநாடு என்ற கனவில் மிதந்து கொண்டிருப்பதால் அரசியல் தீர்வைத் தவிர்ப்பவர்கள் ஒரு வகையினர். இனப் பிரச்சினை தீராமலிருப்பது தான் தங்கள் அரசியல் வாழ்க்கைக்கு உத்தரவாதம் எனக் கருதுபவர்கள் இன்னொரு வகையினர். தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குள் இரண்டு வகையினரும் உள்ளனர்.

தமிழ்த் தலைவர்கள் என்ன காரணங்களை முன்னிட்டு அரசியல் தீர்வைத் தவிர்த்தாலும் சிங்கள மக்களின் பார்வையில் அது ஒரே அபிப்பிராயத்தையே தோற்றுவிக்கும். பிரிவினை நோக்கத்துடன் அரசியல் தீர்வைத் தவிர்க்கின்றார்கள் என்றுதான் சிங்கள மக்கள் நினைப்பார்கள். இந்த நிலை பேரினவாதத்தின் வளர்ச்சிக்கு கைகொடுப்பதாக அமையும். நாட்டைப் பிரிப்பதற்கான முயற்சி தமிழர்களால் மேற்கொள்ளப்படுகின்றது. என்ற பிரசாரம் பேரினவாதத்தின் வளர்ச்சிக்கு அடிநாதமாக இருக்கின்றது. நடைமுறைச் சாத்தியமான தீர்வுத்திட்டமொன்றைத் தமிழ்த் தலைமை முன்வைத்து அதன் அடிப்படையில் அரசியல் நகர்வுகளை மேற்கொள்ளும் வரை தமிழ்ப் பிரிவினைவாதம் பற்றிப் பேசிப்பேசியே பேரினவாதம் வளர்ந்துகொண்டிருக்கும்.

இந்த நிலைமைக்கான பிரதான பொறுப்பைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்கள் ஏற்க வேண்டும். இவர்களைத் தான் தமிழ் மக்கள் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்திருக்கின்றார்கள். தமிழ் மக்களின் பிரதிநிதிகள் தாங்களே என்று இவர்கள் தான் உரிமை கோருகின்றார்கள். மற்றவர்கள் வெளியில் நின்று எதைக் கூறினாலும் நாடாளுமன்ற உறுப்பினர்களான இவர்கள் தான் அரசியல் தீர்வுக்கான முயற்சியை முன்னெடுக்கக் கடமைப்பட்டவர்கள் தீர்வைத்தவிர்ப்பதே தங்களுடைய நிரந்தரமான கொள்கை என்ற விதத்தில் இவர்கள் செயற்படுகின்றார்கள்.

முழுமையான அரசியல் தீர்வை நோக்கிய நகர்வை ஆரம்பிப்பதற்குரிய பல சந்தர்ப்பங்கள் கடந்த காலங்களில் கிடைத்தன. எல்லாச் சந்தர்ப்பங்களையும் தட்டிக் கழித்துத் தீர்வுக்குக் குழிபறித்தார்கள். பல சந்தர்ப்பங்களை இழந்து விட்டோம் என்று சம்பந்தன் அடிக்கடி கூறுகின்றார். வாய்ப்பேச்சு மாத்திரமேயொழியத் தொடர் நடவடிக்கை இல்லை. மீண்டும் முருங்கை மரத்தில் ஏறும் கதை. சேனாதிராசா விக்னேஸ்வரன் போன்றவர்கள் இவர்களே உருவாக்கிய அரசாங்கத்துக்கு எதிராக இப்போது ஆரம்பித்திருக்கும் ஆவேச அரசியல், தீர்வைத் தவிர்ப்பதற்கான ஒரு வியூகமேயொழிய வேறொன்றுமில்லை.

இன்றைய அரசாங்கத்தை பதவிக்குக் கொண்டு வருவதில் முக்கிய பங்காளியாகக் கூட்டமைப்பு செயற்பட்டது. நுறுநாள் வேலைத்திட்டத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு உள்ள டக்கப்படாததற்குச் சம்மதமும் அளித்திருந்தார்கள். தேசிய அரசாங்கம் அமைந்த பின்னரே தீர்வு என்பதையும் ஒத்துக்கொண்டிருந்தார்கள். எல்லாவற்றுக்கும் சம்மதம் அளித்து விட்டு இப்போது திடீரென்று எதிர்ப்பு அரசியலை ஆரம்பித்திருக்கின்றார்கள். ஆட்சி அமைத்து ஒரு மாதம் ஆகியும் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு இல்லை என்று ஆவேசக் குரல் எழுப்புகின்றார்கள். (18 ஆம் பக்கம் பார்க்க)

**இன்றைய அரசாங்கத்தை பதவிக்குக் கொண்டு வருவதில் முக்கிய பங்களியாகக் கூட்டமைப்பு செயற்பட்டது. நூறுநாள் வேலைத்திட்டத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு உள்ளடக்கப்படாததற்குச் சம்மதமும் அளித்திருந்தார்கள். தேசிய அரசாங்கம் அமைந்த பின்னரே தீர்வு என்பதையும் ஒத்துக்கொண்டிருந்தார்கள். எல்லாவற்றுக்கும் சம்மதம் அளித்துவிட்டு இப்போது திடீரென்று எதிர்ப்பு அரசியலை ஆரம்பித்திருக்கின்றார்கள். இத்தனைக்கும் இதுதான் எங்களுக்குத் தேவையான தீர்வு என்று அரசாங்கத்திடம் ஒரு கோரிக்கையை இதுவரை இவர்கள் முன்வைக்கவில்லை.**

# ஏமாற்றுகிறது அரசு

# திஸ்ஸ விதாரண சீற்றம்

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் தொடர்பில் இந்த அரசாங்கம் மக்களை ஏமாற்றி வருவதாக லங்கா சமசமாஜ கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகாரத்தை இரத்துச் செய்வதாக வாக்குறுதி அளித்து ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய இந்த அரசாங்கம், அதனை நீக்காமல் ஒரு சில அதிகாரங்களை மட்டும் நீக்கத் தீர்மானித்துள்ளது.

இந்த நடவடிக்கையானது மக்களை ஏமாற்றும் செயலாகவே கருதப்பட வேண்டும். நாடாளுமன்றத்தை ஏப்ரல் மாதம் 23ஆம் திகதி கலைக்காமல் பதவிக் காலம் நிறைவடையும்



வரையில் காத்திருக்குமாறு கோருகின்றோம்.

அரசாங்கத்தின் நல்ல திட்டங்களுக்கு பூரண ஆதரவளிக்கத் தயார். தேசிய அரசாங்கம் அமைப்பது பற்றி அரசாங்கம் பேசி வருகின்றது.

போர் போன்ற விசேட சந்தர்ப்பங்களில் தேசிய அரசாங்கம் உருவாக்கப்பட முடியும். தற்போது நாட்டில் அவ்வாறான நிலைமைகள் எதுவும் கிடையாது. தேசிய அரசாங்கத்தில் எதிர்க்கட்சிகள் இருக்காது, நாம் எதிர்க்கட்சியாக இருக்கின்றோம். எனவே தேசிய அரசாங்கம் என்பதனை விடவும் சர்வகட்சி அரசாங்கமொன்றை வேண்டுமானால் இந்த அரசாங்கம் அமைத்து ஆட்சி நடத்த முடியும்.

அரசாங்கம் எதிர்காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியொன்றை அமைக்கவே முயற்சித்து வருகின்றது. 47 அமைச்சர்களில் 41 பேர் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

## நீதிமன்ற விவகாரங்களில் நீதியமைச்சரின் தலையீடு அதிகம்

### நெருப்பெடுகிறது ஜே.வி.பி.

(கொழும்பு)

நீதிமன்றத்தின் நடவடிக்கைகளில் நீதியமைச்சர் தலையீடு செய்வதாக தேசிய நிறைவேற்றுச் சபையின் பேச்சாளரான ஜே.வி.பி. யின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

மிதக்கும் ஆயுதக்கப்பல் விவகாரத்தில் சிக்கியுள்ள அவன்ட்காட் உரிமையாளர் நிஸ்ஸங்கவின் கடவுச்சீட்டை இரத்துச் செய்யுமாறு நீதிமன்றம் விடுத்த உத்தரவிற்குப் பின்னர், நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்சவும், பிரதமரின் ஆலோசகரான திலக் மாரப்பனவும் தலையிட்டு மீண்டும் அதனைப் பெற்றுக்கொடுத்ததாக நீதியமைச்சின் உயர் அதிகாரியொருவரே தெரிவித்ததாக அனுர குமார திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோரின் முன்னிலையிலேயே நீதியமைச்சின் அதிகாரி நீதியமைச்சர் குறித்த தகவல்களை கூறியதாகவும் அனுர தெரிவித்துள்ளார்.

லண்டன் வந்துள்ள நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ச அவரது முகப்புத்தகத்தில் தெரிவித்த குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்கையிலேயே அனுரகுமார திஸாநாயக்க இந்தக் கருத்துக்களை முன்வைத்துள்ளார். எனினும், சட்டதிட்டங்கள் தொடர்பில் தெளிவுபடுத்தியிருப்பதாகவும் முகப்புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## தமிழக அகதிகளை மீள அழைக்க விபரம் கோருகிறது அரசு



தமிழகத்திலுள்ள இலங்கை அகதிகளில் இலங்கைக்கு திரும்பி வர விரும்புகின்ற அகதிகள் பற்றிய விபரங்களை தருமாறு இந்தியாவிடம் இலங்கை அரசாங்கம் கேட்டுள்ளது.

பல ஆயிரக்கணக்கான இலங்கை அகதிகள் இந்தியாவில் வாழ்ந்தாலும் எல்லோரும் திரும்பி வரவிரும்பமாட்டார்களென மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்தார்.

இலங்கை திரும்ப விரும்புவோரின் விபரங்களை கேட்டோம். இந்தியாவில் நிரந்தரமாக குடியேறிய இலங்கை அகதிகளும் உள்ளனர். அவர்கள் திரும்பி வர விரும்பவில்லை. திரும்பி வர விரும்புவோரும் உள்ளனர் என அவர் கூறினார்.

கடந்த பெப்ரவரி 16ஆம் திகதி, ஜனாதிபதி மைத்திரிபால புதுடில்லிக்கு சென்றார். அவர் தலைமையிலான குழுவில் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனும் இருந்தார்.

அவர், மீள் குடியேற்றம் தொடர்பில் புதிய அரசாங்கம் கண்டுள்ள முன்னேற்றங்களை பற்றி இந்திய தலைவர்களுக்கு விளக்கினார்.

வடக்கில் மீள்குடியேற்றத்துக்கான 1000 ஏக்கர் காணியை விடுவித்துள்ளோம். பல நிறுவனங்களும் மீள்குடியமர்த்தலுக்கு முன்வந்துள்ளன என்றும் அவர் எடுத்துரைத்துள்ளார்.

அதியுயர்பாதுகாப்பு வலய அளவை குறைத்து இந்த நிலங்களை விடுவிப்பது தொடர்பில் அரசாங்கம் ஒரு அமைச்சரவை தீர்மானம் எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## தமிழக அகதிகள் இனி இங்கே வேண்டாம்

### ஜாதிக ஹெல உறுமய சொல்கிறது

ජාතික හෙළ උරුමය
JATHIKA HELA URUMAYA
NATIONAL HERITAGE PARTY

இந்தியாவில் வாழ்ந்து வரும் இலங்கை அகதிகளை வடக்கில் மீள்குடியேற்ற வேண்டாம் என ஜாதிக ஹெல உறுமய கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தேசிய அமைப்பாளர் நிசாந்த வர்னசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

1983 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கையிலிருந்து வெளியேறி இந்தியா சென்ற அகதிகள், வடக்கில் மீள்குடியேற்றப்படுவதனை ஏற்றுக் கொள்ள முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜே.என். டிக்ஸித் ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென தெரிவித்துள்ளார்.

இந்தியா சென்ற இலங்கையர்களுக்கு குடியுரிமை வழங்குவதாகவும், இலங்கையில் குடியேறிய இந்திய வம்சா வழியினருக்கு குடியுரிமை வழங்குவதாகவும் இந்த ஒப்பந்தத்தின் ஊடாக இணக்கம் காணப்பட்டது என அவர் தெரிவித்துள்ளார்.

இந்திய வாழ் இலங்கை அகதிகள் இலங்கையில் மீள் குடியேற்றப்பட வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் கோருவது, இந்த ஒப்பந்தத்தை மீறும் வகையில் அமைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

## வடக்கில் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்படமாட்டாது

### அரசு திட்டவட்டம்



(கொழும்பு)

வடக்கிலுள்ள பாதுகாப்பு வலயங்கள் மற்றும் இராணுவ முகாம்கள் என்பன எக்காரணம் கொண்டும் அகற்றப்பட மாட்டாது என இலங்கை பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தன திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

இராணுவ முகாம்களை அகற்றாமலேயே இடம் பெயர்ந்த மக்களை மீளக்குடி யமர்த்த முடியும் என்ற நம்பிக்கையையும் அவர் தெரிவித்துள்ளார்.

. கொழும்பிலிருந்து வெளிவரும் சிங்களப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தன இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்திலுள்ள அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்படும் என்றும், அங்குள்ள இராணுவ முகாம்களும் அகற்றப்படும் எனவும் ஜனாதிபதித் தேர்தலின்போதும், தேர்தலுக்குப் பின்னரும் பல்வேறு தரப்பினரால் கருத்துகள் முன்வைக்கப்பட்டு வந்தன.

எவ்வாறாயினும் அந்தத் தகவல்களில் துளியேனும் உண்மையில்லை. வடக்கிலுள்ள இராணுவ முகாம்களோ அல்லது பாதுகாப்பு வலயங்களோ அகற்றப்படமாட்டாது.

மீள்குடியேற்றத்துக்கு தடையாக இருப்பதாக பாதுகாப்பு வலயங்களையும், இராணுவ முகாம்களையும் சுட்டிக்காட்டுகின்றனர். இருந்த போதிலும் அவற்றை அங்கிருந்து அகற்றாமலேயே இடம் பெயர்ந்த மக்களை மீள்குடியேற்ற முடியும் என்றார்.

இதேவேளை வலி.வடக்கில் இராணுவத்தின் வசமுள்ள 1000 ஏக்கர் காணிகள் எதிர்வரும் 3 வாரங்களில் மீளப் பெற்று உரியவர்களிடம் ஒப்படைக்கப்படும் என மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் நேற்று முன்தினம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தூக்குத்தண்டனை சரி தானா?

### பொது அபிப்பிராயம் பெற முயற்சி

(கொழும்பு)

இலங்கையில் தூக்குத் தண்டனையை நடைமுறைப்படுத்துவது குறித்து பொதுமக்களின் அபிப்பிராயம் பெறப்படவுள்ளதாக சட்டம் மற்றும் நீதி தொடர்பான அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

தூக்குத் தண்டனைச் சட்டத்தைக் கொண்டு வருவதில் தான் விருப்பம் கொண்டிருந்தாலும், சில அமைப்புக்கள் மற்றும் நபர்கள் அதற்கு எதிராக கருத்துத் தெரிவித்துள்ளதனால், இது தொடர்பில் மக்கள் அபிப்பிராயம் பெறப்படவுள்ளது.

தூக்குத் தண்டனை சட்டம் நடைமுறையில் வந்தால், நாட்டில் இடம்பெற்று வரும் பல்வேறு குற்றச் செயல்கள் இல்லாமல் போகும் எனவும் அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

## மார்ச் 23 இல் ஜெனிவா மாநாடு

அறுபத்தேழு சர்வதேச நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் கலந்து கொள்ளும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மாநாடு எதிர்வரும் 23 ஆம் திகதி ஜெனிவாவில் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கான தயாரிப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர இதில் கலந்துகொள்ளவுள்ளார். இந்த மாநாட்டில் கடந்த 2014 ஆம் ஆண்டில் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட அறிக்கை முன்வைக்கப்பட வுள்ளது.

புலி ஆதரவான 10 குழுக்கள் மற்றும் அவர்களுடன் தொடர்புடைய அரச சார்பற்ற செயற்பாட்டாளர்கள் பலர் இந்த மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளதாகவும் சிங்கள ஊடகமொன்று அறிவித்துள்ளது.

## கிடையாது பிரஜாவுரிமை

(கொழும்பு)



இலங்கையில் பிரஜாவுரிமை கோரிய முன்னிலை சோஷலிசக் கட்சியின் தலைவர் குமார் குணரட்னத்தினால் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பம் குரவரவு, குடியகல்வுத் திணைக்களத்தினால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

சட்டத்தரணிகளின் ஆலோசனைக்கு இணங்க குமார் குணரட்னத்தின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதாக குரவரவு, குடியகல்வுத் திணைக்களம் விளக்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை நாட்டிலிருந்து வெளியேற்றுவதாக குரவரவு, குடியகல்வுத் திணைக்க எத்தினால் அறிவித்தல் வழங்கப்பட்டதை எதிர்த்து குமார் குணரட்னத்தினால் தொடரப்பட்ட அடிப்படை மனித உரிமை மீறல் மனுவையும் மேன்முறையீட்டு நீதிமன்றம் அண்மையில் நிராகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஓய்வூதியர்களுக்கான அதிகரித்த கொடுப்பனவு

## பெப்ரவரி முதல் வழங்குமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இலங்கை அரசின் தேர்தல் பரப்புரைக்கமைய அரச ஓய்வூதியர்களுக்கான 3 ஆயிரத்து 500 ரூபா அதிகரிப்பை பெப்பரவரி மாதம் முதல் வழங்குமாறு யாழ்.பகிரங்க ஓய்வூதியர் நம்பிக்கை நிதியம் ஜனாதிபதியையும் நிதி அமைச்சரையும் கோரியுள்ளது.

இது தொடர்பில் அச்சங்கத்தின் செயலாளர் சு.கணேசலிங்கம் தெரிவிக்கையில்,

ஓய்வூதியர்கள் என்போரும் அரச சேவையில் இணைந்து மக்களுக்கு எத்தனையோ அல்லல் தொல்லைகளுக்கு மத்தியில் கடமை, கண்ணியம், கட்டுபபாட்டுடன் அர்ப்பணிப்புடன் மக்கள் சேவையாற்றியவர்கள் என்பதை யாவரும் மதிப்புடன் நினைவு கொள்வர் அத்தகைய ஓய்வூதியர் முதுமை அடைந்த காரணத்தால் அவர்களிற்கு வைதிய செலவீனம் அதிகமாக உள்ளது. அதற்கு அவர்களிற்கு வழங்கப்படும் ஓய்வூதியம் போதாமல் அல்லல்படுவதை காண்கிறோம் அவர்களின் கௌரவத்தை பேணிப் பாதுகாப்பது அரசின் கடமையாகும்.


ஆகவே அதனைக் கருத்திற் கொண்டே 3,500 ரூபாவை அதிகரித்து வழங்குவதாக தேர்தல் பரப்புரைகளில் தெரிவிக்கப்பட்டது. தங்கள் முயற்சிக்கு நன்றி தெரிவிக்கும் அதே வேளையில் ஓய்வூதியர்களுக்கும் தேர்தல் பரப்புரையின் படி 3500 ரூபாவை பெப்ரவரி மாதம் முதல் வழங்கி உதவுமாறு யாழ்ப்பாண பிரதேச பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியம் சார்பாக் ஜனாதிபதியையும் நிதி அமைச்சரையும் பணிவுடனும் நன்றியுணர்வுடனும் கேட்டுக் கொள்கின்றோம்.

மேலும் மேற்குறிப்பிட்ட தீர்மானம் யாழ்ப்பாண பகிரங்க சேவைகள் நம்பிக்கை நிதியத்தின் தலைவர் வி.ஸ்ரீ.சக்திவேல் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது எனத் தெரிவித்துள்ளார்.



வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையினால் 'புறநெகும' திட்டத்தில் கட்டப்பட்ட புதிய சந்தை அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. அதில் தற்போது மரக்கறி விற்பனை அமோகமாக இடம்பெறுவதைக் காணலாம். (18)

# சைவநெறித்தேர்வில் மாணவனுக்கு தங்கப்பதக்கம்



(அளவெட்டி)

அளவெட்டி வடக்கு அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவன் தேசிய மட்டத்தில் நடைபெற்ற அகில இலங்கை ரீதியிலான சைவ நெறித் தேர்வு எழுத்துப்பரீட்சையில் தங்கப்பதக்கம் வென்றுள்ளார். இம்மாணவன் தரம் 4 இல் கல்வி கற்கும் நிலையில் கீழ்ப் பிரிவில் தேசிய மட்டத்தில் தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார்.

இப் பாடசாலை வரலாற்றில் முதற் தடவையாக தேசிய மட்டத்திலான போட்டி ஒன்றில் முதலாம் இடத்தை பெற்று தங்கப் பதக்கத்தை வென்றுள்ளமை குறித்து பாடசாலைச் சமூகம் பாராட்டியுள்ளது.

# மட்டுப்படுத்தப்பட்ட பேருந்துசேவை பாதிக்கப்படும் பொதுமக்கள்

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் சேவையில் ஈடுபடும் இலங்கை போக்குவரத்துச் சபை 51 இலக்க பேருந்து சேவை மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் நடைபெறுவதால் பயணிகள் போக்குவரத்துச் செய்வதில் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதாக கவலை தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக காலையிலும் பின்னர் மாலை 4 மணிக்கு பின்புமே சேவை இடம்பெறுவதாகவும் இதற்கு இடைப்பட்ட நேரங்களில் பயணம் செய்வோர் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவித்துள்ளனர். அதாவது பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், சந்தை, கடை போன்றவற்றுக்கு சென்று வருவோர் பேருந்துகள் இன்மையால் கால் கடுக்க நடந்து வருவதுடன் சிலர் ஏனையோரது சைக்கிள், மோட்டார் சைக்கிள்களில் ஏறிச் செல்கின்றனர். இதனால் தமக்கு நேரவிரயம் ஏற்படுவதுடன் பணமும் கூடுதலாக செலவாகின்றது எனவும் பயணிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே இவ் வழித்தட சேவையினை அதிகரித்து நடாத்த சம்பந்தப்பட்ட துறையினர் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேணடும் என பொதுமக்களும் பாடசாலை மாணவர்களும் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர்.(85)

# கூட்டம்

அளவெட்டி கும்புழாவளைப் பிள்ளையார் ஆலய தொண்டர் சபையினர், உபயகாரர், வழிபடுவோருக்கான கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. தர்மகர்த்த சபை தலைவர் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் ஆசியுரையை ஆலய சிவாச்சாரியார் வழங்கவுள்ளார். தொடர்ந்து ஆலய கும்பாபிஷேகம் பற்றிய கலந்துரையாடலும இடம்பெறவுள்ளது.

## கட்டுரைப் போட்டி முடிவுகள்

உள்ளூராட்சி வாரத்தை யொட்டி பருத்தித்துறை பிரதேச சபையால் நடாத்தப்பட்ட போட்டிகளில கட்டுரைப்போட்டியில் முதல் மூன்று இடங்களை பெற்ற மாணவர்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது இதன்படி,

ஆர்.சந்துரு(கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலை), எஸ்.கிருததிகா (பொலிகண்டி இந்து தமிழ் கலவன் பாடசாலை), மனோஜ் பிரபாகர் (மேலைப் புலோலி சைவப் பிரகாச வித்தியாலயம்).

# மெதடிஸ்த பெண்கள் பாடசாலையின் ஆய்வு கூடம் திறந்துவைப்பு



(வடமராட்சி)

1000 பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயரதர் பாடசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட (மகிந்தோதய) தொழில்நுட்ப ஆய்வுகூடம் கடந்த வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் செல்வி கிறேஸ் தேவதயானி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்வி ராஜாங்க அமைச்சர் வேலுச்சாமி இராதாகிருஷ்ணன் கலந்து கொண்டு தொழில் நுட்ப ஆய்வுகூடத்தை திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண கல்வி பண்பாட்லுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சர் த.குருகுலராஜா, மகளிர் விவகார பிரதி அமைச்சர் திருமதி.ம.விஜயகலா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

1000 பாடசாலை அபிவிருத்தி திட்டத்தில் வடக்கில் 96 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டன. இவற்றுள் வடமராட்சியில் தெரிவு செய்யப்பட்ட ஏழு பாடசாலைகளில் இரண்டு பாடசாலைகளில் தொழில்நுட்ப ஆய்வு கூடங்கள் திறக்கப்பட்டு விட்டன. ஏனையவற்றின் கட்டட வேலைகள் பூர்த்தியடைந்து விட்டன உபகரணங்களும கிடைக்கப் பெற்று· வருகின்றன.

இத்தொழிநுட்ப ஆய்வுகூடங்களில் நான்கு பிரிவுகள் உள்ளன தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப ஆய்வுகூடத்திற்கு 42 கணனிகளும் மொழியியல் ஆய்வு கூடத்திற்கு 21 கணனிகளும் வழங்கப்பட்டுள்ளன. நெனச தொலைக்கல்வி நிலையத்திற்கு ஒரு பெரிய தொலைக்காட்சியும தொலைக்காட்சி இணைப்பும் வழங்கப்பட்டுள்ளன.

கணித ஆய்வு கூடத்திற்கும் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. (18)

# விபரங்கள் திரட்டு

வரணி வடக்குப் பகுதியில் தற்போது மலசலகூட வசதிகள் இல்லாதவர்களின் விபரங்கள் சுகாதாரப்பிரிவினருடன் தொண்டர்களும் இணைந்து ப்திவுகளை மேற்கொண்டு வருகின்றனர். இப்பிரிவில் பெருமளவான வீடுகளில் மலசலகூடவசதி இல்லாததால் அவர்கள் பெரும் இடையூறுகளை எதிர்கொள்கின்ற அதே வேளை பாதுகாப்புத்தரப்பினர் தாம் அமைத்து கொடுத்த வீடுகளுக்கு மலசலகூட வசதி ஏற்படுத்திக்கொடுத்துள்ளனர். அதுமட்டுமல்லாமல் இன்னும் பல வறுமைக்கோட்டின் கீழ் உள்ளவர்கள் ஓலை குடிசையிலும் வாடகை வீடுகளிலும் வீட்டுத்திட்டம் கிடைக்காமல் பல் நெருக்கடிக்குள் வாழ்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (150)

# பதிவு நடவடிக்கை

வடவரணிப்பிரதேசத்தில் வேள்ட் விஷன் நிறுவனத்தில் இணைந்த சிறுவர்களை கடந்த புதன்கிழமை புகைப்படம் எடுக்கப்பட்டு பதிவுகள் நடைபெற்றன. இந்நிறுவ்னம் வடவரணிப்பிரதேசத்தில் பல குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவியாக கடைக்குரியவர்களுக்கு வர்த்தகப் பொருட்கள், மாடுவளர்ப்பு, பாடசாலை மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டி மற்றும் கற்றல் உபகரணங்கள், குடைகள் போன்ற பொருட்களை வழங்கி வருவதுடன் மாதாந்தம் பதிவுகளையும் பிள்ளைகளுக்கு வழங்கப்பட்ட கொப்பிகளில் தரவுகளை மேற்கொண்டு வருகின்றனர். (150)





வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் வடமராட்சியிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கான ஆங்கில கருத்தரங்கு அண்மையில் ஹாட்லிக் கல்லூரியில் நடைபெற்றது. இதில் லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த அம்பலவாணர் துரைசிங்கம் கருத்துரை வழங்குவதையும், மாணவனுக்கு கையேடு ஒன்றை கையளிப்பதையும் காணலாம். (18)


# விடாமுயற்சி வெற்றி நிச்சயம் நிரூபித்தது நியூசிலாந்து

அவுஸ்ரேலியாவுக்கு எதிரான உலகக்கிண்ண ஆட்டத்தில் நியூசிலாந்து அணி 1 விக்கெட் வித்தியாசத்தில் திரில் வெற்றி பெற்றது.

உலகக்கிண்ண சுற்றுத் தொடரின் 20ஆவது போட்டியில் அவுஸ்ரேலிய மற்றும் நியூசிலாந்து அணிகள் ஒக்லாந்தில் மோதுகின்றன.

இதில் நாணய சுழற்சியில் வென்ற அவுஸ்ரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி களமிறங்கிய அவுஸ்திரேலிய வீரர்கள், நியூசிலாந்து வேகப்பந்துவீச்சாளர் பவுல்ட் பந்துவீச்சை எதிர்கொள்ள முடியாமல் திணறினர்.



அவுஸ்ரேலிய அணி 32.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் 151 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

அந்த அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக களமிறங்கிய ஃபின்ச்சும் டேவிட் வோர்னரும் நிதானமான தொடக்கத்தை தந்தனர். ஃபின்ச் 14 ஓட்டங்களிலும் அதனைத் தொடர்ந்து வார்னர் 34 ஓட்டங்களிலும் சவுத்தியின் பந்தில் ஆட்டமிழந்தனர்.

ஒரு கட்டத்தில் 80 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளை இழந்திருந்த அவுஸ்ரேலிய அணி அதற்கு பின் வேகமான சரிவை சந்தித்தது. வாட்சன் (23), கிளார்க் (12), ஸ்மித் (4), மேக்ஸ்வெல் (1), மாரஷ் (0), ஜான்சன் (1), ஸ்டார்க் (0) என சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

கடைசி விக்கெட்டுக்கு ஹாடினுடன் ஜோடி சேர்ந்த கம்மின்ஸ் ஓரளவுக்கு தாக்குப்பிடித்தார். அவரை சப்போர்ட்டுக்கு வைத்துக் கொண்டு அனுபவ வீரரான ஹாடின் அவுஸ்ரேலியாவின் ஓட்டங்களை உயர்த்த போராடினார். இறுதியில் ஹாடின் 43 ஓட்டங்களில் விக்கெட்டைப் பறிகொடுக்க, 151 ஓட்டங்களில் அவுஸ்ரேலியாவின் ஆட்டம் முடிவுக்கு வந்தது.

நியூசிலாந்து அணி சார்பாக போல்ட் 5 விக்கெட்டுகளையும், சவுத்தி, விக்டோறி தலா 2 விக்கெட்டுகளையும் சாய்க்க, அன்டர்சன் தன் பங்குக்கு 1 விக்கெட்டையும் கைப்பற்றினார்.

பின்னர் 152 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற எளிய இலக்கை நோக்கி களமிறங்கிய நியூசிலாந்து அணி 1 விக்கெட் வித்தியாசத்தில் திரில் வெற்றி பெற்றது.

தொடக்க ஆட்டக்காரர்களான குப்டில், மக்கலம் அதிரடியை தொடர்ந்தனர். குப்டில் (11) ஸ்டார்க் பந்து வீச்சில ஆட்டமிழக்க, வில்லியம்சன் மக்கலமுடன் ஜோடி சேர்ந்தார்.

இருவரும் அவுஸ்ரேலிய பந்துவீச்சை எளிதாக சமாளித்தனர். அதிரடியில் அசத்திய மக்கலம் 24 பந்துகளில் அரைச்சதம் அடித்தார். 50 ஓட்டங்கள் எடுத்த போது ஆட்டமிழந்தார்.

பின்னர் வந்த ரெய்லரை 1 ஓட்டங்களில் ஸ்டார்க் ஆட்டமிழக்கச் செய்தார். இவரை தொடர்ந்து வந்த எலியோட்டும் ஸ்டார் பந்தில் டக்- அவுட் ஆக வெளியேறி அதிர்ச்சி தந்தார்.

அடுத்து வந்த அண்டர்சன் நிதானமாக விளையாடி 26 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். 131 ஓட்டங்களுக்கு நியூசிலாந்து அணி 5 விக்கெட்டுகளை இழந்திருந்தது.

## ஒரே பார்வையில் போட்டி முடிவு

**அவுஸ்ரேலியா -151/00 (32.2)**

ஹடின் – 43 (41)
டேவிட் வோர்ணர் – 34 (42)

போல்ட் – 5/27
சவுத்தி – 2/65
விக்ரோறி – 2/41

**நியூசிலாந்து- 152/9 (23.1)**

மக்கலம் – 50 (24)
வில்லியம்சன் – 45 (42)

ஸ்ரடார்க் – 6/28
கமின்ஸ் – 2/38

ஆட்ட நாயகன்–போல்ட்

## ஸ்ரீசாந்தை கொல்ல சதி

கிரிக்கெட் சூதாட்ட புகாரின் பேரில் இளம் கிரிக்கெட் வீரர். ஸ்ரீசாந்த் கடந்த 2013ஆம் ஆண்டு மே மாதம் கைது செய்யபட்டு திகார் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

அப்போது, கொலைக்குற்றச் சாட்டின் பேரில் அதே சிறையில் அடைக்கப்பட்டிருந்த பிரபல தாதா ஒருவன் ஸ்ரீசாந்தை கொல்ல முயன்றதாக அவரது மைத்துனரும் (ஸ்ரீசாந்தின் அக்காவை திருமணம் செய்துள்ளார்) பிரபல மலையாள பின்னணி பாடகருமான மது பால கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

அவர், மலையாள தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில்,

ஸ்ரீசாந்துக்கும் கிரிக்கெட் சூதாட்டத்துக்கும் தொடர்பு ஏதுமில்லை என எங்கள் குடும்பம் முழுமையாக நம்புகிறது. ஏதோ காரணத்தால் பின்னப்பட்ட சதி வலையில் அவர் தள்ளப்பட்டார். இவ்விவகாரத்தின் பின்னணி என்ன? என்பதை கண்டறிய வேண்டும்.



திகார் சிறையில் அவர் இருந்தபோது, கொலை வழக்கு கைதியாக அதே சிறையில் அடைக்கப்பட்டிருந்த பிரபல தாதா ஒருவன் கதவின் தாழ்ப்பாளை கூர் தீட்டி, கத்தி போல் தயாரித்தான்.

அதைக் கொண்டு ஸ்ரீசாந்தை அவன் குத்திக்கொல்ல முயன்றான். அந்த மன அதிர்ச்சியில் இருந்து இன்னும் அவர் மீளவில்லை.

இந்தச்சம்பவம் சிறைக்குள் நடந்தது என்பதால் இது தொடர்பாக பொலிலில் புகார் அளிக்கப்படவில்லை. சிறையில் இருந்து விடுதலையான பின்னர் ஸ்ரீசாந்த் குடும்பத்தாரிடம் இதைத்தெரிவித்தார்'' என்று கூறியுள்ளார்.

## விளையாட்டு வீரர்களுக்கு மருத்துவப் பரிசோதனை

(யாழ்ப்பாணம்)

கல்வி அமைச்சு விளையாட்டு அமைச்சு சுகாதார அமைச்சு ஆகியன இணைந்து இவ்வருடத்தில் இருந்து அனைத்து விளையாட்டு வீரர்களுக்கும் மருத்துவ பரிசோதனை நடத்த திட்டமிட்டுள்ளது.

இது தொடர்பிலான விடயங்களை வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் வெளியிட்டுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

1500 மீற்றரிற்கு மேற்பட்ட தூர ஓட்ட நிகழ்சிகளில் பங்கு பற்றும் சகல வீராங்கனைகள் மற்றும் குழு வீராங்கனைகள் அனைவரும் இதய செயற்பாடு தொடர்பில் அறிவதற்காக ECG பரிசோதனை செய்து கொள்வது கட்டாயமாகும்.

விளையாட்டுகளில் பங்பற்றும் வீரர்களின் மருத்துவ பரிசோதனை சான்று பரிசீலிக்கப்பட்டு அதன் பின்னரே விளையாட்டுகளில் ஈடுபட அனுமதிக்கப்படுவர்.

இதற்காக மாகாண கல்வி திணைக்களம் விளையாட்டு மருத்துவ பரிசோதனை முகாம்களை ஒழுங்குபடுத்த உள்ளது.

இதற்காக மாணவர்கள் விளையாட்டு மருத்துவப் பயிற்சிக்கு முன்னரான தகுதி காண் படிவத்தினை பூர்த்தி செய்து கொள்ள வேண்டும்.

ஒரேதடவையில் இவர்களுக்கு ECG பரிசோதனையை செய்வதில் உள்ள சிரமம் கருதி தமது வசிப்பிடத்திற்கு அண்மையில் உள்ள வைத்திய சாலையல் ECG பரிசோதனை செய்ய முடியும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (54)

## பலத்த கட்டுப்பாடுகளுடன் வடக்கின் துடுப்பாட்ட போர்

மதுபானம் அருந்திய நிலையில் வருபவர்கள் மைதானத்துள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் எனவும் பொலிஸாரின் கடுமையான பாதுகாப்புக்கு மத்தியில் கடும் கட்டுப்பாடுகளுடன் வடக்கின் மாபெரும் போர் துடுப்பாட்டப் போட்டி நடைபெறவுள்ளதாக சென்.ஜோண்ஸ் கல்லூரியின் பிரதி அதிபர் வி.எஸ்.டி.துஸிதரன் தெரிவித்தார்.

வடக்கின் மாபெரும் போரின் ஏற்பாடுகள் குறித்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இடம்பெற்ற வேளையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்,

வடக்கின் மாபெரும் போர் எதிர்வரும் 5, 6 மற்றும் 7 ஆம் திகதிகளில் யாழ்ப் பாணம் மத்திய கல்லூரியில் நடைபெறும். இம்முறை போட்டி ஏயார் டெல் நிறுவனத்தின் அனுசரணையில் நடைபெறும்.

இம்முறை போட்டிகளில் எவ்வித அசம்பாவிதங்களும் இடம்பெறாத வகையில் பொலிஸார் பாதுகாப்பு வழங்குவர். மதுபானம் அருந்தியவர்கள், போதைவஸ்து பாவித்தவர்கள் மைதானத்துக்குள் நுழைய முடியாது. போட்டி நடைபெறும் போது மைதானத்துக்குள் எவரும் நுழைய முடியாது.

போட்டி நடைபெறும் போது பாடசாலை சீருடை அணிந்த மாணவர்கள் வீதிக்ளில் நடமாட தடைவிதிக்கப்பட்டுள்ளதுடன் கப் கலக்ஸன் என்ற பெயரில் வர்த்தக நிலையங்கள், பொது மக்கள் ஆகியோரிடம் மாணவர்கள் பணம் வசூலித்தல் இம்முறை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

இரண்டு கல்லூரிகளின் ஒப்புதலின் அடிப்படையில் போட்டியின் நடுவர் நியமிக்கப்படுவார். போட்டிகளில் எவ்வித அசம்பாவிதங்களும் இடம் பெறாமல், சர்வதேச விதிமுறைகளுக்கமைய விளையாட்டின் புனிதம், பண்பு பேணப்பட்டு போட்டி நடாத்தப்படும் என இரண்டு கல்லூரிகளின் அதிபர்களும் ஒப்பமிட்டு அறிக்கை தயாரித்துள்ளனர். அதில் குறிப்பிடப்பட்டுள்ளபடி போட்டிகள் நடைபெறும் என அவர் தெரிவித்தார். (20)

## உலகக் கிண்ணம் 2015


### இன்றைய ஆட்டம்

இங்கிலாந்து
எதிர்
இலங்கை
இடம்– வெலிங்டன்
நேரம்– அதிகாலை 03.30

ICC CRICKET WORLD CUP 2015


பாகிஸ்தான்
எதிர்
சிம்பாப்வே
இடம்– பிரிஸ்பன்
நேரம்– காலை 09.00





கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்





யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரி

(105)



இராமநாதபுரம் மகாவித்தியாலயம்

(70)

# மருத்துவ பீட மாணவர்கள் தேசிய அணிக்கு தெரிவு



யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவன் பு.அபிகரன் இலங்கைப்பல்கலைக்கழக விளையாட்டு சங்கத்தினால் இலங்கைப் பல்கலைக்கழக தேசிய கூடைப்பந்தாட்ட அணிக்குத் தெரிவு செய்யப்பட்டு யாழ். பல்கலைக்கழகத்திற்குப் பெருமை சேர்த்துள்ளார்.

இவர் கடந்த 19 ஆம் திகதி பேராதனைப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற மேற்படி அணித் தெரிவில் கலந்து கொண்டு தனது திறமையை மிகச்சிறப்பாக வெளிப்படுத்தி மேற்படி அணிக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இத்தெரிவில் இலங்கைப் பல்கலைக்கழகங்களின் சிறந்த கூடைப்பந்தாட்ட வீரர்கள் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்அணியானது எதிர்வரும் 6 ஆம் திகதி தொடக்கம் 22 ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெறவுள்ள 50ஆவது தேசிய சிரேஷ்ட கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் பங்குபற்றவுள்ளது.



இதேவேளை மேற்படி பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவி செல்வி. சுபோதினி விதானகேயும் இலங்கைப் பல்கலைக்கழக விளையாட்டு சங்கத்தினால் இலங்கைப் பல்கலைக்கழகங்களின் இணைந்த வளைகோலாட்ட பெண்கள் அணிக்குத் தெரிவுசெயயப்பட்டு யாழ். பல்கலைக் கழகத்திற்குப் பெருமை சேர்த்துள்ளார்.

இலங்கையின் அனைத்துப் பல்கலைக்கழகங்களிலிருந்தும் வளைகோலாட்ட வீராங்கனைகள் இத்தெரிவில் பங்குபற்றியிருந்தனர்.

இத்தெரிவு அணியானது கடந்த 20 ஆம் திகதி தொடக்கம் 22 ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெற்ற 24 ஆவது பெண்களுக்கான தேசிய வளைகோலாட்ட சுற்றுப் போட்டியில் பங்குபற்றியது. யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து மேற்படி அணிக்கு பெண் வீராங்கனை ஒருவர் தெரிவுசெய்யப்பட்டிருப்பது இதுவே முதல் தடவை என பல்கலைக்கழக சமூகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

## இந்தியா தோல்வி



உலக சீரிஸ் ஸ்குவாஷ் போட்டி அமெரிக்காவில் உள்ள சிகாகோ நகரில் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற பெண்களுக்கான ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்திய வீராங்கனை தீபிகா பலிக்கல் 9-11, 9-11, 11-5, 6-11 என்ற செட் கணக்கில் தகுதி சுற்று மூலம் முன்னேறிய எகிப்து வீராங்கனை ஹீபா எல் டோர்க்கிடம் தோல்வி கண்டு வெளியேறினார்.

மற்றொரு ஆட்டத்தில் இந்திய வீராங்கனை ஜோஸ்னா சின்னப்பா 8-11, 3-11, 10-12 என்ற நேர்செட்டில் எகிப்து வீராங்கனை நூர் எல் தயெய்பிம் தோல்வி கண்டு நடையைக்கட்டினார்.

# குடிநீர் பாதிக்கப்பட்ட மக்களிற்கான அமையத்தின் செயலாளர் சிவமைந்தனுடனான சிறப்பு நேர்காணல்



**கேள்வி :** இன்று அரசியலாக்கி அலட்சியப்படுத்தப்பட்டு வரும் மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைக்கு உங்கள் அமையத்தின் சார்பில் என்ன நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றீர்கள். இன்றுள்ள மத்திய மாகாண அரசுகளின் நகர்வுகள் தொடர்பாக உங்கள் கருத்து யாது?...

**பதில் :** ஆரம்பத்தில் நொதேண் பவர் சுற்றுவட்டத்திற்குப் பின்புறமாக உள்ள மக்கள் தங்கள் குடிநீரில் ஒயில் கலக்கப்பட்டதை இனம்கண்டு இது தொடர்பாக சந்திரகுமார் எம்.பி. யிடம் முறையிட்டனர். இருப்பினும் இச்செயற்பாட்டிற்குக் காரணம் நொதேண் பவர் மாத்திரமல்ல அந்த வளாகத்தில் உள்ள ஏனைய இயந்திரங்களும் மற்றும் அதிகாரிகளின் பொறுப்பற்ற அசமந்தப் போக்குகளும் இதற்குக் காரணம் என்பது எம்மால் இனம் காணப்பட்டது. அந்த விடயங்களும் எம்.பி. யிடம் முறையிடப்பட்டது.

இதற்கு முற்று முழுதாக பதில் சொல்ல வேண்டிய கடப்பாடு இலங்கை மின்சார சபைக்கே உள்ளது. நொதேண்பவர் நிறுவனம் இங்கு வந்து இயங்க ஆரம்பிக்கும்போது அது பாதுகாப்பானதா? இதனால் பின் விளைவுகள் எதுவும் இல்லையா என அவதானித்து உறுதிப்படுத்திய பின்பே அதனை இயங்க ஆரம்பிக்க விட்டிருக்க வேண்டும். ஆகவே இதற்கு மூல காரணம் இலங்கை மின்சார சபையே.

**கேள்வி:** நொதேண்பவர் பாதுகாப்பானது அதில் இருந்து எந்த பக்க விளைவுகளும் ஏற்படாது என உறுதியளித்து களை வழங்கியுள்ளனர். அதாவது இலங்கை மின்சார சபையால் நரச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளது. ஆகவே இதை எப்படி நம்புவது? 1998 ஆம் ஆண்டு கமக்காரர் ஒன்றியத் தலைவர் தியாகலிங்கம் இவ்வாறான வெளிநாட்டு நிறுவனங்களைக் கொண்டு வந்து இந்த செயற்பாடுகளில் ஈடுபடும் போது இது எமது நன்னீரைப் பாதிக்கும், விவசாயம் பாதிக்கும் என எதிர்ப்புத் தெரிவித்து கருத்து வெளியிட்டார். ஆனால் அவர் தனியொரு மனிதனாக குரல் கொடுக்கும்போது இதை யாருமே கண்டு கொள்ளவில்லை. சுற்றுவட்ட மக்கள் கூட இதனைப் பொருட்படுத்தவில்லை. தற்போது இப்பாதிப்பு அனைவருக்கும் ஊறிநிலம் பின்பு தான் அனைவரும் தொடங்கியிருக்கின்றார்கள்.

இதேவேளை நொதேண்பவர் தான் மாத்திரம் இதற்குக் காரணமென கூற முடியாது. சுற்றுச்சூழல் அதிகாரசபையும் எந்தவித நடவடிக்கைகளையும் இதில் எடுக்கவில்லை.

**கேள்வி:** சுற்றுச்சூழல் அதிகார சபை இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லையா? பொது மக்கள் சார்பான அமைப்புக்களுக்கு எந்தப் பதிலும் கூறவில்லையா?

**பதில்:** இந்த நிறுவனங்கள் அமைக்கப்படும் போது தேவியாக பரிசீலிக்கப்பட்டு சட்ட ரீதியாக நரச் சான்றிதழ்கள் எல்லாம் வழங்கப்பட்டுள்ளது. இதில் எந்தச் சட்ட சிக்கல்களும் இல்லை. எப்படி நடவடிக்கை எடுப்பது என்கிறார்கள். அப்படியானால் இப்போது எப்படி ஒயில் கலந்தது.

**கேள்வி:** 1992 ஆம் ஆண்டு போராட்ட காலங்களில் விடுதலைப் புலிகளாலும் இராணுவத்தாலும் குண்டு வைக்கப்பட்டதாகவும் அதில் கசிவுற்ற ஒயில்தான் தற்போது நன்னீரை பாதிப்பதாகவும் சிலரது கருத்தாக உள்ளது. இது தொடர்பாக உங்களது கருத்து என்ன?

**பதில்:** இல்லை. குறித்த அந்த காலப்பகுதியில் நாமும் இங்கு தான் இருந்தோம். இன்றும் அங்குதான் இருக்கின்றோம். எமக்குத் தெரியும் இதில் என்ன நடந்ததென. குண்டு வைக்கப்பட்டபோது இரண்டு நாட்கள் தொடர்ந்து எரிந்தது. ஆகவே அந்த ஒயில் எல்லாம் ஆவியாகிவிட்டது. அது தற்போது கசிய எந்தச் சந்தர்ப்பமும் இல்லை. ஆகவே அந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாது. இது திட்டமிட்டு விடப்பட்ட அழகைக் கொடுத்த செயற்பாட்டால் உருவானது. இல்லையேல் இந்தளவு தூரம் அது பரவியிருக்காது.

**கேள்வி:** இது தொடர்பாக தற்போதைய மாகாண மத்திய அமைச்சுக்கள் என்ன நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளன?


**பதில்:** இதற்கு முன் தற்போது நடந்த துன்பியல் சம்பவத்தை சொன்ன பின் இவர்களின் நடவடிக்கைகளைச் சொல்வது பொருத்தமானது என நினைக்கின்றேன். இந்த சுற்றுவட்டத்தில் தற்போது லக்சபானா ஜாட் என்கின்ற ஒன்றைப் போட்டுள்ளார்கள். அதாவது மின் இடமாற்றுக்காக ஜாட் ஒயில் குளம் ஒன்று உள்ள (அதாவது அந்த இடம் ஒயில் நிறைய நின்று ஓர் குளமாகவே இருந்தது) அந்த இடத்தில் தான் லக்சபானா ஜாட்டைப் போட்டிருக்கின்றார்கள். அந்த இடத்தில் மண் கல் போட்டு பிறசர் பண்ணித்தான் ஜாட் போட்டிருக்கின்றார்கள். இந்த விடயத்தை சற்று சிந்தித்துப்பாருங்கள். எத்தகைய பொறுப்பற்ற நடவடிக்கையிது? திரன்ன தங்கள் வேலைத்திட்டம் நிறைவேற வேண்டும் என்பதற்காக எதிர்கால பின்விளைவுகளை சற்றேனும் சிந்திக்காது செய்த செயற்பாடுதான் இது.

இன்றைய நிலையில் தூய்மையாக இருக்கின்ற கனகாம் மின் உற்பத்தி வளாகம் முன்பு இந்த தூய்மை நிலையில் இருக்கவில்லை. அந்த வளாகத்தில் கடமையாற்றிய பெயர் குறிப்பிட விரும்பாத பல தொழிலாளர்கள் தனிப்பட்டரீதியில் கருத்து தெரிவிக்கும் போது நிலத்தில் துளையிடப்பட்டு கழிவு ஒயில் விடப்பட்டதாக கருத்து தெரிவிக்கின்றனர். ஆனால் இது ஊர்ஜிதப்படுத்த முடியாத காரணத்தினால் எம்மால் சாட்சிப்படுத்த முடியாது உள்ளது. அயலவர்களும் இந்த செயற்பாடு நடந்ததாக கூறுகின்றனர். மக்களது கருத்தின் படி சாதாரண நிலக்கீழ் ஆற்றுத்தண்ணீர், ஊற்றுத்தண்ணீர் போன்றன நில மட்டத்தில் இருந்து 60அடியில் உள்ளது. இவற்றில் கெஸ்ஸல் அடியால் 150அடிகளுக்கு துளையிட்டு உட்புகுத்தண்ணீருடன் இந்த ஒயில் விடப்பட்டு இருக்கலாம் என கருதுகின்றனர். இதை தாம் கண்டதாகவும் சாட்சிகள் தெரிவிக்கின்றன.

ஆனால் உண்மை நிலைகள் எதுவும் உறுதிப்படுத்த முடியாதுள்ளது. அந்த 150 அடியில் விடப்பட்ட கழிவு ஒயில் under pressure காரணமாக மேலெழுந்து நிலமட்டத்தில் இருந்து 60அடியில் ஓடிக் கொண்டிருக்கின்ற ஆற்றுடன் மேல் வந்து கலப்படமாகி இருக்கலாம் என்பது தான் எமது கருத்து.

**கேள்வி:** அப்படியானால் இதற்கான தீர்வு என்ன?

**பதில் :** இது தொடர்பாக ஆரம்பத்தில் மகிந்தஅரசு ஆட்சியில் இருக்கும் போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் சந்திரகுமார் எம்.பியுடனும் எமது நிலைப்பாட்டை தெரிவித்திருந்தோம். உடனடியாக விரைந்து இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப் பட்டு அமைச்சரவையிலும் சமர்ப்பிக்கப்பட்டது. இதன் அடிப்படையில் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் கொண்ட குழு உடனடியாக கன்னாகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது. நீர் மாசுபட்டுள்ளது என்பது கண்டறியப்பட்டது. இது பல ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு அதற்கான தற்காலிக நிரந்தர மற்றும் இடைப்பட்ட தீர்வுகள் என 18 வகையான தீர்வுகள் முன்வைக்கப்பட்டன. இந்த வேளையில் தேர்தல் மூலம் ஆட்சிமாற்றம் ஏற்பட்டது. இதன் பின்னர் வடமாகாண விவசாய அமைச்சர் ஐங்கரநேசன் உட்பட்ட 09 பேர் கொண்ட குழுவினர் மீண்டும் ஆரம்பத்தில் இருந்து ஆய்வு நடத்தி வருகின்றனர். சில நாட்களாக இழுத்தடித்த பின் கழிவு ஒயில் கலக்கப்பட்டு உள்ளது என்பதைத்தான் இவர்களும் உறுதிப்படுத்தப் போகின்றார்கள்.



பாதிக்கப்பட்டுள்ள வலிகாமம் பிரதேசங்கள்


இவர்கள் இதற்கு நடவடிக்கை எடுப்பது எப்போது?... இதற்கான தீர்வினை காண்பது எப்போது?...

அதற்குள் மக்களுடைய குடிநீர் அத்தியாவசிய தேவை என்ன ஆகுவது?... மக்கள் அனைவரும் நோய்வாய்ப்பட்ட பின்பு இதற்கான தீர்வு நடவடிக்கைகளை முன்னெடுத்து என்ன பயன்?.... என்கின்ற கேள்வி மெல்லாம் எம்மக்கள் மத்தியில் இருட்டுக்குள் இருந்து நிழலாடி கொண்டு இருக்கின்றது. தற்போது குறித்த சுற்றயல் மக்களுக்கு விநியோகித்து வரும் குடிநீர் சீராக வழங்கப்படவில்லை. இது வேறொரு துருவப்பிரச்சினையாகும்.

அன்றாடம் நுகர்கின்ற மக்கள் அதில் உள்ள வேறுபாட்டை இனங்கண்டு கூறுகின்றனர். ஆனால் அதிகாரிகள் சான்றிதழைக் காட்டி அதை மறுக்கின்றார்கள். இதன் இடையில் இது தொடர்பான ஆதாரத்தை எவ்வாறு எம்மால் நிரூபிப்பது என்பதுதான் பெரும் சிக்கலாக உள்ளது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கோரிக்கைக்கேற்ப அனுப்பப்பட்ட அமைச்சுக்கள் கொண்ட ஆய்வுக்குழு 18 வகையான தீர்வு நடவடிக்கைகளை முன்மொழிந்தார்கள். அதனை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தியிருப்பின் இன்று 50 வீதத்திற்கு மேல் தீர்வு முயற்சிகள் முன்னோக்கியிருக்கும். ஆனால் ஆட்சி மாறிய பின் வந்திருப்போர், கழிவு ஒயில் கலந்துள்ளதா?.... என்பதைத்தான் இப்போது ஆய்வு செய்கின்றனர். மாவை சேனாதிராசா உட்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள எவரேனும் இந்த விடயம் தொடர்பாக இதுவரையும் எதுவுமே வாய்திறக்கவில்லை. அன்றாட பிரச்சினைகளை தீர்க்க முடியாத கட்டங்களில் மக்கள் அகதிப்பட்டு கொண்டு இருக்கின்றார்கள். ஆனால் மக்களின் பிரதிநிதிகள் இந்த விடயத்தில் மறைந்து ஒளிக்கின்றனர். மாவை சேனாதிராசா வலிகாமம் பிரதேசத்தை சேர்ந்தவர். ஆனால் இன்று வரை இது தொடர்பாக எதுவும் கதைக்கவில்லை... இதே விடயத்தை சிங்கள அமைச்சர்கள் மத்தியில் கொண்டு சென்று இருந்தால் அவர்கள் இதற்கு தீர்வு கண்டு இருப்பார்கள்.

திரு. சிவமைந்தன்
செயலாளர்,
குடிநீர் பாதிக்கப்பட்ட
மக்களுக்கான அமையம்.

மக்களுக்கான அமையம்.



# நிலத்தடி நீர் மாசுபாட்டினால் பாதிப்புற்று வாழும் வலிகாமம் பிரதேச மக்கள் சார்பாக 08.02.2015 ஆம் திகதி அன்று பிரதேச வாரியான மக்கள் பிரதிநிதிகளுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல் தொடர்பான அறிக்கை

நிலத்தடி நீர் மாசுபாட்டினால் பாதிப்புற்று வாழும் வலிகாமம் பிரதேச மக்கள் சார்பாக, தூய நீரிற்கான விசேட செயலணியின் கவனத்திற்குக் கொணரப்படும் விடயங்கள்

யாழ்ப்பாணக் குடாநாட்டின் வலிகாமம் பிரதேசத்தில் கடந்த நான்கு ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக அதிகரித்து வந்துள்ள நிலத்தடி நீர் மாசுபாடு எனும் அனர்த்தம் காரணமாகப் பொதுமக்களாகிய நாம் பாதிப்புற்று வந்துள்ள நிலையில் அப்பிரச்சினைக்கான தற்காலிக மற்றும் நிரந்தரத் தீர்வினை எட்டும் முயற்சியின் ஓர் அங்கமாகக் கடந்த 28.01.2015ஆம் திகதி அன்று தூய நீரிற்கான விசேட செயலணியானது அங்குரார்ப்பணம் செய்யப்பட்டிருந்தது.

மனிதர் மட்டுமல்லாது அனைத்து உயிரிகளினதும் அடிப்படைப் பிரச்சினையாக வலிகாமம் பிரதேசத்தின் நிலத்தடி நீர் மாசுபாடு எனும் அனர்த்தம் உருவெடுத்துள்ளதனால் அரசியல் எல்லைகள் கடந்தும், நிர்வாக இடர்பாடுகளைக் களைந்தும் ஓர் நியாயமானதும், வகைகூறத் தக்கதுமான தீர்வினை எட்டுதற் பொருட்டுப் பல்வேறு அரசியல் பிரதிநிதிகள், நிர்வாக உத்தியோகத்தர்கள் ஒன்றிணைக்கப்பட்டு இவ் விசேட செயலணியானது அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு, நிலத்தடிநீர் மாசுபாட்டுப் பிரச்சினையை வினைத்திறனாகவும், விளைதிறனாகவும் அணுகித் தீர்வினைப் பெற்றுத்தரும் பாரிய பொறுப்பானது தூய நீரிற்கான விசேட செயலணியின் பால் முன்வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் பாதிக்கப்பட்ட பிரதேசம் வாழ் பொதுமக்கள் பலரும் தமக்கான தற்காலிக மற்றும் நிரந்தர தீர்விற்கான செயற்பாடுகள் தொடர்பாகப் பின்வரும் விடயங்களில் விசனமும், விரக்தியும் அடைந்துள்ளனர்.


1. பாதிக்கப்பட்ட பிரதேசம் என அடையாளங்காணப்பட்ட மற்றும் சந்தேகிக்கப்பட்ட பிரதேசங்களில் வாழும் மக்களிற்குத் தற்காலிக நீர்விநியோக ஏற்பாடுகள் முற்று முழுதாக மேற்கொள்ளப்பட்டிராமை.

பாதிக்கப்பட்டதாக அடையாளப் படுத்தப்பட்டுள்ள பிரதேசங்களிற்கான தற்காலிக குடிநீர்த் தேவையினைப் பூர்த்திசெய்ய 550 தொடக்கம் 600 வரையிலான குடிநீர்க் கொள்கலன்கள் அவசியமானவை எனக் கணக்கிடப்பட்டுக் கூறப்பட்டதற்கு இணங்க, அவற்றைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை அமைச்சர்கள் மற்றும் அமைச்சுக்களின் செயலாளர்கள் ஊடாக மேற்கொண்டு உதவிய போதும் அவற்றை உரிய முறையிற் பெற்று விநியோகிப்பதிற் காணப்படும் சிரமம் தொடர்பாக மக்களாகிய எம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை.

2. சனத்தொகை அடர்த்திக்கு ஏற்றாற் போல் குடிநீர்க் கொள்கலன்கள் வழங்கப்பட்டு குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டிராமை.

இரண்டாவது செயலணிக் கூட்டத்தில் மக்களின் செயற்பாடு மற்றும் நடத்தை தொடர்பாகக் கலந்துரையாடப்பட்ட விடயங்களுள் மிக முதன்மையாகச் சுட்டிக்காட்ட விளையும் விடயம் யாதெனில், ஒரு கொள்கலனிலோ அல்லது ஒரு பிரதேசத்திலோ விநியோகிக்கப்பட்டுள்ள நீரினை அனைத்து மக்களும் நுகர முற்படும் போது அங்கு முரண்பாடு ஏற்படுகின்றது என்பதாகும். இவ் வெளிப்படுத்துகை சார்பாகக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்து யாதெனில், இது மறைந்து போன சமூக ஏற்றத்தாழ்வினை மீள எமது சமூகத்தில் விதைக்கும் ஓர் செயற்பாடு, இதனை அனுமதிக்க முடியாது என்பதாகும்.

இங்கு கலந்துரையாடப்பட்ட இரண்டு விடயங்களையும் பாதிக்கப்பட்ட மக்களாகிய நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். உண்மை யாதெனில் அனைத்து மக்களும் ஒரு கொள்கலனில் நீரினை நுகர்வது அல்ல, அதிக மக்கள் ஓர் கொள்கலனில் நீரினை நுகர்வதாகும். நீண்ட சுற்றுவட்டாரத்தில் வசிக்கும் மக்கள் ஒரு சில கொள்கலன்களை நம்பியே நீரினைப் பெற்றுக்கொள்கின்றனர்.



இந்நிலையில் கொள்கலன் அமைக்கப்பட்ட பிரதேச மக்களால் உரிய முறையில் நீரினை நுகர்ந்து கொள்ள முடியாது இருப்பதே மனக் கசப்புகளைத் தோற்றுவிக்கின்ற போதும் மக்கள் இது தொடர்பிற் பாரியளவில் முரண்பட்டதாக தெரியவில்லை. சனத்தொகை அடர்த்திக்கு ஏற்றாற் போல் நீர்விநியோக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாமையே இதற்கு மூல காரணமாகும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

சனத்தொகை அடர்த்திக்கு ஏற்ப அனைத்துப் பிரதேசங்களிலும் தற்காலிக நீர் விநியோகம் மேற்கொள்ளப்படாமையினால் நீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்ட கொள்கலன்களில் உள்ள நீர் சுமார் இரண்டு மணிநேரத்திற்குள் முற்றாக தீர்ந்துவிடும் நிலை உள்ளது. இந்நிலையில் மக்கள் போத்தல்களைத் துவிச்சக்கரவண்டிகளில் கட்டிக்கொண்டு ஒவ்வொரு கொள்கலனாகச் சென்று குழாய்களைத் திறந்து பார்த்து நீர் கிடைக்கப்பெறும் இடத்தில் நீரை நுகர்ந்து செல்லும் ஓர் மன நெருடலான நிலையே சில பிரதேசங்களில் காணப்படுகின்றது.

உண்மை நிலைமை என்ன என்பதை அனைவரும் ஆராயத் தவறுகின்றமையும், சரியான நேரத்தில், சரியான இடத்தில், சரியான செயற்பாட்டினை உரிய பொறுப்பு வாய்ந்தவர்கள் கடமை உணர்வுடன் செய்யத் தவறுகின்றமையுமே இவ்வாறான மக்கள் மீதான தவறான கண்ணோட்டத்தினை தோற்றுவிக்கத் தூண்டுகின்றது.

3. குடிநீர்க் கொள்கலன்கள் வழங்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படும் இடங்களில் அவற்றைச் சரியான வகையிற் பயன்பாட்டிற்கு உவப்பானதாக்க ஏற்ற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிராமை. வலிகாமம் வடக்கு மற்றும் தெற்கில் வேறுபட்ட அணுகுமுறைகள் பின்பற்றப்படுகின்றமை.


4. நீர் விநியோகத்தின் போது சில கொள்கலன்களிற்கான நீர் விநியோகம் ஒரு சில தடவைகள் மட்டுமே மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை மற்றும் ஒருசீர்த்தன்மை பின்பற்றப்பட்டிராமை.


5. விநியோகத்திற்காகத் தருவிக்கப்படும் நீர்மூலம் தொடர்பான நம்பகத்தன்மை மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்படாமை.


6. பாதிக்கப்பட்ட பிரதேசத்தில் இருந்து சில சமயங்களில் பெறப்பட்டு விநியோகிக்கப்படும் குடிநீர் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுவரும் முறைப்பாடுகளின் அடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறியிருந்தமை.

7. குடிநீர்க் கொள்கலன் விநியோகம் மற்றும் நீர் விநியோகம் தொடர்பான









தொடர்ச்சியான மேற்பார்வைக்கான நெறிமுறைகள் ஏற்படுத்தப்பட்டிராமையும் அது தொடர்பாக மக்கள் அறிவுறுத்தப்பட்டிராமையும்.

8. கொள்கலன் விநியோகம் மற்றும் நீர்விநியோகம் தொடர்பாக மக்களது கருத்துக்கள் மற்றும் முறைப்பாடுகள் மேற்கொள்வதற்கான நெறிமுறைகள் உருவாக்கப்பட்டு மக்களிற்குத் தெரியப்படுத்தப்பட்டிராமை.

9. பொதுமக்களினால் முன்வைக்கப்படும் நீர்ப்பரிசோதனைக்கான வேண்டுகோள்களை நிறைவேற்றும் வகையில் நடமாடும் சேவை ஒன்றை ஆரம்பிப்பதாகவும், அதற்கான கருவிகள் தருவிக்கப்பட்டுள்ளதாகவும் இரண்டு வாரங்களாகக் கூறப்பட்டும், தீர்மானமெடுக்கப்பட்டும் உள்ள நிலையில் இதுவரை அச் சேவை மக்களை வந்தடையாமை.

10. பொதுமக்கள் தமது குறைகளையும், வேண்டுகோள்களையும் தெரிவிப்பதற்காக ஒரு பொதுவான தொலைபேசி அழைப்பெண் வழங்கப்பட்டுள்ள போதும் அதற்கு வழங்கப்பட்டிருந்த முறைப்பாடுகள் மற்றும் வேண்டுகோள்கள் தொடர்பாக உரிய கவனம் செலுத்தப்பட்டிராமை.

11. வலிகாமம் தெற்கு, வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேச செயலகங்களிற் குறித்த செயலணியின் செயற்பாட்டினைப் பரவலாக்கி மக்களை ஒன்றிணைக்கும் நோக்கில் உப அலுவலகங்களை அமைத்து மக்களிற்கான, சேவைகளை விரிவுபடுத்துவது எனத் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்த போதும் இதுவரை அச் சேவையைப் பொதுமக்களால் பெறமுடியாதுள்ளமை.

12. குறித்த இப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வு தொடர்பாக இதுவரை எட்டப்பட்டுள்ள அடைவுகள் தொடர்பாக மக்களிற்கு தெரியப்படுத்தப்படாமை.

13. குறித்த பிரச்சினைக்கான தீர்வினைப் பெறும் பொருட்டு அமைச்சரவையிற் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்ட 14/1227/513/0311ஆம் இலக்க 01.09.2014ஆம் திகதி இடப்பட்டு வெளியிடப்பட்ட அறிக்கைக்கு அமைவாகப் பணிக்கப்பட்ட நிபுணர் குழுவால் வழங்கப்பட்ட பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு உடனடித் தீர்வினை நோக்கிச் செயற்படுவதற்கான எந்த ஒரு முயற்சியினையும் இதுவரை மேற்கொண்டிராமை.

14. பாதிக்கப்பட்ட பிரதேசத்தினை அனர்த்த வலயமாகப் பிரகடனப்படுத்தும் செயற்பாடுகளில் வினைத்திறனான ஆற்றுகையினை வெளிப்படுத்தாமையும், படிமுறைச் செயற்பாடுகளை விரைவுபடுத்தாமையும்.


15. செயலணியினால் எட்டப்படும் தீர்மானங்கள் மற்றும் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் தொடர்பாக மக்களிற்குத் தெளிவான விளக்கங்களும், அறிவுறுத்தல்களும், வழிகாட்டுதல்களும் மேற்கொள்ளப்பட்டிராமை.

மேற்குறிப்பட்ட விடயங்கள் தொடர்பாக மக்களாகிய நாம் விசனம் அடைந்துள்ள நிலையில் குறித்த விடயங்கள் மீது இச் செயலணியானது அரசியல் அபிலாசைகளைக் கடந்தும், நிர்வாக முரண்பாடுகளைக் களைந்தும் மக்கள் நலன் மீது அதீத அக்கறை கொண்டு செயற்பட வேண்டுமென நாம் எதிர்பார்த்திருக்கின்றோம்.

**பாதிக்கப்பட்டும், பாதிப்பை நுகர்ந்தும் வரும் பொதுமக்கள்,**
**வலிகாமம் பிரதேசம்,**
**யாழ்ப்பாணம்.**

# ஒழுக்கநெறியை கடைப்பிடிப்பதற்கு ஆன்மீகம் அவசியமானதாகும்

## இரா.செல்வவடிவேல் தெரிவிப்பு



(யாழ்.நிருபர்)

ஒழுங்குநெறியை கடைப்பிடிப்பதற்கு பெற்றோர் தமது பிள்ளைகள் சிறுவயதிலிருந்தே ஆன்மீகத்துறையிலும் இறை வழிபாட்டிலும் ஈடுபடுத்தமுன்வர வேண்டும்.

இவ்வாறு வண்ணைசாந்தையர்மடம் ஸ்ரீகற்பக விநாயகர் ஆலய சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் 60 ஆவது ஆண்டு விழாவிலும் சிவராத்திரியை முன்னிட்டு நடைபெற்ற சமய அறிவுப்போட்டிகளுக்கான பரிசளிப்பு விழாவிலும் தலைமையுரை நிகழ்த்திய சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல் குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில், இன்று சமூகத்தில் காணப்படும் பல்வேறு பிரச்சினைகளுக்கும் காரணம் இளைய தலைமுறையினரிடையே ஆன்மீக நாட்டம் அருகிவருவதாகும்.

ஆறுமுக நாவலர் காட்டிய வழியில் சைவத்தையும், தமிழையும் வளர்க்கும் நோக்குடன் எமது கழகம் தரம் 1 முதல் க.பொ.த. உயர்தரம் வரையான மாணவர்களுக்கு சமய அறிவுப்போட்டி கோலம்போடுதல், மாலை கட்டுதல் போன்ற போட்டிகளை நடாத்திவருகிறது. இப்போட்டிகளில் தமது பிள்ளைகள் ஆர்வத்துடன் பங்கு பற்றுவதற்குப் பெற்றோர் ஊக்கமளிக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வில் கலாபூஷணம் பட்டம் பெற்ற கெங்காதரன் ஆச்சாரியார், நாகலிங்கம் ஆச்சாரியார் செல்வி விஜயலட்சுமி ஆகியோருக்கு பொன்னாடை போர்த்தி வாழ்த்துப்பத்திரம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. பிரதம விருந்தினராக வலம்புரி ஆசிரியர் ந.விஜயசுந்தரம் கலந்து கொண்டார்.

சமய அறிவுப்போட்டி மற்றும் செய்முறைப் பரீட்சைகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு, பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (10)

# கல்வி ஊக்குவிப்பு வழங்கல்



(வவுனியா)

அவுஸ்ரேலியாவில் இயங்கும் இலங்கை மாணவர் கல்வி நிதியத்தினால் வவுனியாவில் வறுமைநிலையில் கல்வியைத் தொடரும் சிறுவர்களுக்கு கல்வி ஊக்குவிப்பு வழங்கப்பட்டுள்ளது

வவுனியா வேப்பங்குளம் நலிவுற்ற மக்களுக்கான தன்னார்வ தொண்டு நிறுவனத்தில் வைத்து கடந்த சிவராத்திரி தினத்தன்று உதவிகள் வழங்கி வைக்கப்பட்டது.

இதில் நிதியத்தின் தலைவரும் எழுத்தாளருமான முருகபூபதி மாணவர்களுக்கான கல்வி ஊக்குவிப்பை வழங்கி வைத்தார்.

# பாடசாலையில் கட்டாக்காலி நாய்கள் மாணவர்களின் கல்வி பாதிப்பதாக விசனம்

(வேலணை)

தீவகத்தை சேர்ந்த அனைத்துப்பாடசாலைகளிலும் கட்டாக்காலி நாய்களினது தொல்லைகள் நாளாந்தம் அதிகரித்துக் காணப்பட்டு வருவதால் மாணவர்களின் கல்வி நிலை பாதிக்கப்படுவதாக பெற்றோர் விசனம் தெரிவிக்கின்றனர்.


பாடசாலை வளாகப்பகுதிகளில் கட்டாக்காலி நாய்களினது தொல்லைகள் அதிகரித்துள்ளதால் பாடசாலை வளாகப் பகுதி குறிப்பாக மாணவர்கள் கல்வியினைக் கற்று வருகின்ற வகுப்பறை மற்றும் சமையல் அறை, பாடசாலை முன்பகுதி, உட்படபாடசாலை சுற்றுபுறங்கள் ஆகிய இடங்கள் எல்லாம் நாய்களால் ஏற்படுத்தப்பட்டுள்ள கழிவுகளால் அசுத்தமடைந்து வருகின்றன. எனவே கட்டாக்காலி நாய்களை உடனடியாக அகற்றி உதவுவதற்கு நடவடிக்கைகளை எடுத்துதவுமாறுகோரி தீவக கல்வி வலயப் பணிப்பாளர் தி.ஜோன்ஸ் குயின்ரஸ் தீவக பிரதேசத்தில் அமைந்துள்ள நெடுந்தீவு வேலணை, ஊர்காவற்றுறை ஆகிய பிரதேச சபைகளினது செயலாளர்களை மகஜர் மூலம் பொது மக்கள் வேண்டுகோள் ஒன்றினை விடுத்துள்ளனர்.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தீவகத்தில் உள்ளஅனைத்து பாடசாலைகளிலும் உள்ள மாணவர்களுக்கான மதிய போசனத் திட்டத்தின் கீழ் மாணவர்களால் வீசப்பட்டுவருகின்ற எச்சங்கள், உணவு மிகுதிகள் என்பவற்றினை உண்ணும் நோக்குடன் கட்டாக்காலிகளாக திரியும் நாய்கள் பாடசாலை வளாகத்தில் தங்கி வாழ ஆரம்பித்துள்ளன.

எனவே கட்டாக்காலி நாய்களை பிடித்து அப்புறப்படுத்தி பாடசாலை மாணவர்கள் மற்றும் பணியாளர்களினது பாதுகாப்பிற்கு ஏற்ற வசதிகளை ஏற்படுத்தி தருமாறு தீவகத்தை சேர்ந்த மூன்று பிரதேச சபைகளினது செயலாளர்களை அந்த மகஜர் மூலம் கேட்டுள்ளனர். (05)

# உயர்தர மாணவர்களுக்கான கவிதை பயிற்சிப்பட்டறை



(முல்லைத்தீவு)

முல்லை மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் கடந்த வியாழன்,வெள்ளி ஆகிய இரு தினங்களில் கவிதைப்பட்டறையும் கருத்தாடலும் எனும் தலைப்பில் நிகழ்வொன்று நடைபெற்றது.கரைதுறைப்பற்று பிரதேச செயலர் திரேஸ்குமாரின் அனுமதியுடன் முல்லை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் செல்வி மதியரசியின் ஒழுங்கமைப்பில் இக்கவிதைப்பட்டறை நடாத்தப்பட்டது. முல்லைதாசன் உதவி புரிந்திருந்தார்.

மொழியின் தோற்றம் பற்றிய விளக்கத்துடன் ஆரம்பமாகி, கவிதை என்றால் என்ன..? கவிதையின் வகைகள், வாசகர்களின் நிலை, முல்லை மாவட்டக் கவிதைகளின் தன்மை மற்றும் சமகாலத்தில் கவிதையின் தேவையும் தாக்கமும் எனும் தலைப்புக்களில் விளக்கமளிக்கப்பட்டது.

கரைதுறைப்பற்று பிரதேசத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் உயர்தர மாணவர்களில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் இதில் கலந்து கொண்டனர். (90)

# கட்டாக்காலி கால்நடைகளை கட்டிவளர்க்குமாறு அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

நவாலி பிரதேசத்தில் நெல் அறுவடை முடிவுற்று தற்போது விவசாய பயிர்ச் செய்கையை மேற்கொண்டுள்ள விவசாயிகள் கால்நடைகளால் சிர்மத்துக்குள்ளாவதாக தெரிவிக்கின்றனர். பயிர்ச செய்கையை பாதுகாக்கும் வகையில் கால்நடைவளர்ப்பில் ஈடுபடுவோர் தமது கால்நடைகளை கட்டி வளர்க்குமாறு அப்பகுதி விவசாய சம்மேளனம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பொதுமக்கள் கால்நடைகளை கட்டாக்காலிகளாக விடுதல் வயல் வரம்புகளில் கட்டி விடுதல் என்பன தவிர்க்கப்படவேண்டும்.

மேலும் இவ் அறிவித்தலை மீறி பொதுமக்கள் கால்நடைகளை கட்டாக்காலிகளாக அவிழ்த்து விடுவார்களேயானால் பிடிக்கப்படும் கால் நடைகளுக்கு தண்டம் அறவிடப்படும் எனவும் விசாய சம்மேளனம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (66)

## முரசின் இன்றைய பலன்

(01.03.2015 ஞாயிற்றுக்கிழமை

ஜய வருஷம் மாசி மாதம் 17 ஆம் திகதி.
ஏகாதசி -திதி / சித்த - யோகம். கரிநாள்
பூனர்பூச நட்சத்திரம் பி.இரவு பின் 2.34 வரை
ராகுகாலம் 4.48-6.28 வரை - சுபநேரம் 9.28-10.58 வரை



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**
பிள்ளைக்கு குழயுரிமை கிடைத்ததால் பெற்றோரின் மனதிற்குள ஆனந்த மழைச்சாரல் பொழியும்.

**ரிஷபம்**
சாமர்த்தியமான செயல்களால் பிறரைக் கவர்ந்து காரியசித்தி ஏற்படல்

**மிதுனம்**
வாழ்க்கைத்துணையின் தேக நலத்தில் பாதிப்பு ஏற்படலாம்.

**கடகம்**
வாகனயோகங்கிட்ட சகோதரர் உதவி செய்தல்

**சிம்மம்**
ஆடம்பரப்பொருட்கள் பாரிய கடன் பிரச்சினையை ஏற்படுத்தல்.

**கன்னி**
பொருட்கொள்வனவை முன்னிட்டு திடீர் பயணம் உருவாதல்.

**துலாம்**
உதவி செய்யச் சென்று கௌரவக் குறைவை தக்கவைத்தல்.

**விருச்சிகம்**
முன்கூட்டியே திட்டமிட்டுச் செயற்பட்டதினால் பணி சிறப்படைதல்.

**தனுசு**
பலவேலைகளையும் தூக்கித் தலையில் சுமக்க நினைத்து திக்குமுக்காடல்.

**மகரம்**
உதவிகேட்டு வந்தவர்மீது சந்தேகம் மேலோங்கியதால் காய் வெட்டிவிடல்

**கும்பம்**
வாகனத்தில் செல்லும்வேளை அருகில் அமர்ந்திருப்பவர் மீது எச்சரிக்கை நன்று

**மீனம்**
சிலநாட்களாக நிலவிக்கொண்டிருந்த சந்தேகம் நீங்கியதால் மனநிம்மதி அடைதல்.

# யாழ். போதனா கழிவுகள் இருநாட்களில் அகற்றப்படும்

இருவார காலமாக அகற்றப் படாது இருந்த கழிவுகளால் யாழ்.போதனா வைத்தியசாலையின் வைத்தியர்கள், நோயாளர்கள், ஊழியர்கள் மிக அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வந்த நிலையில் அவற்றை உடன இரு நாட்களுக்குள் அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரதிப்பணிப்பாளர் எஸ்.ஸ்ரீ. பவானந்தராஜா தெரிவித்தார்.

இந்த நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்கிய உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் மற்றும் மாநகரசபை அதிகாரிகளால் அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதாக அவர் தெரிவித்தார்.

இவற்றை 2 நாட்களுக்குள் அகற்றி பிறிதொரு இடத்தில் புதைக்க நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் எதிர்காலத்தில் கழிவுகளை பொதுக்கழிவு, கிளினிக் கழிவுகள் என இரு பிரிவுகளாக பிரித்து பொதுக்கழிவுகளை யாழ். மாநகரசபையே அகற்றுவதுடன் ஆபத்தான ஊசிகள், பஞ்சுகள் போன்ற கிளினிக் கழிவுகளை சுகாதார அமைச்சுடன பேசி பிரத்தியேகமான இடத்தில் எரியூட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எனவே இதுவிடயத்தில் எமக்கு ஒத்துழைப்பு வழங்கிய அதிகாரிகளுக்கும்வைத்தியசாலையின் எல்லா பிரிவினர் சார்பாக நன்றியைத் தெரிவிப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ,25)

# மீன்பிடி வலைகள் வழங்கிவைப்பு



நாடாளுமன்ற உறுப்பினரும், ஐ.தே.கட்சியின் வன்னி மாவட்டபிரதான அமைப்பாளருமான சட்டத்தரணி ஹுனைஸ் பாரூக் முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட மீள்குடியேற்றக் கிராமங்களுக்கு அண்மையில் விஜயம் செய்தார்.

இதன்போது அம்பாள் புரம் கிராமத்திற்கு விஜயம் செய்து அவர்களின் தேவைகள் பற்றி கேட்டறிந்ததோடு அங்குள்ள மீனவர் சங்கங்களுக்கு பல இலட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி வலைகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றையும் வழங்கி வைத்தார்.

இதில் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிந்தாகரன் மற்றும் மாந்தை கிழக்கு பிரதேச சபை உறுப்பினர் பிரிந்தா ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர்.

# பொதுக்கூட்டம்

அகில இலங்கை காந்திசேவா சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 5ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு தி.இராசநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இலக்கம். 774, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அகில இலங்கை காந்திசேவாசங்க யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ள இப்பொதுக்கூட்டத்தில் சந்தா செலுத்திய அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கத்தின் தற்காலிக பொதுச் செயலாளர் சோ.க.தம்பிப்பிள்ளை அறிவித்துள்ளார். (10)

# அழகியல் போட்டிகள்

(யாழ்.நிருபர்)

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தினால் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடாத்தப்படவுள்ள கோட்ட மட்ட அழகியல் போட்டிகள் எதிர்வரும் 5ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.00 மணி முதல் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி யில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிகள் சங்கீதம், நடனம், சித்திரம், மற்றும் நாடகமும் அரங்கியலும் ஆகிய நான்கு துறைகளில் தரம் 6 முதல் தரம் 13 வரையான மாணவர்களிடையே நான்கு பிரிவுகளாக நடைபெறவுள்ளன.

கோட்டமட்டப் போட்டிகளில் பாடசாலை .மட்டப் போட்டிகளில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களை பொறுப்பாசிரியர்களுடன் வருகை தந்து கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (10)

# கடற்றொழிலாளர் சமாசத்தின் புதிய நிர்வாகம் தெரிவு

வடமராட்சி கிழக்கு கடற் றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திற்கு புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

சமாசத்தின் பொதுச்சபைக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் தாளையடியிலுள்ள வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின சமாச தலைமை அலுவலகத்தில் யாழ். மாவட்ட கூட்டுறவு திணைக்கள உத்தியோகத்தர் சண்முகம் சஜீந்திரன் தலைமையில் இடம்பெற்றது. புதிய நிர்வாகத்தின் தலைவராக உடுத்துறையைச் சேர்ந்த பொன்னுச்சாமி பிறேமதாஸ் தெரிவு செய்யப்பட்டார். உபதலைவராக நாகர்கோவில் மேற்கைச் சேர்ந்த முடியப்பு ஜோசப்ஜோன்சனும், செயலாளராக வெற்றிலைக்கேணியைச் சேர்ந்த யாக்கோப்பு எட்வின் ஜேசுராசாவும் பொருளாளராக கட்டைக்காட்டைச் சேர்ந்த ஜோசப் சூசை பெர்ணான்டோ (பொன்ராசா சம்மாட்டி) தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

நிர்வாக உறுப்பினர்களாக தாளையடியைச் சேர்ந்த ஜோன்பொஸ்கோ யோகநாதன், நாகர்கோவில் கிழக்கைச் சேர்ந்த கிட்ணபிள்ளை சிவசாமி, செம்பியன்பற்று வடக்கைச் சேர்ந்த அந்தோனி பெர்ணான்டோ நிமல்ராஜ், பொற்பதியைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் சிறீமோகன் ஆகியோரும் யாழ்.மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனப் பிரதிநிதிகளாக மாமுனையைச் சேர்ந்த வேலுப்பிள்ளை தவச்செல்வம், குடத்தனை வடக்கைச் சேர்ந்த கிட்ணபிள்ளை மனோறஞ்சன், மணற்காட்டைச் சேர்ந்த அன்ரன் உதயகுமார் மற்றும் சம்மேளனத்தின் வாக்களிக்கும் பிரதிநிதியாக கட்டைக்காட்டைச் சேர்ந்த யாக்கோப்பு நிமலன் விமலதாஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இத்தெரிவில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் அருளானந்தம் தயாளன் புதிய நிர்வாகத் தெரிவை நெறிப்படுத்தினார்.

# பதிவிறக்கப் பெட்டகம்

"மச்சான் நான் ஒரு விடுகதை சொல்றேன்... பதில் சொல்லு பார்ப்பம்"
"சரி சொல்லு"
"கால் இருக்கு நடக்காது... வாய் இருக்கு பேசாது. அது என்ன?"
"நல்லாத்தான் இருக்குது. ஆனா விடை தெரியேல்லையே... நீயே சொல்லு"
"கால்வாய்"
"ஏன்ரா... நான்தான் உனக்குக் கிடைச்சனா?"

*** *** *** ***

"மிருக வைத்தியரைப் பார்க்கோணும். உங்களுக்குத் தெரிஞ்சவர் யாராவது இருக்கிறார்களா?"
"இதுவரையிலும் போனதில்லை. உங்களுக்கு என்ன சுகமில்லை?"

*** *** *** ***

"என்னிடம் இரண்டு மாம்பழங்கள் உள்ளன. ஒரு மாம்பழத்தை சாப்பிட்டு விட்டால் மீதி என்ன இருக்கும்?"
"ஒரு கொட்டையும் ஒரு மாம்பழமும் சேர்!"

*** *** *** ***

"துவரம் பருப்பில ஓட்டை ஓட்டையா இருக்குதுங்க..."
"சரி..., சரி.., துவாரம் பருப்பு என்று வைச்சுக்கொள்ளுங்கோவன்"

*** *** *** ***

"கால்ல ரசத்தை ஊத்தினால் என்ன ஆகும்?"
"நீயே சொல்லு"
"பாதரசம் ஆகும்"

*** *** *** ***

"இந்த மாட்டுக்கு நான்தான் சொந்தக்காரன்"
"பெரியப்பாவா?...சித்தப்பாவா?"

*** *** *** ***

"எதுக்கு உன் அப்பா அகராதியைத் தலைக்கு வைத்துப் படுக்கிறார்?"
"இல்லாட்டி, அர்த்தமில்லாத கனவுகளாக வந்து துலைக்குதாம்."

*** *** *** ***

"தலைவர் அவற்றை பெயர்ப் பலகையை ஃப்ரிட்ஜ/க்குள்ள வைக்கச் சொல்றாரே... ஏன்?"
"பேர் கெட்டுடக் கூடாதென்றுதான்..."

*** *** *** ***

"உங்களுக்கு கூடப் பிறந்தவர்கள் எத்தனை பேர்?"
"நான தனியாத்தான் ஐயா..., பிறந்தேன்"

*** *** *** ***

"என்னய்யா இது?.... வீட்டுக் காவல்காரரைக் கூட்டிக்கொண்டு வந்து கடன் வேணும் என்று கேக்கிறாய்?"
"செக்யூரிட்டியோடு வந்தால் கடன் தாறன் என்று நீங்கதானே சொன்னீங்கள்".

*** *** *** ***

"..."சுப்பு இல்லம்' என்று எழுதி கொடுத்துட்டு ரெண்டு லட்சம் கடன் கேட்கிறீங்கள்?"
"நீங்கள்தானே வீட்டின் பேரில் கடன் தரப்படும் என்று சொன்னீங்கள்?"

*** *** *** ***

"ஏன் தண்ணி தெளிச்சு கோலம் போடுகினம் தெரியுமா?"
"கோலம் போட்டுத் தண்ணி தெளிச்சால் கோலம் அழிஞ்சு போயிடுமெல்லே"

*** *** *** ***

"மற்றவனுக்குப் புத்தி சொல்லுறதை எப்ப நிறுத்தப் போறாய்?"
"எனக்குப் புத்தி வந்ததும் நிறுத்தியிடுவன்"

*** *** *** ***

"நாக்கில புண் வந்திட்டுது"
"அப்ப புண்ணாக்கு ஆயிட்டாய் என்று சொல்!"

*** *** *** ***

**தரகர்:** மாப்பிள்ளை பெண்ணுடைய அம்மாவை ரொம்ப பிடிச்சிருக்கு என்று சொன்னார்.
**பெண்ணின் தந்தை:** நீங்கள் என்ன சொன்னீங்கள்...?
**தரகர்:** ரெண்டாவது கல்யாணத்திற்கு ஒத்துக்கொள்ள மாட்டாங்க... என்று சொன்னேன்.

*** *** *** ***

"யாரைக் கேட்டு அந்தக் கதிரையில இருந்தீங்கள்?"
"இருக்கத்தானே கதிரை போட்டிருக்கு. யாரைக் கேட்கவேணும்?"
"இருக்கிறதுக்கு முந்தி என்னைக் கேட்டிருக்கவேணும்"
"எதுக்கு உன்னைக் கேட்கவேணும்?"
"அழிச்ச பெயின்ற் காய்ஞ்சிருக்கா? காயேல்லையா என்று சொல்லியிருப்பேன் எல்லே"



# வடக்கில் குண்டுகள் வெடிக்கவில்லை
# அமைதியாக உள்ளது யாழ்ப்பாணம்
## இராணுவத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் குண்டு வெடித்ததாகவும், வடக்கிலுள்ள இராணுவத்தினர் மீதும், இராணுவ முகாம்கள் மீதும் தாக்குதல் நடாத்தப்படுவதாகத் தென் பகுதியில் மேற்கொள்ளப்படும் பிரசாரங்களில் எவ்வித உண்மையும் இல்லை என புதிய இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் கிருஷாந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

21 ஆவது இராணுவத் தளபதியாக நியமனம்பெற்ற சில்வா நேற்று கண்டிக்கு விஜயம் செய்து தலதா மாளிகையில் வழிபாடுகளில் ஈடுபட்டதுடன், பின்னர் அஸ்கிரி, மல்வது மகா நாயக்கத் தேரர்களை சந்தித்து ஆசிர்வாதம் பெற்றுக்கொண்டார்.

இதனையடுத்து அங்குகூடியிருந்த ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவித்த இலங்கையின் புதிய இராணுவத் தளபதி கிருஷாந்த டி சில்வாவிடம், வடக்கிலுள்ள இராணுவ முகாம்கள் மீது தாக்குதல் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படும் குற்றசசாட்டுக்கள் தொடர்பில் ஊடகவியலாளர் கேள்வி எழுப்பினர். இதற்குப் பதிலளித்த அவர்,

"அவை அப்பட்டமான பொய்கள். அவ்வாறான எந்தவித சம்பவங்களும் இடம்பெறவில்லை. அதேபோல் நாட்டின் பாதுகாப்பு விடையத்தில் இராணுவத்தினரால் மேற்கொள்ள வேண்டிய அனைத்து கடமைகளும், பொறுப்புக்களும் நாம் நிறைவேற்றுவோம். அந்த விடையத்தில் எவ்வித குறைபாடும் இருக்காது. அதேபோல் சந்தேகமும் கொள்ளத் தேவையில்லை"

"இலங்கை இராணுவம் என்பது நாட்டை பாதுகாத்த மிகவும் கௌரவமிக்க, நீண்ட வரலாறு உடைய ஒரு கட்டமைப்பு. அதனால் நான் எனது பதவிக்காலத்தில் நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு முன்னுரிமை கொடுத்து செயற்படுவேன். குறிப்பாக நாட்டின் பாதுகாப்பே இராணுவத்திற்குரிய தலையாய கடமை. பாதுகாப்பு தொடர்பில் மேற்கொள்ளவேண்டிய அனைத்தையும் செய்வேன். அதேபோல் இராணுவத்தின் ஒழுக்கம் பேணபபட வேண்டியது அவ்சியமானது.

அதனால் ஒழுக்கத்தை பேணுவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வேன். அதன்மூலம் இராணுவத்தின் கௌரவத்தை பாதுகாக்க நடவடிக்கை எடுப்பேன். உச்ச அளவில் ஒழுக்கத்தை பாதுகாத்துக்கொண்டதும், தொழில் சார் நிபுணத்துவமும் கூடிய ஒரு இராணுவக் கட்டமைப்பாக இலங்கை இராணுவம் திகழ்கின்றது.

இதனால் இலங்கை இராணுவத்திலுள்ள அதிகாரிகளோ, அதேபோல் சிப்பாய்களோ எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இராணுவ ஒழுக்கத்தை மீறி செயற்பட்டதில்லை. அவர்கள் உச்ச அளவில் இராணுவ ஒழுக்கத்தை பாதுகாப்பவர்களாகவே உள்ளனர். குறிப்பாக ஒழுக்கத்தை பேணிக்கொண்டு தொழில்சார் நிபுணத்துவத்துடன் செயற்படும் போது அனைத்து மட்டங்களிலும் இலங்கை இராணுவத்திற்கு கௌரவம் கிட்டுகின்றது. அதனாலேயே ஐக்கிய நாடுகள் சர்வதேச அமைதிப்படையில் அங்கம் வகிக்கும் இலங்கை இராணுவத்தினர் தொடர்பில் மிக உயரிய மதிப்பு இருக்கின்றது. சர்வதேச மட்டத்தில் எமது இராணுவத்தினரை மதிக்கும் அதே வேளை அவர்களை முழுமையாக ஏற்றுக்கொள்வதற்கும் இதுவே காரணமாகும்" என்றும் இராணுவத் தளபதி கூறியுள்ளார்.

# யுத்த வெற்றிக்காக யுத்த குற்றத்தை ஏற்கமுடியாது



(கொழும்பு)

"இறுதிப் போரில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்த உண்மைகள் கண்டறியப்படுவது நல்ல விடயம். போர் வெற்றியைக் காரணம் காட்டி குற்றமிழைத்த எவரும் தண்டனையில் இருந்து தப்பிக்கவோ அல்லது தண்டனை வழங்கப்படாமலோ இருக்க முடியாது" இவ்வாறு சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவரும் கோட்டை நாக விகாரையின் விகாராதிபதியுமான மாதுளுவாவே சோபித தேரர் தெரிவித்தார்.

உண்மையைக் கண்டறிவதன் மூலமாக இவ்விடயத்தில் தெளிவைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். பாப்பரசர் முதற்கொண்டு உலகத் தலைவர்கள் பலரும் உண்மையைக் கண்டறிய வேண்டும் என தெரிவித்த கருத்துடன் உடன்படுவதாகக்கூறிய சோபித தேரர், மறைப்பதற்கு இவ்விடயத்தில் ஏதுமில்லையல்லவா என்றும் தெரிவித்தார். இறுதிப்போரில் போர்க்குற்றங்கள் உட்பட பாரிய மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றதான குற்றச் சாட்டுக்கள் கடந்த 5 வருடங்களுக்கும் மேலாக இலங்கை மீது சர்வதேச அழுத்தங்களைக் கொடுத்து வருகின்றது.

இந்நிலையில், இலங்கைக்கு அண்மையில் விஜயம் செய்திருந்த பரிசுத்த பாப்பரசர் பிரான்ஸிஸ் உட்பட உலகத்தலைவர்களும் இறுதிப் போரில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்த உண்மைகள் வெளிக்கொணரப்பட வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளனர். இவ்விடயத்தில் உங்கள் நிலைப்பாடு என்னவென்று சோபித தேரரிடம் வினவியபோது, "உண்மைகள் கண்டறியப்படுவது நல்ல விடயமே. உண்மைகளைக் கண்டறிவதனூடாக நாம் தெளிவுபெறமுடியும்" என்றும் குறிப்பிட்டார்.

போர் வெற்றியைப் பெற்றுக் கொடுத்தமைக்காக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அனைத்துக் குற்றச்சாட்டுக்களிலிருந்தும விடுவிக்கப்படவேண்டும் என சில தரப்பில் முன் வைக்கப்படும் கோரிக்கைகள் குறித்து வினவிய போது, "போர் வெற்றிக்கான கௌரவம் அவருக்கு வழங்கப்பட் வேண்டும். ஆனால், அவர் மட்டுமே போர் வெற்றிக்கு காரணமல்ல.

அப்படியென்றால் சரத் பொன்சேகா தேங்காய் உரித்துக் கொண்டிருந்தாரா? போர் வெற்றியைப் பெற்றதற்காக வேறு குற்றங்களை இழைத்திருந்தால் தண்டனை வழங்காது இருக்க முடியாது. போதுமான சாட்சியங்கள் இருக்குமிடத்தில் குற்றச்சாட்டுகளுக்கு தராதரம் பார்க்காது தண்டனை வழங்கப்படவேண்டும் என்பதே எமது நிலைப்பாடு" என்றார்.

# லண்டன் விபத்தில் தமிழ்ப் பெண் மரணம்

(கொழும்பு)

லண்டனில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த தமிழரான இரண்டு பிள்ளைகளின் தாய் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மேற்கு Hendon இல் வீதியைக் கடப்பதற்கு குறித்த பெண முயற்சித்தபோது வேகமாக பயணித்த கார் அவர் மீது மோதியதால் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

இந்த விபத்து கடந்த 22 ஆம் திகதி காலை 6 மணிக்கு இடம்பெற்றது. இந்த நிலையில் தலையில் பலத்த காயங்களுடன் வைத்திய்சாலைய்யில் சிகிச்சைப் பெற்றுவந்த அவர் சிகிச்சை பலனின்றி நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்தில் 44 வயதுடைய சுபாஹரி சோதிலிங்கம் என்ற பெண்ணே உயிரிழந்திருப்பதாக லண்டன் ஈவினிங் ஸ்டேன்டர்ட் ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த 1992 ஆம் ஆண்டு ஹட்டனிலுள்ள பாடசாலையில் கல்விபயின்றுள்ள சுபாஹரி சோதிலிங்கம் மற்றும் செல்லத்துரை ஆகிய இருவரும் திருமணமாகி ஒன்றாக வாழ்ந்துவந்த நிலையில் அவரது கணவ; உயிர் அச்சுறுத்தல் காரணமாக கடந்த 2006 ஆம் ஆண்டு இலங்கையில் இருந்த லண்டனுக்கு புலம்பெயர்ந்திருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சுமார் 8 வருடங்களாக தனது கணவரைப் பிரிந்திருந்த சுபாஹரி சோதிலிங்கம் கடந்த 5 மாதங்களுக்கு முன்னரே லண்டனுக்கு வந்திருந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தினமுரசுக்கு வந்த கடிதம்

– கல்லுண்டாய் பேரிடருக்கு –

# வலி.தென்மேற்கு தவிசாளர் சட்டத்தின் முன்கொண்டு செல்வாரா?

நவாலி – ஆனைக்கோட்டை – கல்லுண்டாய் – காக்கை தீவில் வாழும் மக்களை காப்பாற்ற வேண்டிய அரசே இன்று மக்களை "கழிவு குதத்தால்" அழித்து வருகின்றது.

வலி.தென்மேற்கில் சேரும் நாளாந்த கழிவுகளை கொட்டுவதற்கும் முறையான ஓர் திண்மக்கழிவு செயன்முறையின் கீழ் அபாயமற்ற ஓர் முறையில் கழிவகற்றுவதற்கென மானிப்பாய் பிரதேச சபை தனக்கென கல்லுண்டாய் வெளியை பயன்படுத்தி வந்தது.

இந்நிலையில் யாழ்.மாநகர சபை எந்தவித உபாயமும் இன்றியும் மானிப்பாய் பிரதேச சபையின் அனுமதியின்றியும் மத்திய சுற்றாடல் அதிகார சபை (central Env.Authority), காரையோர பாதுகாப்பு திணைக்களத்தின் (Coast Conservation Dept) அனுமதியின்றி சட்டத்திற்கு முரணாக மக்களை அழிக்கும் நோக்குடன் செயற்பட்டு வந்தது.

பின்னர் வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையின் தவிசாளர் சி.சி.மகேந்திரன் கல்லுண்டாய் கழிவு குதத்தினால் ஏற்படும் ஆபத்து குறித்தும் எதிர்காலத்தில் மக்களுக்கு ஏற்படப் போகும் "பேரிடர்" குறித்தும் ஊடகங்கள் வாயிலாக செய்திகளை பரவலடையச் செய்திருந்ததுடன் வடமாகாண ஆளுநர் முதலமைச்சர், உள்ளூராட்சி (வடக்கு) உதவி ஆணையாளர் யாழ்.அரசாங்க அதிபர், மத்திய சுற்றுச் சூழல் அதிகார சபை, அனர்த்த முகாமைத்துவ உதவி பணிப்பாளர், யாழ். மாநகர ஆணையாளர், மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி, பிரதேச செயலாளர் (வலி. தென் மேற்கு) வடக்கு சுகாதார அமைச்சர், வடக்கு சூழல் அமைச்சர் பிராந்திய உள்ராட்சி உதவி ஆணையாளர் ஆகியோருக்கும் தனது கடிதத் தலைப்பு ஊடாக அறிவித் திருந்தார்.

அத்துடன் மலக்கழிவு, திண்மக்கழிவு, ஆஸ்பத்திரி கழிவு, கால்நடை கழிவு மற்றும் கழிவுகளால் ஏற்படப்போகும் (புற்றுநோய், ஆஸ்மா, சுவாச நோய், குதவழிநோய்) ஆபத்து குறித்தும் தெளிவாக விளக்கியிருந்தார்.

கடந்த 14 ஆண்டு காலங்களில் உள்ள மானிப்பாய் பிரதேச சபையின் செயலாளர் ஆட்சி மற்றும் கடந்த கால சபை தவிசாளர் ஆட்சிக்காலத்தில் உள்ள பிரதேச சபை தவிசாளர்கள் எந்தவிதமான அக்கறைகளையும் முயற்சிகளை எடுக்காத சூழலிலேயே இன்று மனிதனை தாக்கி அழிக்க கூடிய "எபோலா" போன்ற (Epola) வைரஸ்ஸை உருவாக்கும் "தாக்கம்" கல்லுண்டாய் ஊடாக உருவாக உள்ளது.

இந்நேரத்தில் சபைத்தவிசாளர் சி.சி.மகேந்திரன் எடுக்கும் முயற்சிக்கும் கௌரவ சபையின் உறுப்பினர்களாகிய நாம் உங்களுக்கு கைகொடுப்போம் முற்றுமுழுதாக உதவிக்கரம் நீட்டுவோம்.

மாநகர கழிவுகளை அல்லது வேறு தனியார் மற்றும் ஏனைய சபைகளின் கழிவுகளை கொட்டாதவாறு தாங்கள் "சட்டத்தின் முன்" நடவழக்கை எடுத்து எமது பிரதேச மக்களை காப்பாற்றுங்கள் அழிவிருந்து இடரிலிருந்து மீட்சி பெறச் செய்யுங்கள்.

கடந்த இருவாரத்திற்கு முன்னர் மன்னார் பிரதேச டாக்டர் திண்மக் கழிவு முகாமைத்துவ நிபுணர் Dr.கே.அரவிந்தன கூறுகையில்,

யாழ்.மாநகர ஆணையாளர் கல்லுண்டாயில் கழிவுகளை மலக்கழிவுகளை கொட்டுவது எரிப்பது என்பது அயற்கிராம மக்களின் 3 ஆவது சந்ததியை அழிக்க தயாராகி விட்டது என்பதே பொருள்படும் என்றார்.

மேலும் அங்கு வாழும் மக்களின் எதிர்கால குழந்தைகள் 5 வருடங்களில் ஊனமாகவும் குருடாகவும், செவிடாகவும், வாய்பேசமுடியாத சுழல் மற்றும் அங்கவீனமான நிலையிலே பிறக்கவுள்ளது என்ற அதிர்ச்சிச் செய்தியையும் வெளியிட்டுள்ளார்.

இந்நிலையில் நவாலி – ஆனைக்கோட்டை மக்களால் ஒன்றிணைந்து எடுக்கப்பட்ட "மக்கள் சக்தி" போராட்டம் முன்வந்து செயற்பட்டது.

எனினும் அக்குழுவில் அரசியல் லாபம் தேட சிலர் உள்நுழைந்ததால் கல்லுண்டாய் சுற்றுச் சூழல் குழுவும் தற்போது மக்கள் முன்செயலிழந்து வலுவிழந்து விட்டது. மக்களும் வெறுப்படைந்து விட்டனர். ஏனெனில் பிழையான தீர்மானத்துக்கு கைகொடுத்த விடயத்தால் ஆகும்.


எனவே இனிவரும் காலங்களில் மறியற்போராட்டம், மக்கள் சக்தி போராட்டம், உண்ணாநோன்பு போன்றன எல்லாம் செயலருப்பெறாது எனவே கௌரவ தவிசாளர் அவர்களே, நாம், எமது மக்கள் காப்பாற்றப்ப வேண்டும் எனவே தவிசாளர் சி.சி.மகேந்திரன் சட்டத்தின் முன் செயற்பட்டு மாநகரகழிவுகள் நிரந்தரமாக கொட்டுவதற்கான தடை உத்தரவினை நீதிமன்றம் ஊடாக பெற்று மக்களை பேரழிவிலிருந்து உடன் காப்பாற்றுமாறு வேண்டி நிற்கின்றோம். சட்டம் நீதியின் முன் வெல்லும் .

நன்றி.


பிரதேச சபை,
மானிப்பாய்,
வலி.மேற்கு.

62. கவிதையில் குறிப்பிடப்பட்ட பழம் என்ன?

முக்கனிகளில் ஒருவன்
முளைத்திட ஒரு வித்துண்டு
தனிப்பழம் இவன் ஆவான்
தாங்கள் விரும்பும் பழம் ஆவான்




63. தரப்பட்டுள்ள அடைப்புக்களில் உள்ள உருக்களைப் பார்க்க ஒவ்வோர் உருவுக்கும் ஆங்கில எழுத்துக்கள் இடப்பட்டுள்ளன.




உதாரணத்தை அவதானித்து தொடர்பினை விளக்கி விடையைத் தெரிவு செய்க

AH

(1) BF, EC, DG (2) DF, BC, EG (3) EC, BG, DF

(13) பின்வரும் பாடலை வாசித்து 64ஆம், 65ஆம் வினாக்களுக்கு விடை எழுதுக

மாறும் சுற்றுச் சூழலிலே
மாசுகள் செய்து கொடுக்காமல்
போற்றும் பொதுச்சொத்து அழிக்காமல்
பேணிக் காப்பது ஒழுக்கம் என்போம்

64. நாம் அழிக்காமல் போற்ற வேண்டியது
(1) பொதுச்சொத்து (2) ஒழுக்கம் (3) சூழல்

65. சூழல் என்பது
(1) ஊர் (2) மனிதர் (3) சுற்றாடல்

66. "அடாது செய்பவர் படாதுபடுவர்" என்பதன் கருத்து
(1) நன்மை செய்பவர் துன்பம் அனுபவிப்பர்
(2) சிறுவயதுப் பழக்கம் பெரியவர் ஆனாலும் மாறாது
(3) அநியாயம் செய்தால் துன்பம் நேரிடும்

67. மிகவும் குழப்படியான கமலன் கல்வியில் பின்னடைவான ஒரு மாணவன் இப்போது புதிதாக வந்த கபிலன் மிகவும் கெட்டிக்காரன். இப்போது கமலனும் கபிலனும் நண்பர்கள் மட்டுமல்ல கமலனில் முன்னரை விட சிறியமாறுதல்களும் காணப்படுகின்றன
இந்நிலையை நன்கு வெளிப்படுத்தும் கூற்று
(1) பூவோடு சேர்ந்த நாரும் மணம் வீசும்
(2) குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்
(3) பழகப்பழக பாலும் புளிக்கும்

**நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்**

(01). 1. ஏப்ரல் 2. 400 3. ஜனவரி, மே 4.1875 5.25 6.1400ரூபா 7. உருiii 8. 4990ரூபா
9. 6160 10. 3 (02).11. ஜீவன் 12.ரமேஷ் 13.குமார் 14.தினேஷ் 15.100ml 16.1250ml
17.1250ml 18.அங்கர், SMA, லக்டோஜன், NAAN 19.16 20.20 21.9 22.21
23.5 24.21 25.20 26.10 27.8 (03).28.350இறாத்தல் 29.100 30.25kg
31.600 32.140 (04).33.45L 34.105L 35.40L 36.660ரூபா 37.20
(05).38.36ரூபா 39.63ரூபா 40.45ரூபா 41.89ரூபா 42.51ரூபா 43.234ரூபா (06).44.கார்
45.சைக்கிள் 46.2 47.கார், பஸ், வண்டி 48.54 (07).49.57 50.5,14 51.2,13

**பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்**



## தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை முன்னோடி- 2015

பகுதி - I
1 மணி 15 நிமி

# கல்வி முரசு



(01) பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக

நாம் வாழும் சூழலில் அதிகளவான தாவரங்களைக் காணமுடியும். இவற்றினால் பல நன்மைகள் மனிதனுக்குக் கிடைக்கின்றன. தாவரங்களை செடி, கொடி, புல், பூண்டு என வகைப்படுத்தலாம். தாவரத்தின் பகுதிகளாக இலை, தண்டு, பூ, காய், வேர், கிளை, கனி என்பவற்றைக் குறிப்பிடலாம். தாவரங்களும் மனிதனைப்போல் சுவாசிக்கின்றன. தாவரங்கள் காபனீரொட்சைட்டை உள்ளெடுத்து ஒட்சிசனை வெளியிடுகின்றன. மேலும் தாவரங்கள் உணவுக்காகவும், மூலிகை மருந்துக்காகவும், தளபாடம் செய்தல் போன்றவற்றிற்காகவும் பயன்படுத்தப்படுகின்றன.

1. உமது சூழலில் காணப்படும் தாவரங்களை வகைப்படுத்துக
..............................................................

2. மேற்குறிப்பிட்ட பந்திக்கு பொருத்தமான தலைப்பொன்றினை எழுதுக?
..............................................................

3. தாவரத்தின் பகுதிகளின் பெயர்கள் 3 தருக?
..............................................................

4. தாவரத்தினால் கிடைக்கும் பயன்கள் 2 தருக?
..............................................................

5. கொடிவகைத் தாவரம் ஒன்றின் பெயர் தருக?
..............................................................

6. தாவரங்களின் சுவாசத்திற்கு பயன்படும் வாயு எது?
..............................................................

7. மரம் என்பதற்கு ஒத்தகருத்துள்ள சொல் ஒன்று தருக
..............................................................

8. "தாவரங்களால் நாம் பலநன்மைகளைப் பெறுகின்றோம்" இவ் வாக்கியத்தின் எழுவாயை எழுதுக
..............................................................

9. கொடியாக வளரும் 2 மரங்கள் தருக?
..............................................................

10. விழுதுகளைக் கொண்ட மரம் ஒன்றின் பெயர் தருக?
..............................................................

(02) பின்வரும் சொற்களுக்கு ஆங்கிலச்சொற்களை எழுதுக

11. தலை .................... 12. கடதாசி ....................
13. வீதி .................... 14. இலை ....................

(03) பின்வரும் சொற்களுக்குரிய தமிழ்ச்சொல்லை எழுதுக

15. Office .................... 16. Airport ....................
17. Swimming .................... 18. Hoppy ....................


(04) பின்வரும் சொற்களுக்குரிய சிங்களச்சொல்லை எழுதுக

19. ஆசிரியர் .................... 20. மாம்பழம் ....................
21. வெள்ளை .................... 22. ஒன்று ....................

**(05) இணைக்குக**


| | |
|---|---|
| 23. மல்லி | சோறு |
| 24. கெதர | தம்பி |
| 25. பாசல | பாடசாலை |
| 26. பத் | நான் |
| 27. மம | வீடு |

**(06) கார் ஒன்று வாரத்திற்கு ஐந்து நாட்கள் பிரயாணஞ் செய்த தூரத்தை இவ்வரைபு காட்டுகின்றது. வரைபினை அவதானித்து வினாக்களுக்கு விடையளிக்க**




28. கூடுதலான தூரம் பிரயாணம் செய்த நாள் எது?
..............................................................
29. குறைவான தூரம் பிரயாணம் செய்த நாட்கள் எவை?
..............................................................
30. வியாழன், வெள்ளி ஆகிய தினங்களில் பயணஞ் செய்த மொத்தத் தூரம் எவ்வளவு?
..............................................................
31. சம அளவான தூரம் பிரயாணம் செய்த நாட்கள் எவை?
..............................................................
32. ஐந்து நாட்களும் பிரயாணம் செய்த தூரம் யாது?
..............................................................

**(07) பின்வரும் வினாக்களுக்கு படத்தினை அவதானித்து விடை தருக**





33. குடையானது சாயிக்கு எத்திசையில் காணப்படுகின்றது?
..............................................................
34. புத்தகத்திற்கு மேற்கே உள்ளவை எவை?
..............................................................
35. சாயியின் தென்கிழக்குத் திசையில் உள்ள பொருள் எது?
..............................................................
36. தொலைக்காட்சிக்கு வடக்கே உள்ள 2 பொருட்களின் பெயர்கள் தருக?
..............................................................
37. பந்திற்கு தெற்கேயுள்ள இரண்டு பொருட்களின் பெயர்களை எழுதுக?
..............................................................

**(08) பின்வரும் கூற்று சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் எழுதுக**

38. இலங்கையின் தேசிய விளையாட்டு எல்லே ஆகும் ( )
39. தேசிய கீதத்தை பாடும்போது நாம் இலகுநிலையில் நிற்றல் வேண்டும் ( )
40. காற்றாடியின் மூலம் காற்றைப் பெறமுடியாது ( )
41. வீணை ஒரு இசைக்கருவியாகும் ( )
42. நாம் தினமும் குளித்தால் நோய்கள் எம்மைப் பிடிக்கும் ( )




**(09) கீழே தரப்பட்டுள்ள உருவினை அவதானித்து விடையளிக்க**




43. இவ்வுருவின் பரப்பளவு யாது?
..............................................................
44. இவ்வுருவின் சுற்றளவு யாது?
..............................................................

**(10) அருகில் தரப்பட்டுள்ள இலங்கைப்படத்தினை அவதானித்து இலக்கங்கள் குறிக்கப்பட்டுள்ள புள்ளிக்குரிய இடத்தின் பெயர்களை எழுதுக**





45. ..............................................................
46. ..............................................................
47. ..............................................................
48. ..............................................................
49. ..............................................................
50. ..............................................................

51. ஒரு மூட்டை நெல்லின் நிறை 72kg எனின், 12 மூட்டை நெல்லின் நிறை எத்தனை kg ஆகும்?
..............................................................

52. ஒரு பாடசாலையில் சிறுவர்களுக்கு பங்கிட்டு கொடுப்பதற்காக 416 பொதிகள் கிடைக்கப்பெற்றன. ஒவ்வொரு மாணவருக்கும் 8 பொதிகள் கொடுக்கப்படுமாயின் எத்தனை மாணவர்களுக்கு அப்பொதி பிரித்துக் கொடுக்கப்படும்?
..............................................................

53. உருவில் நிழற்றப்பட்ட பகுதியினை பின்னத்தில் எழுதக



..............................................................

54. 5kg 500g ஐ கிராமில் (g) மாற்றிக்காட்டுக
..............................................................


**(11) கீழ்வரும் பந்தியினை வாசித்து மீதிப்பகுதியை சரியான எழுவாய் பயனிலைகளுடன் உமது உரைநடையில் எழுதுக**

நான் வீதியோரம் சென்று கொண்டிருந்த போது பேருந்து ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் திடீரென மோதிக்கொண்டன. அப்போது நான் ............

55. ..............................................................
56. ..............................................................
57. ..............................................................
58. ..............................................................
59. ..............................................................
60. ..............................................................

**(12) 61 முதல் 63வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றில் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக**

61. பின்வரும் பாடலில் விபரிக்கப்பட்டுள்ள பறவையைத் தெரிவு செய்க
வெள்ளை நிறத்தை உடையது
குளத்தின் கரையில் நிற்பது
நீண்ட சொண்டு உடையது
ஒற்றைக்காலில் நின்றுமே
பெரியமீன் வரம் கேட்பது



# கிழக்கு மாகாண அமைச்சு பதவிகள் சம்பந்தனின் தன்னிச்சையான போக்கு



## பலமுனைகளில் கண்டனம்

கிழக்கு மாகாண சபைக்காக த.தே.கூட்டமைப்பிற்கு வழங்கப்பட்ட இரு அமைச்சுப் பதவிகளுக்கும், பிரதி தவிசாளர் பதவிக்குமான தெரிவு எமக்கு மிகுந்த மனவேதனையை அளிப்பதாக உள்ளது. தமிழ் தேசியக் கூட்டமைப்பில் மீண்டும் மீண்டும் உட்கட்சி ஜனநாயகம் மறுக்கப்படுவதை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அமைச்சுப் பதவி தொடர்பில் த.தே.கூட்டமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் கட்சிகளுடன் கலந்தாலோசிக்காமல், கட்சிகளுக்கு பங்கிட்டு வழங்காமல் தனியே சம்பந்தர் ஐயா மாத்திரம் எடுத்த தன்னிச்சையான இத்தெரிவை நாம் மிகுந்த வருத்தத்துடன் நிராகரிக்கின்றோம்.

கிழக்கு மாகாண அமைச்சரவை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே தமிழ் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.ஆர்.எல்.எவ் செயலாளருமாகிய சிவசக்தி ஆனந்தன் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

கடந்த 24 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற கிழக்கு மாகாணசபை உறுப்பினர்களுடன் த.தே.கூ.தலைவர் சம்பந்தன் ஐயா கலந்துரையாடிய பின்னர் மூவரது பெயரையும் பரிந்துரைத்துள்ளார். அதற்குள் கிழக்கு மக்களால் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட எமது கட்சியின் மூத்த பிரதிநிதியும் கிழக்கு மாகாணத்தில் அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றவரும் எமது கட்சியின் உபதலைவருமான இரா.துரைரட்ணம் உதாசீனம் செய்யப்பட்டதை நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமுடியாது.

இவ்வாறான புறக்கணிப்பை நாம் எதிர்பார்க்கவுமில்லை. தன்னிச்சையான முடிவை நாம் ஏற்க முடியாது. கிழக்கு மாகாணசபையில் த.தே.கூட்டமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் நான்கு கட்சிகளுக்கும் தலா ஒரு பிரதிநிதி அல்லது கிழக்கில் அதிகூடிய வாக்குகளைப் பெற்றவர் என்ற அடிப்படையில் தெரிவு இடம்பெற்றிருக்கலாம். அதுவும் த.தே.கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளின் தலைவர்களான சுரேஸ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், த.சித்தார்த்தன் ஆகியோர் அழைக்கப்படாமல் தனியே சம்பந்தன் ஐயா மாத்திரம் தன்னிச்சையாக முடிவை அறிவித்திருப்பதையும் ஏற்றுக்கொள்ள முடியாது.

ஒடுக்குமுறைக்கு எதிராகவே தமிழ்ச் சமூகம் போராட்டத்தைச் சந்தித்து வந்துள்ளது. அந்த ஒடுக்குமுறை தமிழ்த் தலைமையின் மத்தியிலிருந்து வருமானால் அதுவும் எதிர்க்கப்பட வேண்டியதே. உண்மையான ஐக்கியத்தையும் ஜனநாயகத்தையும் சமத்துவத்தையும் நேசித்தே தமிழ் மக்கள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கு வாக்களித்து வந்துள்ளனர். அதனை சம்பந்தன் ஐயா புரிந்துகொள்வார் என்று நாம் எதிர்பார்க்கின்றோம். சர்வாதிகாரம் எங்கே கொண்டுபோய் விடும் என்பதற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வாழ்க்கையே நல்ல உதாரணமாகும்.

துரைரட்ணம் மறுதலிக்கப்படமுடியாதவர் கிழக்கு மாகாணசபை வரலாற்றில் தொடர்ந்து 3 தடவைகள் அங்கம் வகித்து வருபவரும், கிழக்கில் அதிகூடிய விருப்பு வாக்குகளை பெற்றவரும் சதா மக்களுடன் இணைந்து சேவையாற்றி மக்கள் நன்மதிப்பைப் பெற்றவருமான இரா.துரைரட்ணம் கிழக்கில் மட்டுமல்ல இலங்கையிலும் சர்வதேச மட்டத்திலும் நன்கு அறிமுகமானவரும் அவர்களின் அபிமானத்தைப் பெற்றவருமாவார் என்பதை நான் சொல்லித்தான் சம்பந்தன் ஐயா தெரிந்துகொள்ள வேண்டும் என்பதில்லை. உண்மையில் அவர் ஒரு போராளியாகத்தான் கட்சியில் இணைந்தவர்.

இந்த அமைச்சுப்பதவியை சற்றும் எதிர்பார்க்காதவர். ஆனால் த.தே.கூட்டமைப்பிற்கு அமைச்சர் பதவிகள் என்று வருகின்றபோது கூட்டமைப்பின் வெற்றிக்கு அளப்பரிய பங்காற்றிய கட்சி என்ற அடிப்படையில் அதனைப் பெறுவதற்கு எமக்கும் தார்மீக உரிமையுண்டு என்பதை சம்பந்தன் ஐயாவால் மறுக்கமுடியாது. இணைந்த வடகிழக்கு மாகாணசபை உருவாவதற்கும் அதனை நிலைபெறச் செய்வதற்கும் கிழக்கிலிருந்து ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சிப் போராளிகள் பலர் தமது இன்னுயிரைத் தியாகம் செய்துள்ளார்கள். அந்த நேரத்தில் துரைரட்ணம் ஆற்றிய பணிக்கான அங்கீகாரமாகவே மட்டக்களப்பு மக்கள் அவரைத் தொடர்ந்தும் மாகாண சபைத் தேர்தலில் அதிகூடிய விருப்பு வாக்கினை வழங்கிவருகின்றனர். தற்போது ஒரு கூட்டு மந்திரிசபை என்று வரும்போது அவரைப் புறந்தள்ளி அமைச்சரவைத் தெரிவு இடம்பெறுவதனை எம்மால் ஏற்க முடியாதுள்ளது. மறுபரிசீலனை வேண்டும்! எனவே தெரிவை மறுபரிசீலனை செய்து கூட்டமைப்புத் தலைமைகள் இணைந்து சுமுகமான முறையில் பதவிகளை பகிர்ந்து வழங்கும் வகையில் நீதியான நியாயமான தீர்க்கமான தெரிவை மேற்கொள்ள வேண்டும்.

இதே தவறு வடக்குமாகாணசபையை அமைக்கும்போதும் இடம்பெற்றிருந்தமையை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். மத்தியில் நல்லாட்சி தேசிய அரசாங்கம் என்ற கோஷங்கள் வலுப்பெறுகின்ற அதேவேளை, கிழக்கிலும் சர்வகட்சி அரசாங்கம் எனும் கருத்து மேலோங்கியுள்ளது. அந்தச் சிந்தனை கூட்டமைப்பிற்குள்ளும் உள்வாங்கப்பட்டு அங்கத்துவக் கட்சிகளுக்கும் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும் என்று எமது கட்சி பெரிதும் விரும்புகின்றது. மக்களின் விருப்பு அபிலாசைகளுக்கு கட்சிகள் அதன் தலைமைகள் கட்டாயம் மதிப்பளிக்கவேண்டும்.

எனவே நியாயமான இறுதியான தெரிவை கட்சித்தலைமைகள் பகிரங்கமாக அறிவிக்கவேண்டும்.

த.தே.கூட்டமைப்பிற்குள் ஜனநாயம் வெளிப்படைத்தன்மை நிலவவேண்டும். தனிநபர் சர்வாதிகாரப் போக்கினால் இன்று மக்களாலும் ஊடகங்களாலும் த.தே.கூட்டமைப்பு தொடர்ந்து கடுமையான விமர்சனத்திற்குள்ளாகி வருகிறது. புலம்பெயர் சமூகமும் எமது மக்களும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பையே சந்தேகக்கண்கொண்டு பார்க்கும் நிலை தோன்றியுள்ளது. சம்பந்தர் ஐயா இது போல பல தடவைகள் தன்னிசசையாக முடிவெடுத்து ஏனையோரை ஓரங்கட்டியுள்ளார்.

2012 ஆம் ஆண்டு ஜெனிவா மனித வுரிமைகள் மாநாட்டிற்குச் செல்வோம் என்று கூட்டமைப்பின் கூட்டத்தில் அறிவித்துவிட்டு இறுதியில் போகமாட்டோம் என்று சொன்னதிலிருந்து, யாழ்ப்பாணத்தில் மேதின வைபவத்தில் சிங்கக்கொடி ஏந்தியமை, கொழும்பில் இடம்பெற்ற சுதந்திர தினத்தில் தமிழரின் மரபைமீறி பங்கேற்றமை போன்றவை பல சந்தர்ப்பங்களில் கூட்டமைப்பின் ஏனைய தலைமைகளை கலந்தாலோசிக்காமல் தன்னிச்சையாக சர்வாதிகாரமாக முடிவெடுத்து செயற்பட்டமைக்கான சில உதாரணங்களாக அமைகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

# மைத்திரி லண்டனுக்கு அடுத்த வாரம் பயணம்



எலிசபெத் மகாராணியின் விசேட அழைப்பினை ஏற்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் 7 ஆம் திகதி லண்டனுக்கான உத்தி யோக பூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளதாக அரச ஊடகமொன்று அறிவித்துள்ளது.

எதிர்வரும் 9 ஆம் திகதி லண்டனில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள "பொதுநலவாய தினம்" நிகழ்வுகளில் சிறப்பதிதியாகக் கலந்து கொள்ளும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அங்கு சிறப்புரை ஒன்றையும் ஆற்றவுள்ளதாகவும் அச்செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளது.

# மகிந்த தலைமையில் புதிய கூட்டமைப்பு

## வாசு முன்நின்று முயற்சி

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷவின் ஆதரவுடன் பொதுத் தேர்தலில் களமிறங்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மறுக்குமாகவிருந்தால் நாங்கள் புதியதொரு கூட்டமைப்பை உருவாக்கி முன்னாள் ஜனாதிபதியை முன்னிறுத்தி பொதுத் தேர்தலில் குதிப்போம் என நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்திருக்கின்றார்.

ஐக்கிய தேசியக் கட்சியைத் தோற்கடிப்பதற்கு இந்தக் கூட்டமைப்பு முன்னின்று செயற்படும். ஐ.ம.சு. கூட்டமைப்பு பொதுத் தேர்தலில் வெற்றி பெற வேண்டுமானால் நிச்சயமாக மகிந்த ராஜபக்ஷவின் ஆதரவு தேவை. இதனைக் கருத்திற்கொண்டு சுதந்திரக் கட்சி செயற்பட வேண்டும் எனவும் வாசுதேவ வலியுறுத்தியிருக்கின்றார்.



# திருமலை அரச அதிபர் திடீர் ஓய்வு

ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் திஸ்ஸ ரஞ்சித் த சில்வா திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் பதவிலியிருந்து ஓய்வு பெறவுள்ளதாக அறிவித்துள்ளார்.

இதன்படி நாளை இரண்டாம் திகதியிலிருந்து தாம் ஓய்வு பெறவுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபராக ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் திஸ்ஸ ரஞ்சித் த சில்வா கடந்த 2007ஆம் ஆண்டு ஓகஸ்ட் முதலாம் திகதி நியமிக்கப்பட்டார்.

இந்த நிலையில் அரச நிர்வாக அமைச்சின் அறிவித்த லுக்கு இணங்க பதவி விலகல் கடிதத்தை அமைச்சிற்கு அவர் அனுப்பி வைத்திருக்கிறார்.

# உள்ளக விசாரணை பற்றி நீதியமைச்சர் பேச முடியாது

## ராஜித கடும் சீற்றம்

(கொழும்பு)

யுத்தக் குற்றச்சாட்டு குறித்த உள்ளக விசாரணைகள் தொடர்பில் கருத்து வெளியிடுவதற்கு நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவுக்கு எந்த உரிமையும் இல்லை என்று அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவுக்கே இது தொடர்பில் கருத்து வெளியிடும் உரிமை உள்ளது என்றும் குறிப்பிட்டார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட அமைச்சரிடம் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

யுத்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அரசாங்கம் விசாரணை நடத்தாது என்று நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ கூறியுள்ளமை தொடர்பில் உங்கள் கருத்து என்னவென்று கேள்வி எழுப்பப்பட்டது. இதற்குப் பதிலளித்த அமைச்சர் ராஜித இதனைத் தெரிவித்தார்.

# பசில் மீது விசாரணை வாய்ப்புக்கள் அதிகம்

நிதி மோசடிகள் தொடர்பிலான விசாரணை பிரிவு ஆரம்பிக்கப்பட்டு 24 மணித்தியாலத்துக்குள் கடந்த அரசாங்கத்தில் இடம்பெற்றதாக கூறப்படும் பாரிய ஊழல் தொடர்பிலான மூன்று முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலஞ்ச, ஊழல் தடுப்பு குழுவின் ஊடாக இந்த முறைப்பாடுகள் இப்பிரிவிடம் முன்வைக்கப்பட்டுள்ளன.

கடந்த அரசாங்கத்தின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் இடம்பெற்றதாக கூறப்படும் ஊழல் மோசடி தொடர்பில், விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, வெளியான தகவல்களை வைத்து முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவிடம் விசாரணை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளதாக அரசாங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் சிங்கள ஊடகமொன்றிடம் தெரிவித்துள்ளார்.

# தீவிரவாதிகள் மீது காதல் மோகம்
# திருமணத்துக்கு சிரிய பெண்கள் முன்னிலை

## அவுஸ்ரேலிய வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவிப்பு


ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகளுடன் காதல் கொண்டு அவர்களைத் திருமணம் செய்து கொள்ள சிரியா செல்லும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளது.

இதுகுறித்து அவுஸ்திரேலிய வெளியுறவுத்துறை அமைச்சர் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் அவர் கூறியதாவது, சிரியா மற்றும் ஈராக் நாடுகளுக்கு காதல் சாகச பயணம் செய்ய வேண்டாம் என்றும் அங்கு சென்று ஜிகாதி மணமகள் ஆக வேண்டாம் எனவும் எச்சரிக்கிறோம்.

தற்போது சிரியாவுக்கு இளம் பெண்கள் செல்வது அதிகரித்து வருகிறது. ஏனெனில் இந்தப்பெணகள் மூளைச்சலவை செய்யப்பட்டு நண்பர்கள் மற்றும் குடும்பத்தினரை விட்டுப்பிரிக்கப்படுகிறார்கள்.

இதுவரை தீவிரவாத இயக்



கத்தில் சேர்வதற்கு அவுஸ்ரேலியாவில் இருந்து 110 இற்கும் மேற்பட்ட இளம் பெண்கள் செனறுள்ளனர்.

இவர்கள் அனைவரும் மாணவிகள் என்பது மிகவும் வருந்தத்தக்கது. மேலும் இவர்களின் செயல் குடும்பத்தினருக்கு தாமதமாகத்தான் தெரியவருகிறது.

இவர்களின் மரணம் என்பது தியாகம் இல்லை. இந்த முட்டாள்தனமான முடிவை நிறுத்த வேண்டும் எனஅவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ரஷ்ய எதிர்க்கட்சித்தலைவர் போரிஸ் இனம்தெரியாதவர்களால் சுட்டுக்கொலை

## அதிபர் புடின் கண்டனம்



ரஷ்யாஅதிபராக விளாடிமிர்புடின் உள்ளார். இவரது ஆட்சிக்கு எதிராக முக்கிய எதிர்க்கட்சி தலைவரான போரிஸ நெம்ஸ்ட்சோவ் (54) அடிக்கடி போராட்டங்களை நடத்தியும், அரசினை கடுமையாக விமர்சித்தும் வந்தார்.

இன்று புடின் ஆட்சிக்கு எதிராக மெகா போராட்டம் நடாத்திட முடிவு செய்திருந்தார். இந்நிலையில் நேற்று முன்தினம் தலைநகர் மொஸ்கோ நகரில் மத்திய பகுதியில் கிரம்ளின் மாளிகை அருகே காரில் சென்று கொண்டிருந்த போது அவரை பின் தொடர்ந்து வந்தஅடையாளம் தெரியாத நபர்களால், துப்பாக்கியால் நான்கு முறை சுட்டுக்கொலலப்பட்டார். இச்சம்பவம் குறித்த தகவலை அந்நாட்டு உள்துறை அமைச்சகம் உறுதி செய்துள்ளது. இச்சம்பவத்திற்கு அதிபர் விளாடிமிர் புடின் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அவரின் எதிரிகள் சிலர் கூலிப் படையை வைத்து கொலை செய்திருக்கலாம் என்றும் தனிக்கட்டுப்பாட்டின் கீழ் அவரது மரணம் குறித்து விசாரிக்கவும் உத்தர விட்டுள்ளார்.

# மிசௌரியில் துப்பாக்கிச் சூடு; 8பேர் பலி ஒருவர் படுகாயம்

அமெரிக்காவின் மிசௌரி மாகாணத்தின் தென் மத்தியப் பகுதியில் நடந்த பல துப்பாக்கிச சூடு சம்பவங்களில் எட்டுப் பேர் கொல்லப்பட்டுள்ளனர். ஒருவர் காயமடைந்துள்ளார்.

டைரோன் நகரிலும் அதற்கு அருகிலும் ஐந்து வீடுகளில் இந்த துப்பாக்கிச் சூடு நிகழ்ந்துள்ளதாக பொலிஸார் கண்டறிந்துள்ளது.

துப்பாக்கிச் சூடு நடந்த நான்கு இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகவும் இரண்டு இடங்களை பொலிஸார் தேடிவருவதாகவும் ஹுஸ்டன் ஹெரால்ட் செய்தித் தாள் தெரிவித்துள்ளது.

சம்பவம் நடந்த ஒரு இடத்தில், நிறுத்தப்பட்டிருந்த காருக்கு அருகில் சடலம் ஒன்றை அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர். அந்தச் சடலம் துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்டவருடையது என அவர்கள் கருதுகின்றனர்.

உள்ளூர் நேரப்படி இரவு 10.15 மணியளவில் டெக் ஸாஸ் கவுண்டியின் ஷெரீ:.ப் அலுவலகத்தை தொலைபேசி மூலம் அழைத்த ஒரு இளம் பெண், ஒரு வீட்டில் துப்பாக்கிச் சூடு சத்தம் கேட்டதாகக் கூறினார்.

அங்கு வந்த அதிகாரிகள், ஒரு வீட்டில் இரண்டு சடலங்களைக் கண்டறிந்தனர்.

மேலும் சோதனை நடாத்தியதில் வேறு நான்கு வீடுகளில் மேலும் ஆறு பேரின் சடலங்கள் கிடைத்ததுடன் ஒருவர் காயமடைந்து காணப்பட்டார்.

துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்டதாகக் கருதப்படும் நபரின் சடலம் அருகில் இருக்கும் ஷன்னோன் கவுண்டியில் ஒரு காரில் கண்டெடுக்கப்பட்டது.


டைரோனைச் சேர்ந்த 36 வயது நபரான அவர், தானே சுட்டுக் கொண்டதாகக் கருதப்படுகிறது.

காயமடைந்த நபர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

# அமெரிக்க எழுத்தாளர் டாக்காவில் கொலை

(டாக்கா)

தலைநகர் டாக்காவில் நடந்த வன்முறை தாக்குதலில் அமெரிக்காவை சேர்ந்த அவ்ஜித் ராய், கொல்லப்பட்டார். அவருடன் அவரது மனைவி ராபிடா அஹ்மத்திற்கு பலத்த காய மேற்பட்டது. இது குறித்து அமெரிக்க செய்தித்தொடர்பாளர் ஜென் சாகி கூறுகையில், இந்த வன்முறை அதிர்ச்சியளிக்கும் செயல் என்றும் மிருகத்தனமான மற்றும் கோழைத்தனமான செயல என்றும் தெரிவித்தார். இது குறித்து உரிய விசாரணை மேற்கொள்ளப்படும் என்றார்.




இந்தியாவில் அதிகரித்துவரும் பன்றிக்காய்ச்சலை கட்டுப்படுத்தும் முகமாக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் மணலால் செதுக்கப்பட்ட சிற்பம்...

# 17 ஆண்டுகளின் முன் காணாமற்போன பெண்குழந்தை குடும்பத்துடன் இணைவு



17 வருடங்களுக்கு முன் காணாமற்போன பெண்ஒருவர் கிடைக்கப்பெற்றுள்ளதுடன் கடத்தியவரும் கைது செய்யப்பட்ட சம்பவம் ஒன்று தென்னாபிரிக்காவில் இடம் பெற்றுள்ளது.

தென்னாபிரிக்காவில் உள்ள கேப்டவுனை சேர்ந்த தம்பதி செலஸ்ட்மோர்னே நர்ஸ். இவர்களுக்கு அங்குள்ள ஒரு தனியார் ஆஸ்பத்திரியில் 1997ஆம் ஆண்டு ஏப்ரலில் அதாவது 17 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு பெண் குழந்தை பிறந்தது.

அக்குழந்தைக்கு ஷெபானி என பெயரிட்டனர். பிறந்து 3 நாட்களே ஆன நிலையில் தாயின் அரவணைப்பில் அக்குழந்தை தூங்கிக்கொண்டிருந்தது. அப்போது அக்குழந்தையை யாரோ கடத்திச் சென்று விட்டனர். பல இடங்களில் தேடியும் அக்குழந்தையை கண்டுபிடிக்க முடியவில்லை.

இந்த நிலையில் லெஸ்ட்மேர்னே நர்ஸ் தம்பதிக்கு மேலும் 3 குழந்தைகள் பிறந்தன. இருந்தாலும் காணாமற் போன ஷெபானியின் பிறந்த நாளை அந்த தம்பதிகள் கொண்டாடி வந்தனர்.

இதற்கிடையே ஷெபானி படிக்கும் பள்ளியில் இவர்களது இளைய மகள் காசிடி நர்ஸ் படித்து வருகிறாள். அவர்களது இருவரின் முக சாயலும் அச்சு அசல் ஒன்றாகவே இருந்தது.

அதைப்பார்த்த மற்ற மாணவிகள் அதுகுறித்து ஆச்சரியமாக பேசினர். இது குறித்து விசாரித்த போது, ஷெபானி கடத்தப்பட்டு பல இடங்களில் வேறு பல பெண்களால் வளர்தது வருவது தெரிய வந்தது.

அதைத்தொடர்ந்து 17 வருடத்துக்கு பிறகு செலஸ்ட் தம்பதியினர் ஷெபானியை மீட்டனர். டி.என்.ஏ. சோதனை நடாத்தியதில் அவர் இவர்களது குழந்தை என உறுதி செயயப்பட்டது.

அது தொடர்பாக ஷெபானியை குழந்தையாக இருந்த போது கடத்தியதாக 55 வயது பெண் கைது செய்யப்பட்டாா.

உலகச் செய்திகள்

## இனப்பிரச்சினையை ...

இத்தனைக்கும் இதுதான் எங்களுக்குத் தேவையான தீர்வு என்று அரசாங்கத்திடம் ஒரு கோரிக்கையை இதுவரை இவர்கள் முன் வைக்கவில்லை.

பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துவதற்கு ஆதரவாக அரசாங்க தரப்பு முக்கியஸ்தர்கள் பலர் கருத்துத் தெரிவித்து வருகின்றார்கள். முழுமையான அரசியல் தீர்வை உடனடியாக அடைவது சாத்தியமில்லையா தலால் அரசியல் தீர்வு நடைமுறையின் ஆரம்ப கட்டமாகப் பதின்மூன்றாவது திருத்தத்தை ஏற்பதே யதார்த்த பூர்வமானது. பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று வடமாகாண முதலமைச்சர் அடிக்கடி கோரிக்கை விடுத்த போதிலும் உண்மையில் கூட்டமைப்பு அதை விரும்ப வில்லை. பதின்மூன்றாவது திருத்தத்தை ஏற்கமுடியாது என்று கூட்டமைப்புத் தலைவர்கள் சிலர் இப்போதும் கூறிவருகின்றனர். தேசிய அரசாங்கம் அமையும் பட்சத்தில் அரசாங்கம் ஆரம்ப நடவடிக்கையாகப் பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தத் தீர்மானிக்கக் கூடும் என்பதால் அதற்குச் சாதகமற்ற நிலையை உருவாக்குவதற்கான நகர்வுகளைக் கூட்ட மைப்பு இப்போது ஆரம்பித்திருக்கின்றது. வடமாகாண சபை நிறைவேற்றிய இன அழிப்புத் தீர்மானம், வடமாகாண முதல்மைசசர் அடிக்கடி வெளியிடும் அரச எதிர்ப்பு அறிக்கைகள், மாவை சேனாதிராசாவின் சாத்வீகப் போராட்டம் பற்றிய பேச்சு, பிரயோசனமற்ற தீர்வு எதையும் கூட்டமைப்பு ஏற்றுக் கொள்ளாது என்ற சம்பந்தனின் அறிவிப்பு எல்லாமே பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்குச் சாதகமற்ற சூழ்நிலையைத் தோற்றுவிப்பனவாக உள்ளன. அதாவது தேசிய அரசாங்கம் அமைவதற்கு முன்னதாகவே அரசாங்கத்தைச் சீண்டுவனவாக உள்ளன.எந்தப் பிரச்சினையும் தீர்வதற்கு இடமளிக்காத வகையில் செயற்படுவதும் பிரச்சினைகளைக் காட்டியே தங்கள் அரசியல் பதவிகளைக் காப்பாற்றிக் கொள்ளும் வகையில் ஆவேசப் பேச்சுக்கள் மூலம் மக்களை உணர்ச்சிவசப்படுத்துவதுமே தமிழ்த் தலைவர்களின் அரசியலாக இருக்கின்றது. இவர்கள் ஒரு போதும் தீர்வுத்திட்டத்தை முன்வைக்கப் போவதில்லை தீர்வுக்கு ஆதரவளிக்கப் போவதுமில்லை. இவர்களில் தொடர்ந்து நம்பிக்கை ்வைப்பது தமிழ் மக்கள் தொடர்ச்சியாகப் பிரச்சினைக்கு மத்தியில் வாழ்வதாக அமைந்துவிடும். எனவே தமிழ் மக்கள் புதிதாகச் சிந்திக்க வேண்டும். நடைமுறைச் சாத்தியமான வழிகளில் பிரச்சினைகளைத தீர்த்து வைப்பதில் அக்கறை உள்ள தலைமையை நோக்கி அணிதிரள வேண்டும்.

# அதிஉச்சப் பயனைப்பெறும் வகையில் நலத்திட்டங்கள் செயற்படுத்தப்பட வேண்டும்

## வடமாகாணசபை உறுப்பினர் தவநாதன் தெரிவிப்பு



மக்களின் வாழ்வாதார மேம்பாடு கருதி நடைமுறைப்படுத்தப்படுகின்ற அனைத்து மக்கள் நலத்திட்டங்களும் அதியுச்சப் பயனைப் பெறும் வகையில் செயற்படுத்தப்பட வேண்டும் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை. தவநாதன் தெரிவித்துள்ளார்.

வெள்ளியன்று கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற வட மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சின் ஒரு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டிலிருந்து 6 மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு வருமானத்தை ஈட்டிக்கொள்ளும் வகையில் கதிரைகள்,சமையல் பாத்திரங்கள் உள்ளிட்ட பொருட்களையும்,25 பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்களும் வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்

மீள் குடியேற்றத்தின் பின்னான காலங்களில் அதிகளவான வாழ்வாதார உதவிகள் மக்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது இருந்த போதும் அதிலிருந்து மக்கள் முழுமையான பயனைப்பெறுக்கொள்ளவில்லை. மக்களுக்கு அந்த நேரத்தில் காணப்பட்ட பல்வேறு நெருக்கடிகள் காரணமாக வழங்கப்பட்ட வாழ்வாதார உதவிகளிலிருந்து முழுமையான பயனைப் பெற்றுக் கொள்ள முடியாது போய்விட்டது. எனவே தற்போது வழங்கப்படுகின்ற மக்களின் வாழ்வாதாரத் திட்டங்களில் இருந்து அவர்கள் அதியுச்ச பயனைப் பெற்றுக்கொள்ளும் வகையில் அரசியல் தரப்புகள், அதிகாரிகள் என அனைவரும் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். எனக்குறிப்பிட்டார்.

அமைப்புகளுக்கு கிடைக்கின்ற வருமானத்தை பெற்றுக் கொள்ளும் வகையிலான உதவித திட்டங்களை சிறந்த முறையில் பயன்படுத்தி வழங்கப்படுகின்ற நோக்கத்தை நிறைவு செய்து கொள்ளவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

வட மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களப் பணிப்பாளர் பெலிசியான் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வட மாகாண மீன் பிடி, போக்குவரத்து கிராமிய அபிவிருத்தி அமைச்சர் டெனீஸ்வரன், கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன், மாகாண சபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை, கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் சிவபாலன்,கிளிநொச்சி மேலதிக அரச அதிபர் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

### விருப்பு...

எதிர்வரும் பொதுத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திர கட்சி வெற்றி பெற வேண்டுமாயின், பிரதமர் கனவிலிருந்து அனைவரும் விடுபட வேண்டும் சில வேளைகளில் பொது தேர் தல் பிற்போடக் கூடிய சந்தர்ப்பம் காணப்படுவதாக அவர் குறிபபிட்டார்.

### செயற்படும்..

என்பதை ஐ.நா பிரதிநிதியிடம் எடுத்துக் கூறியதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

அதற்கு, உள்நாட்டு விசாரணைகள் அனைத்துலக தரத்துக்கேற்க நடத்தப்படும் என்று இலங்கை அரசாங்கம் வாக்குறுதி அளித்துள்ளதாக, ஜெப்ரி பெல்ட்மன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களிடம் தெரிவித்தார்.

அத்துடன், விசாரணை மற்றும் ஏனைய விவகாரங்களில், புதிய அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட ஐ.நா விரும்புவதாகவும், அவர் குறிப்பிட்டார்.

வடக்கின் காணிப் பிரச்சினைகள், மற்றும் போரினால் இடம்பெயர்ந்தவர்கள் விவகாரம் என்பன குறித்தும், ஐ.நா பிரதிநிதியிடம் எடுதத்துக் கூறியதாகவும், சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்று அதிகாலை கொழும்பு வந்த, ஜெப்ரி பெல்ட்மன் நேற்றுக் காலை பிரதி வெளிவிவகார அமைச்சர் அஜித் பெரேராவையும், பிற்பகலில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

வரும் 3ஆம் திகதிவரை இலங்கையில் தங்கியிருக்கும் ஜெப்ரி பெல்ட்மன், பல்வேறு அமைச்சர்கள் மற்றும் பிரதிநிதிகளை சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

அத்துடன், நாளை யாழ்ப்பாணம் செல்லவும் அவர் திட்டமிட்டுள்ளார்.

### ஈ.பி.டி.பி...

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், வன்முறைகளுக்கூடாக மக்களுக்கு ஒருபோதும் எதையும் பெற்றுக் கொடுக்க முடியாது. ஆனால் இந்தக் கைங்கரியங்களிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றது.

அதுமட்டுமன்றி சூடேற்றும், உசுப்பேற்றும் அரசியலையும் தமது சுயலாபங்களுக்காக முன்னெடுப்பது மட்டுமன்றி பொய்த்தனமான அரசியலையும் முன்னெடுத்து வருகின்றனர்.

ஆனால், நாம் உண்மையானதும் நேர்மையானதும் மக்களுக்கானதுமான அரசியலையே நோக்காகக் கொண்டு செயற்பட்டு வருகின்றோம். எனத் தெரிவித்த அவர்,

இதனிடையே தற்போதைய அரசியல் நிலைப்பாடு தொடர்பாகவும் செயலாளர் நாயகம் தெளிவுபடுத்தினார்.

இதன்போது செயற்பாட்டாளர்கள் கருத்துத் தெரிவிக்கும் போது தமிழ் அரசியல் தலைவர்களுள் உண்மையான, நேர்மையான தனித்துவமான தலைவராக டக்ளஸ் தேவானந்தா விளங்கி வருகின்றார்.

1995 ஆம் ஆண்டு முதல் குடாநாட்டு மக்களுடன் ஒன்றிணைந்து மக்களின் மேம்பாட்டுக்காக இற்றைவரை உழைத்து வருகின்றார்.

அதுமட்டுமன்றி நெருக்கடியான கால கட்டங்களில் படைத்தரப்பினரின் முகாம்களில் அவர்களால் தடுத்து வைக்கப்பட்டிருந்த பல இளைஞர்களை விடுவித்த பெருமகனாகவும் டக்ளஸ் தேவானந்தா விளங்கி வருகின்றார் என்றும் சுட்டிக்காட்டினர்.

இதன்போது ஈ.பி.டி.பியின் நல்லூர் பிரதேச இணைப்பாளர் ரவீந்திரன், நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் கணேஸ் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# நெல்லியடியில் அகப்பட்டன திருட்டுச் சைக்கிள்கள்

(கரணவாய்)

நெல்லியடியிலுள்ள சைக்கிள் திருத்தகம் ஒன்றிலிருந்து திருட்டு சைக்கிள்களை கொடிகாமம் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது.

நெல்லியடி விக்னேஸ்வரா வீதியில் சமுர்த்தி அலுவலகத்திற்கு முண்பாக உள்ள சைக்கிள் திருத்தகம் ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 10 சைக்கிள்களை கொடிகாமம் பொலிஸார் மீட்டுள்ளனர். அத்துடன் திருத்தகத்தின் உரிமையாளரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை 6மணியளவில் பொலிஸாரினால் 5 சைக்கிள்கள் மீட்கப்பட்டதாகவும், பின்னர் 9 மணியளவில் மீண்டும் 5 சைக்கிள்கள் கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (18)

# கைதடி வளர்மதியில் இலவச கண்பரிசோதனை

(கைதடி)

கைதடி வளர்மதி சனசமூக நிலையத்தில் இலவச கண்பரிசோதனையும் இலவச மூக்குக்கண்ணாடிவழங்கலும் இன்று இடம் பெறவுள்ளது.

காலை 8மணிமுதல் இச்சேவை கைதடி லயன் கு.மகேந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளதுடன் இதில் கண்பரிசோதனை மேற்கொள்ள விரும்புவோரை கலந்து கொண்டு பயன்பெறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (08)

# தீர்த்தக்கேணி திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் ஸ்ரீகண்ணாரை அம்மன்பதி அருள்மிகு ஸ்ரீஇராஜேஸ்வரி அம்பாள் தீர்த்தக்கேணி திறப்பு விழாவும் கௌரவிப்பும் நாளை இடம்பெறவுள்ளது.

மாலை 5 மணிக்கு சிவஸ்ரீதிருபவானந்த குருக்கள் தலைமையில் இடம் பெறும் இத்திறப்புவிழாவிற்கு வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார்.

இதன்போது தீர்த்தக்கேணியினை அமைத்துக்கொடுத்த முத்துக்குமார் பத்மநாதன் கௌரவிக்கப்படவுள்ளார். (08)

# சீன நீர்மூழ்கிகள் வர மீளவும் இடமளியோம்

## பீஜிங்கில் மங்கள தெரிவிப்பு

சீன நீர்மூழ்கிகள் கடந்த ஆண்டைப் போல மீண்டும் கொழும்புத் துறைமுகத்துக்கு வருகை தருவதற்கு அரசாங்கம் அனுமதிக்காது என வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

சீனாவுக்கு இரண்டு நாள் பயணத்தை மேற்கொண்ட வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, சீன பிரதமர் லி கிகியாங், சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யி ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார்.

நேற்று பீஜிங்கில் செய்தியாளர்களைச் சந்தித்த அவரிடம், முன்னைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவைப் போல, சீன நீர்மூழ்கிகள் இலங்கை துறைமுகத்தை அணுக புதிய அரசாங்கம் அனுமதிக்குமா என்று கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளித்த வெளிவிவகார அமைச்சர்,

ஜப்பானியப் பிரதமர் இலங்கைக்கு பயணம் மேற்கொண்டிருந்த நாளில், சீன நீர்மூழ்கிகள் கொழும்புத் துறைமுகத்தை அடைய வழிவகுத்த சூழல் என்னவென்று எனக்கு உண்மையிலேயே தெரியாது.

ஆனால் நாம் அத்தகைய சம்பவங்கள், எமது பதவிக் காலத்தில் எந்தத் தரப்பில் இருந்தும் நிகழாது என்பதை உறுதிப்படுத்துவோம்.

புதிய அரசாங்கத்தின் வெளிவிவகாரக் கொள்கை மையத்துக்கு மீண்டும் நகர்த்தப்படும். அதன் மூலம் இன்னும் கூடுதலான நடுநிலை நிலைப்பாடு ஏற்படுத்தப்படும்.

நடுநிலைக்குத் திரும்புதல் என்பது, ராஜபக்சவினால் சீனாவுடன் ஏற்படுத்தப்பட்ட நெருக்கமான உறவை நீர்த்துப் போகச்செய்வதல்ல.

நடுநிலைக்குத் திரும்புவதால் சீனாவுடன் இலங்கை கொண்டுள்ள உறவுகளை எந்த வகையிலும் பாதிக்காது.

அவர்கள் அந்த இடத்திலேயே இருப்பார்கள். உலகின் மற்ற நாடுகளைப் போலவே, சீனாவுடனான உறவுகளைப் பலப்படுத்தவும் நாம் முயற்சிப்போம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### ஆகஸ்ட்..

மைப் பரிசில் பரீட்சையின்போது மாணவர்களுக்கு ஒரு வினா பத்திரத்தை மாத்திரம் வழங்குவதற்கு தேசிய கல்வி ஆணைக்குழு யோசனை முன்வைத்திருந்தது.

எனினும் பழைய முறைமைக்கு அமைய இம்முறை பரீட்சையை நடத்துவதற்கு, பின்னர் பரிந்துரை செய்யப்பட்டதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்காக விண்ணப்பிப்பதற்கு வழங்கப்பட்டிருந்த கால அவகாசம் நிறைவடைந்துள்ளது.

இதேவேளை, கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் செயன்முறைப் பரீட்சை மார்ச் 6ஆம் திகதி நடைபெறவுள்ளது.

### மூலோபாய...

நடாத்திய பேச்சின் போது, பிரதமர் லி கெகியாங் மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்தச் சந்திப்பில் மேலும் கருத்து வெளியிட்ட சீனப்பிரதமர்

சீனாவின் முதலீட்டுக்கு உகந்த சூழலை இலங்கை ஏற்படுத்தும் என நம்பிக்கை கொண்டுள்ளோம்.

இருநாடுகளுக்கும் இடையிலான மூலோபாய ஒத்துழைப்பை ஆழப்படுத்துவதற்கு இலங்கையுடன் இணைந்து பணியாற்ற சீனா விருப்பம் கொண்டுள்ளது.

அத்துடன், சீனாவின் முதலீடுகளுக்கு உகந்த சூழலை இலங்கை ஏற்படுத்தும் என்றும் சீனப்பிரதமர் நம்பிக்கை வெளியிட்டுள்ளதாக, சீனத் தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது.

### இந்திய...

பட்டிருந்தது.

இந்திய வெளிவிவ்கார அமைசசுக்கான மொத்த நிதி ஒதுக்கீட்டில் 61 வீதம், வெளிநாடுகளுக்கான பொருளாதார தொழிலநுட்ப ஒத்துழைப்புத் திட்டங்களுக்கே ஒதுக்கப்பட்டுள்ளது.

அதிகபட்சமாக பூட்டானுக்கு, 6160.20 கோடி ரூபாவும், ஆப்கானிஸ்தானுக்கு, 676 கோடி ரூபாவும், இலங்கைக்கு 500 கோடி ரூபாவும், மாலைதீவுக்கு 183 கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

### இரண்டு...

இருவரையும் சரமாரியாக வெட்டிப் படுகாயப்படுத்திவிட்டுத் தப்பிச்சென்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. படுகாயமடைந்த இருவரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கப்பட்டனர். விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (11)

# அனைவரும் ஒத்துழைத்தால் வழமைக்குத் திரும்பலாம்

## அமைச்சர் சுவாமிநாதன் தெரிவிப்பு

(மானிப்பாய்)

இடம் பெயர்ந்த மக்களின் துன்பங்களை நான் நன்கு உணர்ந்துள்ளேன். ஆனாலும் எடுத்தமாத்திரத்தில் எல்லாவற்றையும் நிறைவேற்றிவிட முடியாது. அப்படி எதிர்பார்க்கவும் முடியாது. அனைவரும் ஒத்துழைத்தால் படிப்படியாக நாம் வழமைக்கு திரும்பலாம்.

- இவ்வாறு தெரிவித்தார் புனர்வாழ்வு மீள்குடியேற்றம் மற்றும் மத விவகார அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன். அமைச்சரை வரவேற்றுக் கௌரவிக்கும் நிகழ்வு மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் நேற்று பிற்பகல் கலாநிதி செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் மேலும் தெரிவித்தவை வருமாறு:- வலி. வடக்குப் பகுதியில் ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பு உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்து விரைவில் விடுவிக்கப்பட்டு, மக்கள் அங்கு மீளக் குடியேற்றப்படுவார்கள். புதிய அரசாங்கம் பதவியேற்றபின் படிப்படியாக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. எனவே உடனடியாக எல்லாவற்றையும் நிறைவேற்றிவிடமுடியாது. அப்படி எதிர்பார்க்கவும் முடியாது. எனவே படிப்படியாக அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்றார்.

## 11 வருடங்களின் பின்னர் குறைந்தது பண வீக்கம்

(கொழும்பு)

இலங்கையின் பெப்ரவரி மாத பணவீக்கம், 11 ஆண்டுகளில் மிகக் குறைந்த அளவை எட்டியுள்ளதாக சிறிலங்காவின் அதிகாரபூர்வ தகவல்கள் கூறுகின்றன.

புதிய அரசாங்கம் பதவியேற்ற பின்னர், அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் குறைத்துள்ளதையடுத்தே, பணவீக்கம் கணிசமாக குறைந்துள்ளது.

இலங்கையின் பணவீக்கத்தை அளவிடும் பிரதான சுட்டியான, கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் படி, பெப்ரவரி மாத பணவீக்கம் 2.6 வீதமாக குறைந்திருக்கிறது.

கடந்த ஜனவரி மாத பணவீக்கம் 3.2 வீதமாக இருந்தது. இது பெப்ரவரி மாதத்தில், 0.6 வீதத்தினால் குறைந்திருக்கிறது. கடந்த ஆண்டில் இதே காலப்பகுதியில் பணவீக்கம் 4.2 வீதமாக காணப்பட்டது. இது 2004ஆம் ஆண்டுக்குப் பின்னர், ஆகக் குறைந்த் பணவீக்க நிலையாகும்.

## மாணவனைத்தாக்கிய வெளி நபரால் சர்ச்சை

முல்லைத்தீவு துணுக்காய் வலயப் பாடசாலையொன்றில் பாடசாலை நேரத்தில் பாடசாலைக்குள் புகுந்த வெளிநபர் ஒருவர் மாணவர் ஒருவரை தாக்கிய சம்பவம் நிகழ்ந்துள்ளது. ஆசிரியர்கள் தடுத்தபோதும் மாணவரை தாக்கிய நபர் மீது பொலிசார் தகுந்த நடவடிக்கையெடுக்கவில்லையென பெற்றோரும் கிராமமக்களும் கவலைகொண்டுள்ளனர். இரு மாணவர்கள் பாடசாலையில் சண்டை பிடித்துள்ளனர். இதன்போது ஒருமாணவரின் பேரனார் பாடசாலைக்குள் புகுந்து தனது பேரனை தாக்கிய மற்றைய மாணவரை சரமாரியாகத் தாக்கியுள்ளார். க.பொ.த.சாதாரணத் தரத்தில் கல்வி பயிலும் மாணவரே தாக்கப்பட்டநிலையில் மல்லாவி ஆதார மருத்துவமனையில் நான்குநாட்கள் சிகிச்சைப்பெற்று மல்லாவிப் பொலிசிற்கும் முறைப்பாடு தெரிவித்துள்ளார். குறித்த சம்பவம் தொடர்பாக பாடசாலை முதல்வர் தகுந்த நடவடிக்கையெடுக்கவில்லை யெனவும் பெற்றோர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (160)

## அலரி மாளிகையை அழகுபடுத்திய பூந்தொட்டிகள் கம்பகாவிற்கு

(கொழும்பு)

அலரி மாளிகையைச் சுற்றியுள்ள சுவரை அழகுபடுத்தும் வகையில் அங்கு வைக்கப்பட்டிருந்த பூந்தொட்டிகள் அனைத்தும் அகற்றப்பட்டுள்ளன. 2013 ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டினை முன்னிட்டு, கடந்த ஆட்சியாளர்களினால் இந்த பூந்தொட்டிகள் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றை பராமரிப்பதற்கான செலவு அதிகமாக காணப்படுவதன் காரணத்தினாலேயே இவையனைத்தும் அகற்றபட்டதாக, பிரதமரின் ஊடகச் செயலாளர் தெரிவித்தார்.



அலரி மாளிகையிலிருந்து அகற்றப்பட்ட அனைத்து பூந்தொட்டிகளும் கம்பஹாவில் அமைந்துள்ள தாவரவியல் பூங்காவுக்கு அனுப்பிவைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். மேலும் இவற்றை பராமரிப்பதற்கு ஒரு நாளைக்கு மில்லியன் கணக்கான பணம் செலவிடப்படுவதாகவும் நாட்டின் மற்றும் நாட்டு மக்களின் நன்மை கருதியே இந்த நடவடிவக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவ்ம் அவர் தெரிவித்தார்.

## கச்சதீவு செல்ல முயன்ற கிளிநொச்சி இளைஞர் கைது

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய உற்சவம் நேற்று ஆரம்பமாகிய நிலையில், அனுமதியின்றி கச்சதீவு செல்ல முயன்ற கிளிநொச்சியைச் சேர்ந்த இலங்கை அகதி ஒருவர் தமிழ்நாடு காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருச்சியில் உள்ள அகதிகள் முகாம் ஒன்றில் தங்கியிருந்த 27 வயதான பிரசாந் என்ற இந்த இளைஞர், நேற்று கச்சதீவு செல்லும் பயணிகளுடன் புறப்பட முயன்ற போது, முறையான ஆவணங்களின்றி பயணம் செய்ய முயன்றதாக கூறி, கியூ பிரிவு காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

அதேவேளை, கச்சதீவுக்கு செல்ல முயன்ற ஊடகவியலாளர் ஒருவர் உள்ளிட்ட 23 பேர் மீது குற்ற வழக்குகள் இருப்பதால் அவர்கள் பயணம் செய்யவதற்கும் தமிழ்நாடு காவல் துறையினர் அனுமதி மறுத்து விட்டனர்.

## அஸ்வின் சுழலில் சுருண்டது இராஜ்ஜியம்



(பேர்த்)

அஸ்வினின் சுழல் ஜாலத்தின் மூலம் இந்திய அணி ஹட்ரிக் வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

11ஆவது உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் பி பிரிவுக்கான ஆட்டமொன்று அவுஸ்ரேலியாவின் பேர்த்தில் நேற்று நடைபெற்றது. இதில் ஐக்கிய அரபு இராஜ்ஜியம் மற்றும் இந்திய அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய ஐக்கிய அரபு இராஜ்ஜிய அணி இந்திய அணியின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் வேகமாக விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. குறிப்பாக, சுழற்பந்து வீச்சாளர் அஸ்வின் சுழல் ஜாலத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறியதுடன் விக்கெட்டுக்களையும் பறிகொடுத்தது. இதில் சிமன்ஸ் அன்வர் மட்டும் அணியின் மானம் காக்கப் போராடினார். இறுதியில் ஐக்கிய அரபு இராஜ்ஜிய அணி 31.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 102 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சிமன்ஸ் அன்வர் 49 பந்துகளை எதிர்கொண்டு ஆறு பவுண்டரிகள் அடங்கலாக 35, கே. கான் 14, குறுக் ஆட்டமிழக்காது 10 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அஸ்வின் 24 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு, ஜடேஜா, உமேஷ் யாதவ் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 103 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இந்திய அணி 18.5 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் ரோகித் சர்மா 55 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், பத்து பவுண்டரிகள் அடங்கலாக 57, ஹோலி 41 பந்துகளை எதிர்கொண்டு ஐந்து பவுண்டரிகள் அடங்கலாக 33 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றனர். போட்டியின் ஆட்டநாயகனாக அஸ்வின் தெரிவு செய்யப்பட்டார்.

பாகிஸ்தான், தென்னாபிரிக்க ஆகிய இரு அணிகளை அடுத்தடுத்து வீழ்த்திய இந்திய அணி ஐக்கிய அரபு இராஜ்ஜிய அணியையும் வீழ்த்தி ஹட்ரிக் வெற்றியைப் பதிவுசெய்துள்ளதுடன் காலிறுதிப் போட்டிக்கான வாய்ப்பையும் இறுதி செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வன்னிப் படைகளின் தளபதியாக மீளவும் பொனிபஸ் பெரேரா

வன்னிப்படைகளின் கட்டளைத் தளபதியாக இருந்து, அண்மையில் இடமாற்றம் செய்யப்பட்ட மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா மீண்டும் அந்தப் பதவியில் அமர்த்தப்பட்டுள்ளார்.

வன்னிப் படைகளின் தளபதியாக நியமிக்கப்பட்ட மேஜர் ஜெனரல் அமால் கருணாசேகர மீண்டும், இராணுவத் தலைமையத்தில் உள்ள இராணுவச் செயலகத்துக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இதேவேளை, இராணுவத்தின் நடவடிக்கைப் பணிப்பாளராக அண்மையில் நியமிக்கப்பட்ட பிரிகேடியர் டி.சி. கெப்பிட்டிவலன, உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில், அந்தப் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

பிரிகேடியர் கெப்பிட்டிவலன கொழும்பு நகர பாதுகாப்புக்குப் பொறுப் பாக இருந்த காலப்பகுதியில், நடந்த காணாமற்போனவர்கள், கடத்தப்பட்டவர்கள், மற்றும் படுகொலைகள் தொடர்பாக அரசாங்கம் சிறப்பு விசாரணை ஒன்றை ஆரம்பித்துள்ளது.

இந்த விசாரணைகளில் இவர் தலையீடு செய்யலாம் என்பதாலேயே, இராணுவ நடவடிக்கைப் பணிப்பாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

சண்டேலீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை விசாரணையிலும், பிரிகேடியர் கெப்பிட்டிவலனவின் பெயரும், குறிப்பிடப்பட்டுள்ளது.

இம்மாத நடுப்பகுதியில், இடம்பெற்ற இராணுவக் கட்டமைப்பு மாற்றங்களின் போது, முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவின் வேண்டுகோளின் பேரில், பிரிகேடியர் கெப்பிட்டிவலன, இராணுவ நடவடிக்கைப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

தற்போது அந்தப் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ள பிரிகேடியர் கெப்பிட்டிவலனவை காலாற்படை நடவடிக்கைப் பணிப்பாளராக நியமிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அதே வேளை, இராணுவ நடவடிக்கைப் பணிப்பாளராக பிரிகேடியர் ஜெயந்த குணரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

## சிங்க இறால்கள் சிக்கின

மாலைத்தீவுக்கு கடத்தப்பட இருந்த 737.3 கிலோ கிராம் எடை கொண்ட 37 சிங்கி இறால்களை நேற்று அதிகாலை மீட்கப்பட்டதாக சுங்கத் திணைக்கள ஊடகப் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்தார்.

இன்று அதிகாலை யூ.எல்.105 விமானத்தில் கொண்டு செல்லப்பட இருந்த 16 இலட்சத்து தொன்னூற்று ஐந்தாயிரத்து எழுநூற்று தொன்னூறு ரூபா பெறுமதியான 37 சிங்கி இறால்களை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக கொண்டு செல்வதற்கு முயற்சித்த போது அவை பறிமுதல் செய்யப்பட்டதுடன் அனுப்பிய நிறுவனத்திற்கு ஒரு இலட்சம் ரூபா அபாரதம் விதிக்கப்பட்டதாகவும் சுங்க ஊடகப் பேச்சாளர் லெஸ்லி காமினி மேலும் தெரிவித்தார்.

## சட்டவிரோத மின்சாரம் 3199 பேரிடம் தண்டம்

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் மின்சாரத்தைப் பெற்றுக் கொண்டோருக்கு எதிராக கடுமையான சட்டநடவ்டிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மின்சத்தி எரிசக்தி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய கடந்த வருடம் 3199 பேருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது. இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட சட்ட நடவடிக்கையின் மூலம் 212 மில்லியன் ரூபாய் அபராதம் அறவிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இப்பத்திரிகை இல: 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 மார்ச் 1ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.